முடியுடை

மூவேந்தர்

1931

# முடியுடை மூவேந்தர்

சென்னை,
தியாகராயர் கலாசாலைத் தமிழாசிரியர்
மா. இராஜமாணிக்கம்
இயற்றியது.

T. G. கோபால் பிள்ளை,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி,
1931 [விலை அணா 12.

V211,1
N31
61905

# முடியுடை மூவேந்தர்

சென்னை,
தியாகராயர் கலாசாலைத் தமிழாசிரியர்
மா. இராஜமாணிக்கம்
இயற்றியது.

T. G. கோபால் பிள்ளை,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] 1931 [விலை அணா 12.

44354

67905

# முகவுரை

இந்நூல், தமிழ்நாட்டில் பெருமையுடன் விளங்கிய சோழன்—குலோத்துங்கன், பாண்டியன்—நெடுஞ்செழியன், சேரன்—செங்குட்டுவன் என்னும் முடியுடை மூவேந்தர் வரலாறு கொண்டுள்ளது. இது புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களையும், கோபிநாதராயர் எழுதிய சோழவம்ச சரித்திரச் சுருக்கத்தையும் துணைகொண்டு எழுதப்பட்டதாகும். இதிலிருந்து அக்காலத்திய தமிழரது நாட்டு நிலை, அவர்தம் நாகரீகம், அரசியல் முறை, வீரம், கல்வி, செல்வம் முதலியவற்றை ஒருவாறு அறியலாம்.

ஆதலின், இனிய எளிய செந்தமிழ் நடை கொண்டு விளங்கும் இந்நூல் மாணவர் விரும்பிக் கற்றற் குரியதாகும்.

கல்விச்சாலைகளின் தமிழாசிரியர்களும், கல்வித் துறையினைப்பேணும் அரசியலாரும், இப் புத்தகத்தை ஆதரித்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் இதனைப் பாடமாக அமைத்து, என்னை இப்பணியில் ஊக்கமுறச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

நக்கீரனாகம்,
வண்ணை. } மா. இராஜமாணிக்கம்.

# சோழன் - குலோத்துங்கன்

# முடியுடை மூவேந்தர்

## 1. சோழநாடும் சோழரும்

தென் இந்தியாவில் மிகப் பழைய காலந் தொட்டே அரசியலில் சிறந்து விளங்கிய மன்னர் மூவர். அவர் சேரர், சோழர், பாண்டியர் எனப்படுவர். அவர்கள் மூவருக்கும் முடியுடை மூவேந்தர் என்றுபெயர். அவர்கள் ஆண்ட நாடுகள் முறையே சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. சேரநாடு, மேற்குக் கடற்கரைப் பிரதேசமும் சோய முத்தூர் நீலகிரி ஜில்லாக்களும் சேர்ந்த நிலப்பரப்பாகும். சோழநாடு கிழக்குக் கடற்கரைப் பிரதேசமும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களும் சேர்ந்தபூபாகமாகும். பாண்டிய நாடு, மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களும் அவற்றைச் சார்ந்த கடற்கரைப் பிரதேசமும் சேர்ந்த நிலப்பரப்பாகும்.

இம் மூன்று நாடுகளையும் ஆண்டுவந்த சேர சோழ பாண்டியர்சள் சில காலம் ஒற்றுமையோடும், சிலகாலம் பகைமை பூண்டும் இருந்துவந்தார்கள். ஒவ்வொரு மரபரசரும் அவரவர் காலத்தில் ஒவ்வொரு நகரைத் தமக்குத் தலைநகராகக் கொண்டிருந்தனர். ஒரு மரபரசன் வன்மை பெற்று இருந்தா

ஞகில், அவன் ஏனைய இரு மரபரசர்களையும் தனக் குட்படுத்திக் கொள்ளுதல் வழக்கமாக இருந்தது.

நமது கதை சோழநாட்டரசனைப் பற்றியது. சோழ நாடு வளம்பெற்ற நாடு. அந்நாட்டில் எங் குப் பார்த்தாலும் குளிர்ந்த சோலைகளைக் காண லாம். நறு மணம் வீசும் புட்பங்களை யுடைய பூஞ் சோலைகள் மிகுதியாக இருக்கும்; வற்ருது பாயும் காவிரியாற்றின் வெள்ளப் பெருக்கால் சோழ நாடு பெற்ற பெருமை பிறநாடுகள் பெற்றில. அந் நதி யின் பாய்ச்சலால் வயல்கள் செழித்து, நல் விளைச் சலை எப்பொழுதும் ஈந்து வருகின்றன. வேளாண் மைத் தொழில் சோழ நாட்டில் அதிகம் என்றே சொல்லலாம். தேன் ஒழுகும் பழவகைகள் சோழ நாட்டிலே உண்டாகின்றன.

சோழ நாட்டை இலக்குமி வாசஸ்தலமாகக் கொண்டிருந்தாள் என்னும்படி அந் நாட்டில் எல்லா வளங்களும் நிறைந்து பொலிந்தன. அந்த நாட்டில் சிறப்புற்ற சிவாலயங்களும், விஷ்ணுவால யங்களும் ஆயிரக்கணக்காக உண்டு. அவ்வாலயங் களில் ஆறுகால பூஜைகள் நடப்பது வழக்கம். ஒவ்வொரு பெரிய கோயிலுக்குச் சோழ மன்னர் அனேக நிலங்களை மானியமாக விட்டிருந்தனர். அக் கோயில்களில் பல அம்மன்னர்கள் கட்டியவை. தஞ்சாவூரில் உள்ள பிரகதீச்சுவரர் ஆலயம் சோழன் இராஜராஜனுல் கட்டப்பட்டது. திருவையாற்றில் உள்ள லோகமாதீச்சுவரம் என்ற ஆலயம் இராஜராஜ னின் மனைவியால் கட்டப்பட்டதாகும்.



இவர்கள் சைவ சமயத்தைத் தழுவியவர்கள். ஒவ்வொரு சோழ அரசனும் தன்னுற் கூடியவரை இறைபணி செய்து வந்தான் என்று தெரிகிறது. இம் மரபரசர்கள் கல்வியில் இணையற்று விளங்கி ஞர்கள். தமிழ் மொழியே இவர்களுக்குத் தாய் மொழி. தமிழ்ப் புலவர்களையும், கூத்தர்களையும், பாணர்களையும் பெரிதும் ஆதரித்து வந்தார்கள். யார் எதை விரும்பி வரினும், அதனைப் ‘ பெறுக ’ என்று கூறிக் கொடுத்து மகிழும் தன்மை வாய்ந் தவர்கள் இச் சோழர்கள். இவர்கள் அன்பு, அடக் கம், வாய்மை, வீரம், பிழை பொறுத்தல் முதலான உத்தம ராஜலட்சணங்களை உடையவர்கள்.

இச் சோழகுலத்தவர் குடிகளைக் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாத்து வந்தனர். குடிகளுக் குத் தங்களாலும், தங்கள் பரிசனத்தாலும், வேற் றரசராலும், கள்வராலும், விலங்குகளாலும் நேரக் கூடிய ஐவகைத் துன்பங்களையும் போக்கிவந்தனர். இந்நாட்டுக் குடிகள் சோழர்கள் காலத்தில் இன் பத்தை அறிவார்களே யல்லாமல் துன்பத்தை அறிந் திலர்.

முதலாம் குலோத்துங்கனைப் பற்றிய வர லாற்றை யறியுமுன் அவன் மரபினர் எத்தகைய அற்புதச் செயல்களைச் செய்து, தங்கள் அரசியல் பெருமையையும் தண்ணளியையும் உலகத்தாருக்குக் காட்டி மறைந்தனர் என்பதைப் பார்ப்போம்.

ஒரு காலத்தில் சோழநாட்டை மனுநீதி கண்ட சோழன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவ்

வரசன் நெடுங்காலம் பிள்ளை யில்லாது, தியாகேசப் பெருமானை வேண்டி வரங்கிடந்தான்; பின்னர், அவனுக்கு ஒரு குமாரன் பிறந்தான்; அம்மகனுக்கு வீதி விடங்கன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தான். பிள்ளை, பதினாறு வயதடைந்ததும், ஒரு நாள் அவன் அரண்மனையினின்றும் புறப்பட்டுத் தேரில் ஏறி, பரிவாரங்கள் சூழக் கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அவ்வாறு செல்லும் போது, ஒரு பசுவின் இளங்கன்று துள்ளி ஓடி, ஒருவர்க்கும் தெரியாமல் தேர்க்காலில் அகப்பட்டு இறந்தது. கன்றை இழந்த தாய்ப்பசு மிகத் துயர் அடைந்து, முகத்தில் கண்ணீர், தாரைதாரையாக வடிய, அன்பே உருவாகவந்த மனுநீதிச் சோழன் அரண்மனைக்குச் சென்று, அங்குக் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அசைத்து ஓசை உண்டாக்கியது.

அதுவரையும் கேட்டறியாத ஆராய்ச்சிமணி ஓசையை அன்று நூதனமாகக் கேட்டதும் மன்னவன் மயக்குற்று வீழ்ந்தான்; அமைச்சர் தேற்றத் தெளிந்தான்; நடந்ததை அறிந்தான்; தன் மைந்தனின் அசட்டைக்காகப் பெரிதும் வருந்தினன். அமைச்சர் அரசனுக்குப் பலவாறு ஆலோசனை கூறினர். அரசன் மன்னுயிரைத் தன்னுயிரே போல் எண்ணுபவனாதலால், அமைச்சர் கூற்றைப் பொருட்படுத்தாது, கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லும்படி ஓர் அமைச்சனை ஏவினன். அவ்வமைச்சன் அக் கொடும்பாவச் செயலைச் செய்ய இசையாது தற்கொலை செய்து கொண்டான்.



அது கேட்ட அரசன் உள்ளம் பதைத்து, தன் மகனைக் கன்று இறந்த இடத்திற் கிடத்தி, தானே அவன்மீது தேரைச் செலுத்திக்கொன்றான். பிறகு, அமைச்சன் தன்னால் இறந்ததால், அவன் பொருட்டுத் தான் தற்கொலை செய்துகொள்வதென்று அரசன் வாளை ஓங்கினன். அவ்வமயம் எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெருமான் அரசன் முன் தோன்றி, காட்சி யளித்து, இறந்த மைந்தனையும் கன்றையும் அமைச்சனையும் உயிர்பெற் றெழச்செய்தார்; அரசனை அவன் நீதிமுறைக்காகப் பாராட்டி மறைந்தார். இத்தகைய நீதி வழுவா மன்னவர் சோழ குலத்தவர்.

இன்னும், சிபிச் சக்ரவர்த்தி என்னும் வேறொரு சோழமன்னவன் தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஒரு புறவின் உயிரைக் காக்கும்பொருட்டு அதனைப் பின்தொடர்ந்து கொல்லவந்த பருந்திற்குத் தன் தசையைக் கழித்துக்கொடுத்துச் சொன்ன சொல் பிழையாமல் நீதி செலுத்தினன்.

இங்ஙனம், பல அரசர் நீதியை நிலை நாட்டித் தம் மரபாசர் செவ்வனே நடந்துகொள்ளுமாறு கற்பித்துச் சென்றனர், என்று நினைக்கவேண்டி இருக்கிறது. இத்தகைய அரசர்கள் பரம்பரையில் உதித்த நம் கதாநாயகனின் அரசியல் திறத்தினையும் போர்ச் செயல்களையும் குணாதிசயங்களையும், நாம் இனிக் கவனிப்போம்.

## 2. குலோத்துங்கன் பிறப்பும் வளர்ப்பும்

இம் மன்னனது வரலாற்றினை விளக்கமாகக் கூறத்தக்க ஆதாரங்கள் அதிகம் இல்லாமையால், நூல்களில் கூறப்படும் அளவில் ஆராய்ச்சி செய்து ஒருவாறு கூறவேண்டியதே. இராஜ ராஜ சோழன் என்பவன் கி. பி. 985-ல் சோழநாட்டு அரசனானான். அவனுக்குக் குந்தவை என்ற பெண்ணும், இராஜேந்திர சோழன் என்ற மைந்தனும் இருந்தார்கள். இராஜ ராஜன் குந்தவையைச் சாளுக்கிய மன்னனான விமலாதித்தன் என்பவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அத் தம்பதிகட்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அம்மகனுக்குச் சாளுக்கிய இராஜராஜன் என்று பெயர். இந்தச் சாளுக்கிய இராஜராஜன் தன் அம்மான் இராஜேந்திர சோழனின் மகளான அம்மங்காதேவி என்பாளை மணஞ்செய்து கொண்டான். இப்புதிய மணமக்களுக்குப் பிறந்தவனே நம் கதாநாயகன் முதலாம் குலோத்துங்கன்.

அவன் பிறந்த அன்று கதிரவன் தன் சுடு கிரணங்களை வெளியில் காட்டாது இளவெயில் பரப்பி இன்புற்றிருந்தான். இளங்காற்று இன்பமாய் வீசியது. சோழ குலத்தை விளக்கவந்த உத்தமன் பிறந்தான் என்ற செய்தியை உலகத்தோர்க்கு அறிவிக்கச் செல்வதேபோல் காற்று மெல்ல ஊசலாடிச் சென்றது. குழந்தை பிறந்த செய்தியைக் கேட்ட சோழ நாட்டுக் குடிகள் களிப்பு மிகுந்தவர்களாய்த் தங்கள் தங்கள் இல்லங்களைத் தூய்மைசெய்து, நன்னீராடி, இறைவனைத் தொழுது மங்கல கீதங்களைப் பாடிக்கொண்டிருந்தனர். இராஜேந்திர சோழன் தனக்குப் பேரன் பிறந்ததை எண்ணி, பெருமகிழ்ச்சியுற்று, ஆலயங்களில் விழா இயற்றி, அன்னதானம் வழங்கினான்.

குழந்தை பிறந்ததும் இராஜேந்திர சோழதேவன் மனைவி மகவை இரு கரங்களிலும் ஏந்தி, "இக்குழந்தை சந்திர குலோத்தமனாக இருக்கின்றனன்; சூரிய குலோத்தமனாகவும் இருக்கின்றனன். அரசலட்சணங்கள் இவனிடத்தில் நன்கு அமைந்துள்ளன. சோழ நாட்டிற்கு அரசகுமாரன் இல்லாததால் இவனே இனி வரப்போகும் அரசனாக இருக்கட்டும். இவனை நாம் சுவீகாரப் புத்திரனாக எடுத்துக்கொள்வோம். நமது குலோத்துங்கன் இவனே" என்று கூறி மகிழ்வொடு வளர்ப்பாளாயினள்.

குழந்தை செவ்வனே வளர்ந்து வந்தது. குலோத்துங்கனுக்கு வயது வளர வளர அறிவும் வளரத் தொடங்கியது. அவன் நல்ல சுபமுகூர்த்தத்தில் பள்ளியில் வைக்கப்பட்டான். கூரிய அறிவு வாய்ந்த அரசிளங் குமரன் எல்லாக் கலைகளையும் சிறு வயதிலேயே கற்றறிந்தான். பின்னர் அவன், அரசனுக்கு வேண்டிய கரியேற்றம், பரியேற்றம், ஆயுதப் பயிற்சி, மற்போர், வாட்போர் முதலிய பயிற்சிகளில் பயின்றான். இராஜேந்திர சோழனுக்குப் பின் குலோத்துங்கனே அரசனாவான் என்பதை உணர்ந்த

சோணாட்டுக் குடிகள் களிப்படைந்தார்கள். அத்தகைய பெரு வீரனைத் தங்கள் அரசனாகப்பெறுவது தாங்கள் செய்த பாக்கியம் என்றே அவர்கள் எண்ணினர்.

குலோத்துங்கன் பதினாறு வயதடைந்ததும் அரசியல் விஷயங்களைக் கற்கலானான். குடிகளை 'எங்ஙனம் ஆள்வது; அவர்கள் அன்பை எங்ஙனம் பெறுவது; குடிகளின் மனம் கோணாது எவ்வாறு அரசாள்வது' என்பன போன்ற மதிநுட்பம் அமைந்த விஷயங்களைக் கற்றறிந்தான். அவன், அரசனாக வருவதற்கு முன்னமே குடிகளைக் களிப்பித்து, அவர்கள் அன்பைப் பெற்றான். அவனுடைய குணாதிசயங்களைக்கண்டு இராஜேந்திர சோழனும் அவன் மனைவியும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர்.

---

## 3. முடிசூட்டல்

குலோத்துங்கன் அரசியல் துறைகளைக் கற்றறிந்ததும் இராஜேந்திர சோழன் தன் பேரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். பின்னர்க் குலோத்துங்கன் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டான். அவன் புறப்பட்ட அளவில் முடி மன்னர், பரிகளும் கரிகளும் பொற்குவியல்களும் அவனுக்குக் கொடுத்துச் சமாதானஞ் செய்து கொண்டனர். இவ்வாறு பலநாட்டு அரசரைத் தனக்குட்படுத்திக்கொண்டே குலோத்துங்கன் மேலும் மேலும் வேறு நாடுகளை நோக்கிச் சென்றான். அவ்வாறு செல்லுகையில், தன் பாட்டன் இராஜேந்திர சோழதேவன் நோயுற்று இறந்தான் என்பதைக் கேள்வியுற்றான். உடனே அவன் சோணாட்டிற்குத் திரும்பினான்.

அவன் நெடுந்தூரத்தில் இருந்து திரும்பி வர வேண்டியிருந்தது. அவன் வருவதற்குள் அரசன் இன்மையால் நாடு அல்லற் பட்டது.

அந் நிலையில் குலோத்துங்கன் திரும்பி வந்து பட்டத்தை ஏற்றுக்கொண்டான். அவனைப் பல அரசர்கள் திறை கொண்டுசென்று கண்டனர். மறையவர் அவன் முடிமீது முடிவைத்து ஆசீர் வதித்தனர். குலோத்துங்கன் முடிசூடிக்கொண்ட அளவில் இசையில் வல்லோர் இசை பயிலத் தொடங்கினர். கவிஞர் கவிபாடிப் பரிசில் பெற்று ஏகினர். அரசனிடம் திறைப்பொருள் வந்து கொண்டே யிருந்தது. நாடு செழித்து நன் மழை பெய்தது. சிவாலயங்களும்

விஷ்ணுவாலயங்களும் குறைவற விழாக்களைப் பெற்றன. மக்கள் மன அமைதியோடு வாழலாயினர். அரசன் குடிகட்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், வேற்றரசராலும், கள்வராலும், விலங்குகளாலும் நேரக்கூடிய ஐவகைத் துன்பந் துடைத்து இன்பத்தை புண்டாக்கினான். 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்ற வண்ணம் அந் நாட்டு மக்களும் அடக்கம், பொறை, உண்மை, அன்பு, கடவுள் வழிபாடு முதலான நற் குணங்களுக்கு உறைவிடமாயிருந்தனர். களவு, கொலை, பொய், பொறாமை முதலான துர்க்குணங்களை அவர்கள் கனவிலுங் கருதினாரில்லை. அதனால் அந் நாட்டில் யாதொரு துன்பத்திற்கும் இடம் இல்லாதிருந்தது. அரசன், புலவர் கவியிலும் இசையிலும் அரசியல் முறையிலும் மறையிலும் பொழுதை இன்பமாகக் கழித்து வந்தான்.

குலோத்துங்கனுக்கு இராஜேந்திர சோழன், அநபாய சோழன், அபயன், கரிகாலன், ஜயதரன் என்ற பல பெயர்கள் உண்டு. என்றாலும், நாம் அவனைக் குலோத்துங்கன் என்றே அழைப்போம். அவன் மூன்று பெண்களை மணம் புரிந்து கொண்டான். மதுராந்தகி, எழிசை வல்லபி, தியாகவல்லி என்பன அம்மனைவியரின் பெயர்கள். அவர்களில் மதுராந்தகி என்பவள் அவனது மாமன் மகள். அவன் உயிருடன் இருந்த வரையில் பட்ட மகிஷியாக இருந்தாள். அவளுக்குப் பின், அழகிலும் அறிவிலும் இணையில்லாத் தியாகவல்லி பட்டமகிஷி



யாயினள். எழிசை வல்லபி தான் இறக்கும் வரையில் இரண்டாம் மனைவியாகவே இருந்தாள். குலோத்துங்கன் தன் மனைவியரிடத்தில் வெகு அன்போடு நடந்து கொண்டான்; அவர்கள் மனம் நோகும் வண்ணம் எக் காரியமும் செய்யான்.

குலோத்துங்கனுக்கு மக்கள் எழுவர் உண்டாயினர். அவருள் மூத்தவன் விக்கிரம சோழன் என்பவன். அவனே குலோத்துங்கன் இறந்த பின்னர்ப் பட்டத்தைப் பெற்றவன். குலோத்துங்கனுக்கு அம்மங்கை என்று ஒரு பெண் இருந்தாள். அரசன் தன் மக்களை இளம்பருவ முதற்கொண்டு நன்னெறியிற் பழக்கினான். அவர்களும் ஊக்கத்தோடு அரசர்க்குரிய கலைகளை ஐயம் திரிபறக் கற்றுத் தேர்ந்து வீர சிங்கங்களைப் போல விளங்கினர். மக்களுடைய பேராற்றலைக்கண்டு தந்தையும் பெருமகிழ்ச்சியடைந்தான்.

## 4. நாடுகளைக் கைப்பற்றுதல்

குலோத்துங்கனுக்குப் பல நாடுகளைக் கைப்பற்றித் தன்னாட்சிக் குட்படுத்த வேண்டும் என்னும் பேரவா உண்டாயிற்று. அதனால், அவன் தன் அமைச்சரை நோக்கி, “அமைச்சர்களே! நான் பல அரசர்களைப் போரில் வென்று, அவர்களுடைய நாடுகளைக் கைப்பற்ற விரும்புகின்றேன். ஆதலால், எனக்கு ஒரு பெரிய சேனை வேண்டும். அதனை விரைவில் தயார் செய்க” எனப் பணித்தான்.

அமைச்சர் சோழ நாடெங்கும் பறைபறைவித்து ஆறு மாத காலத்திற்குள் லட்சக் கணக்கான போர் வீரரைச் சேர்த்தனர். அரச பக்தியும் தேச பக்தியும் கொண்ட இளைஞர்கள் தங்கள் அரசனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே தங்கள் கடமை என்று தீர்மானித்துச் சேனையிற் சேர்ந்தனர். பரிகளும் கரிகளும் சித்தமாயின; பலவகை ஆயுதங்கள் செய்பப்பட்டன. சேனைகள் தயாரான பின் அமைச்சர் அரசனை நோக்கி, “மன்னர் மன்ன! யாவும் தயாரித்து விட்டோம். போருக்குச் செல்ல வேண்டுவதுதான் தாமதம்” என்றனர்.

அரசன், “அமைச்சர்காள்! யான் நமது நால்வகைப் படைகளையும் பார்வையிட விரும்புகின்றேன். அவற்றை அணிவகுத்து முறைப்படி நிற்க வையுங்கள்,” என்றான். அமைச்சர் சென்று அரசன் கட்டளைப்படி செய்து முடித்தனர். மன்னன் தன் அரண்மனை மேன்மாடத்தில் ஏறி, தன்னைப்பின்பற்றி



வரப்போகும் நால்வகைப் படைகளைக்கண்டுகளித்து, “ஆ! இத்துணைச் சேனா வீரர்களையும் புரவிகளையும் களிறுகளையும் தேர்களையும் தயாரித்த நம் அமைச்சர் திறன் போற்றத் தகுந்ததே. இம்மகத்தான சேனை என் பின் வரின், என்னை எதிர்க்க வல்லவன் எவன் உளன்? என் எண்ணம் ஈடேறும்” என்பதாக எண்ணி மகிழ்ந்தான். அவன் தன் அமைச்சர்களை மிகவும் புகழ்ந்து பேசினான்.

நல்ல நாளில் காலக் கணிதன் அரசனைப் பணிந்து, “அரசே! தங்கள் வெற்றி வாழ்வதாக; தாங்கள் போர்மீது செல்ல இதுவே தக்க சமயம். இவ்வேளையில் தாங்கள் புறப்பட்டால், வெற்றி வீரராக மீளலாம். ஜெயலட்சுமி தங்கள் திருத்தோள்களில் இந்த லக்கினத்தில் அமர்ந்துள்ளாள்” என்றான்.

அது கேட்ட குலோத்துங்கன் மகிழ்வடைந்து, தன் குலதெய்வமான திரிபுரம் எரித்த விரிசடைப் பெம்மான் ஆலயத்திற்குச் சென்று, முறைப்படிப் பூசித்து வணங்கி, தன் மனைவியரிடத்து விடைபெற்றுப் போருக்கெழுந்தான். முரசங்கள் முழங்கின. சோழர் பெருந்தகை தனது பட்டத்துயானை மீது ஏறினான். வீரர்கள் வீர நடனம் புரிந்தனர். மறையவர் ஆசி கூறினர். சுமங்கலிகள் வாழ்த்தி மங்கல மொழிகளைக் கூறினார்கள். குடிகள், “எம்மரசன் - மன்னர் மன்னன் - சோழ குலோத்துங்கன் வெற்றி மாலை சூடி மீள்வானாக; ஈசன் எம்வேந்தற்குப் பக்கத்துணை யிருந்து பாதுகாப்பானாக; குலோத்துங்கன் நீடூழி வாழ்க” என்று கூறி மலர்களைத் தூவி

னர். மன்னனும் மனக்களிப்புடன் நால்வகைச் சேனையும் பின்வர, போர் மேற் சென்றான்.

முதன் முதலில் குலோத்துங்கன் வேங்கி நாட்டின்மீது படையெடுத்தான். அந் நாட்டினை விஜயாதித்தன் என்பவன் ஆண்டுவந்தான். விஜயாதித்தன் குலோத்துங்கனுக்குச் சிற்றப்பன் ஆவான். நியாயமாக வெங்கிநாடு குலோத்துங்கனுக்குப் பிதிரார்ச்சிதமாகச் சேரவேண்டியது. அதனை விஜயாதித்தன் அபகரித்துக்கொண்டான். அதனால், அவனைப் போரில் வென்று, வெங்கி நாட்டைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ள விரும்பியே குலோத்துங்கன் அந்நாட்டின்மீது படையெடுத்தான். விஜயாதித்தனுக்குக் குலோத்துங்கன், அண்ணன் புதல்வன் ஆவான். எனவே, குலோத்துங்கன் தன் சிற்றப்பனோடு போர்புரியச் சென்றான்.

குலோத்துங்கன் தன் மீது படையெடுத்து வருவதைக் கேள்வியுற்ற விஜயாதித்தன் பெரும் படை யொன்றைத் திரட்டினான். இரு திறத்தார் சேனைகளும் ஒன்றை யொன்று தாக்கின. போர் கடுமையாகவே காணப்பட்டது. இரு புறங்களிலும் வீரர்கள் பலர் மாண்டனர்; கரிகள் பல வெட்டுண்டன; பரிகள் பல சிதைவுண்டன. தேர்கள் அழிக்கப்பட்டன. குருதியாறு பெருக்கெடுத்து ஓடியது. அதிகம் அறைவானேன்? முடிவில், விஜயாதித்தன் குலோத்துங்கனிடம் சண்டையிட ஆற்றாயைப் பிழைத்தாற்போதும் என்று எண்ணி எங்கோ ஓடி ஒளித்தான். வெங்கி நாடு குலோத்துங்கன் ஆட்சிக்



குட்பட்டது. அவன் அதனைத் தனக்குப் பிரதிநிதியாக இருந்து ஆளும்படி, தன் இரண்டாம் புதல்வனை இராஜராஜன் என்போனை விட்டுச் சென்றான். சில காலம் இராஜ ராஜன் வெங்கி நாட்டை யாண்டான். அவனுக்குப் பின் அவன் தம்பியான வீர சோழன் என்பான் வெங்கிநாட்டையாள அனுப்பப்பட்டான். அவன் அந்நாட்டைக் கி. பி. 1078 வரையில் அரசாண்டான்.

இங்ஙனம், குலோத்துங்க மன்னவன் சோழ நாட்டுக் கதிபனாயிருந்து வெங்கி நாட்டையும் கைக்கொண்ட பின்னர், அவனுக்குச் சேனா பலம் அதிகரித்தது. ஆகவே, அவன் மீண்டும் பல நாடுகளைக் கைப்பற்ற விருப்பங் கொண்டான்.

அவன் சோழ நாட்டிற்கு அரசனானபோது அவனை வெல்லக் கருதி, குந்தள அரசனான விக்கிரமாதித்தன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வந்தான். எனினும் என்? கதிரவனுக்கு முன் மின்மினிப் பூச்சி எம்மாத்திரம்? விக்கிரமாதித்தன் தோல்வி யடைந்து திரும்பினான். அவன்மீது படையெடுத்துச் செல்ல, குலோத்துங்கன் விரும்பினான்; ஒரு பெரும் படையொடு புறப்பட்டான்; குந்தள நாட்டை யடைந்தான்; முதலில், வனவாசி என்ற ஊரைத்தாக்கினான். அவ்வூர் விக்கிரமாதித்தனுக்குச் சொந்தமானது.

குலோத்துங்கன் வனவாசியைத்தாக்கிய போது விக்கிரமாதித்தன் அங்கு இல்லை. அவனுக்குப் பிரதிநிதியாக இருந்து அரசாண்ட அவன் தம்பி ஜயசிங்

கன் என்பவன் இருந்தான். அவன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன்; சிறந்த போர் வீரன்; விற்போரிலும் மற்போரிலும் கைதேர்ந்தவன். அவன் பெரும் படை யொன்றினைத் திரட்டிக் குலோத்துங்கனுடன் போர் செய்ய எழுந்தான். இரண்டு படைகளும் ஒன்றோடொன்று போர் செய்தன. குலோத்துங்கன் சேனை ஜயசிங்கன் சேனையைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகம் என்னலாம். எனினும் ஜயசிங்கன் மனத்தளர்வு அடையாமல் ஊக்கம் காட்டிப் போர் புரிந்தான். முடிவில் அவன் தோற்றுப் புறங்காட்டியோட நேர்ந்தது. அவன் சேனை நாலா பக்கங்களிலும் சிதறி யோடியது. வனவாசி குலோத்துங்கன் கைப்பட்டது.

அதனுடன் அமையாது, குலோத்துங்கன் குந்தள நாட்டை எதிர்த்தான். அதனைத்தான் விக்கிரமாதித்தன் அரசாண்டு வந்தான். குலோத்துங்கன் தன் நாட்டை வெல்லக் கருதி வந்ததை யறிந்த விக்கிரமாதித்தனுக்குச் சினம் பொங்கியது. முன் ஒரு முறை அவன் குலோத்துங்கனால் தோற்கடிக்கப்பட்டவன். அவன் தம்பி ஆண்டு கொண்டிருந்த வனவாசியைக் கைப்பற்றி ஜயசிங்கனையும் குலோத்துங்கன் தோற்கடித்தான் அல்லவா? அத்துடன் நில்லாது மேலும் சோழமன்னன் தன் மீதே படையெடுத்து வந்தான் என்பதை யறிந்ததும் அவன் மனநிலை கூறற்கியலா விதம் துன்பமுற்றது. அவன் கடுஞ்சினங்கொண்ட வேங்கை போலச் சீறினான்; அரியாசனத்தினின்றும் எழுந்தான்; தன்



சேனாதிபதியைப் பார்த்தான். அவன் குறிப்பை யுணர்ந்த சேனைத் தலைவன் சேனாவீரரைப்பார்த்தனன். வீரர் தம் படைகளைப் பார்த்தனர். சற்று நேரத்திற்குள் குந்தள நாடெங்கும் வீரர்கள் கூடி விட்டனர். போர் முரசம் முழங்கியது. நால்வகைப் படைகளும் ஆரவாரித்தன.

விக்கிரமாதித்தன் கையில் வாளேந்தி யானைமீது பாய்ந்தேறினான். நால்வகைப் படைகளும் அவனைச் சூழ்ந்தன. சிறிது போழ்தில் விக்கிரமாதித்தன் குலோத்துங்கனை எதிர்த்தான். இருவர் படையும் ஒன்றை யொன்று தாக்கின. விக்கிரமாதித்தன் வாளேந்தி வீச் சொன்றுக்குப் பத்துப் பதினைந்து விதம் வீரர்களின் சிரங்களை வெட்டித் தள்ளினான். குலோத்துங்கனும் எதிரியின் சேனை வீரரையும் பரிகளையும் கரிகளையும் வெட்டிச் சாய்த்தான். அவன் ஏறியிருந்த யானை, பகைவர் கூட்டத்துள் பாய்ந்து சென்றது. அந்த யானை பகைவர் விட்ட அம்புகளைத் தன் அரசன்மீது விழாமல் துதிக்கையால் தடுத்தது. குந்தளர்சேனை சிறிது நேரத்தில் சிதற ஆரம்பித்தது. கரமிழந்தனர் பலர்; சிரமிழந்தனர் சிலர்; உயிர் விட்டனர் பலர்; பயம் என்றனர் பலர்; அபயம் என்றனர் சிலர்; பயந்தோடினர்சிலர்; பாய்ந்தோடினர் பலர். இவ்வாறு சிறிதுபோழ்தில் குந்தளர் சேனை சிதறியது. விக்கிரமாதித்தனும் குலோத்துங்கனுக்கு முன் நின்று போர் புரிய மாட்டானாய்ப் புறங்கொடுத்து ஓடினான். குலோத்துங்கன் ஓடும் பகைவனை விடாது துரத்தி, மணலூர் வழியாய்த்

துங்கபத்திரைக் கப்பால் விரட்டி யடித்தான். இச் சண்டையில் குந்தள நாட்டுத் தலைநகரான கலியாணபுரம் குலோத்துங்கன் வசமாயிற்று.

இங்ஙனம் சோழ நாட்டிற்கு வடக்கேயிருந்த நாடுகளைக் கைப்பற்றியானதும், குலோத்துங்கன் தென்னாடுகளை வெல்ல முயன்றான். முதலில் அவன் பாண்டிய மன்னரைத் தாக்கினான். பாண்டியர் என்று பன்மையிற் கூறியதென்னை? எனில், பாண்டிய நாட்டுத் தலைவன் ஒருவனும் அவனுக்கு உறவினராய்ச் சிற்றூர்களை யாண்டு வந்த பாண்டியரு மாவார்கள். அச்சண்டையில் ஒரு பாண்டியன் மடிந்தான். பாண்டியர்களுடைய சேனை சிதறடிக்கப்பட்டது. குலோத்துங்க சோழனே வெற்றி பெற்றான். அதனால் மன்னார் குடாக்கடலைச்சார்ந்த நாடும், பொதிய மலைச்சார்ந்த நாடும், கன்னியாகுமரியும், கோட்டாறும், குலோத்துங்கனுக்குச் சொந்தம் ஆயின. அவன் உடனே அந்நாட்டைச் சுற்றிலும் எல்லை வகுத்து ஆங்காங்கே தன் சேனைகளை நிறுத்தி, நாட்டைப் பத்திரப்படுத்திக் கொண்டான்.

பின்னர், குலோத்துங்கன் குடமலை நாட்டை எதிர்த்து, மலையாளிகளைத் தோற்கடித்து, அந்நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். விழிஞ்ஞத்திலும் சாலையிலும் தன் சேனைகளை நிறுத்திக் காந்தளூர்ச் சாலையில் சேரர்களின் மரக்கலங்களை இரண்டுமுறை யழித்து மீண்டான்.



இவ்வாறு குலோத்துங்கன் சென்றவிடங்களில் எல்லாம் வெற்றி மாலை சூடி, தன்னால் இயன்றவரையில், பல நாடுகளைக் கைப்பற்றிய பின்னர்த் தன் நாட்டை நோக்கித் திரும்பினான். அரசன் வெற்றி கொண்டு மீண்டு வருவதை யுணர்ந்த சோணாட்டுக் குடிகள் மனமகிழ்ந்து நாட்டை அலங்கரித்தனர். எங்கும் தோரணங்களைக் கட்டி, 'எம்மரசே! வருக; மன்னர் பெருமானே! வருக; சோழ மன்னவா! வருக; உபய குலங்களை விளக்க வந்த உபயகுலோத்துங்கனே! வருக; என்று எழுதிய திரைச்சீலைகளைத் தெருக்கள் தோறும் கட்டினர். குலோத்துங்கன் சேனையோடு நகருட் புகுந்தான். மங்கல வாத்தியங்கள் முழங்கின. அந்தணர் ஆசி கூறினர். அரசமாதர் ஆலஞ் சுற்றினர். கற்புடைய மங்கையர் மங்கலம் பாடினர். குலோத்துங்கன் உள்ளத்தில் மகிழ்ச்சி யடைந்து, தன் சிங்காசனத்தில் அமர்ந்தான்.

---

## ப். பரிவேட்டையாடல்

குலோத்துங்கன் நாட்டை அமைதியோடு அரசாள்கையில் ஒருநாள் பாலாற்றங் கரையிலே பரிவேட்டையாட விருப்பங் கொண்டான். அவன் அமைச்சரை அழைத்து, தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அமைச்சர் முரசறைவோனுக்கு அறிவித்தனர். அவன் யானையின் பிடரியில் முரசத்தை வைத்து, அரசனது விருப்பத்தை முரசறைந்து அம்மாநகரத்தார்க்கு அறிவித்தனன். நால்வகைப் படைகளும் ஒன்று சேர்ந்தன. சங்கங்களும் பேரிகைகளும் முழங்கின. கணிதநூல் வல்லார் தெரிந்துரைத்த நல்லோரையில் படைகள் நான்கும் திரண்டெழுந்தன. புலவர்களும் அந்தணர்களும் பரிசில் பெற்று அரசனை வாழ்த்தினர். கவி வல்லார் கனக தானம் பெற்றனர். சோதிட நூலார் சுவர்ண தானம் பெற்றனர். அரசன் அம்பலத்தரசன் திருவருளைத் துணையாகக்கொண்டு களிற்றின்மேல் ஏறினான்.

அவன்மீது வெண் கொற்றக்குடை கவிக்கப்பட்டது. பக்கங்களில் கவரி வீசப்பட்டது. வலம்புரிச் சங்கங்கள் ஒலித்தன. பலவகை வாத்தியங்கள் ஆர்த்தன. குலோத்துங்கனைச் சூழ்ந்து வரும் சிற்றரசர்கள் எல்லோரும் ஜயகோஷம் செய்தனர். அநேக அரசர்களுடைய தேவிமார் ஆடையாபரணங்களை ஏந்த, அரசனுடன் தானும் ஆனை நடத்தும் உரிமை பெற்ற இராச பத்தினியான தியாகவல்லியானவள் அணிகளுக்கும் ஆடைகளுக்கும், அழகு கொடுக்க அவற்றை அணிந்தாள். அரசின் சூழ, தானும் ஒரு பிடியானையின்மீது ஏறினாள். யாவரும் நகரத்தைவிட்டுப் புறப்பட்டனர்.

அக்காட்சியைக் கண்ட குடிகள் களிப்பெய்தினர். மேகங்கள்மீது மேகங்கள் முழங்குவதுபோல யானைகள்மீது முரசங்கள் முழங்கின. அரசன் பொன்னிவள நாட்டின் காட்சிகளைக் கண்டுகொண்டே சென்றான். செழிப்பான வயல்களைக் கண்டான். பொன்னியாற்றின் பெருமையோடுமென்றனை பொருந்திய நீரைக் கரைகோலித் தடுத்தலால் உண்டாகும் ஓசையும், ஏர் உழுகின்ற உழவருடைய கூட்டத்தினது பேரொலியும், உழத்தியர் குரவையின் ஒலிப்பும், 'வயல்கள் வாழ்க' என்று சொல்லி நெல் மணிகளை விதைப்பாருடைய முழக்கமும் ஒன்று சேர்ந்து மேகத்தினது ஓசையுடனே மாறுகொண்டு ஆர்த்தன. வண்டுகள் மின்னும் போன்ற வரியையுடைய செழிய தாமரைமலர்களில் இசை பாடிக்கொண்டிருந்தன. ஆமைகள் குழம்பாகிய கரிய சேற்றில் தூங்கிக் கொண்டிருந்தன. சங்குகள் ஆழமாகிய நீரையுடைய கழனிகளில் எல்லாம் முத்துக்களை உயிர்த்தன. களி மயில்கள் தேன்வழிந்தோடுகின்ற மலர்களையுடைய சோலைகளில் ஆடிக்கொண்டிருந்தன.

இக் காட்சிகளையெல்லாம் அரசன் கண்டுணர்ந்து மேலும் செல்லாநின்றான். தென்றற் காற்று 'அரசே! வழி நடந்து நீ இளைத்தாய் போலும்;

உன் கவலையை யான் தீர்ப்பேன்' என்று கூறுவது போல இனிய ஓசையோடு வீசியது. 'எம் அரசே! வருக; பொன்னி நாடனே! வருக; உனது செங்கோல் வன்மையால் யாம் களிப்புடன் வாழ்கின்றோம். பொன்னிவள நாட்டின் காட்சியைக் கண்டு மகிழ்வாய்' என்று கூறுவது போலக் கோகிலங்கள் கூவின.

இங்ஙனம் வளப்பம் மிகுந்த சோணாட்டின் ஈடும் எடுப்பும் அற்ற இயற்கை யழகினைத் தன் இருகண்களாலும் கண்டு களித்தவனாய் மன்னன் கச்சி நகர் எல்லையை அடைந்தான்; பொற் கோபுரங்களால் பொலிந்து தோன்றும் கச்சிப்பதியைக் கண்ணுற் கண்டனன். அவ் வழகிய பதியுள் அரசன் தன் பரிவாரங்களுடன் நுழைந்தான். அந் நகர மாடங்களின் மீதுள்ள கொடிகள், வருகின்ற அரசனையும் படைகளையும் 'வருக வருக' என்று அழைப்பது போலக் காற்றில் அசைந்துகொண் டிருந்தன. கச்சித் திருப்பதியில் இசைபயில் சாலைகளும் நறுமலர்ச் சோலைகளும், மங்கையர் விரும்பி பாடும் வாவிகளும் குமரர் வாளாட்டம்ஆடும் வெளியிடங்களும், ஆவணங்களும் மிகுதியாக இருந்தன.

நகரக் காட்சியைக் கண்டு ஆனந்தித்து அரசன் செல்லுகையில், உயர்ந்த மாடங்களில் இருந்து பெண்கள் பாடும் பாட்டுக்களின் இனிய ஓசை அரசன் காதுகளைத் துளைத்துச் சென்றன. அரசன் சற்று அப்பாற் செல்கையில் நாடகம் நடிக்கின்ற நடனசாலைகளைக் கண்டு மகிழ்ந்தான்.



குலோத்துங்க மன்னன் தம் நகரத்தில் வந்துள்ளான் என்பதை அறிந்த ஆடவர்களும் பெண்களும் தங்களை நன்றாக அலங்கரித்துக் கொண்டு அவன் எதிரிற் சென்று, "எம்மரசே! வருக; எங்கள் மன்னர் மன்ன! வருக; நின் கொற்றம் வாழ்வதாக" என்று கூறி வாழ்த்தினார்கள். அரசன் அகமிக மகிழ்ந்து, கச்சித் திருநகரின் தென்குட திசையிலே கட்டப்பட்ட சித்திர மண்டபத்தின் முத்துப்பந்தரில் தங்கினான்.

வெண்குடை அரசனுக்கு நிழல்செய்தது. வெண்சாமரை வீசப்பட்டது. அரசன் தியாகவல்லியோடு அரியாசனத்தின்மீதேறிக் கொலுவீற்றிருந்தான். அப்போது நாடகம் வல்லார் நாடகம்நடித்தனர். பாடல் வல்லார் பாடினர். நிருத்தம் வல்லார் நிருத்தம் செய்தனர். சூதரும் மாகதரும் புகழ்ந்து போற்றினர். மாதர் மங்கலம் பாடினர். வீணையும் யாழும் குழலும் வல்லார் பல் வேறு விதமாக அவ்வவ்வாச்சியங்களை வாசிய நின்றனர். தாளமும் சுருதியும் கெடா வண்ணம் பாணர்கள் பாடிப் பரிசில் பெற்றனர். பல அரசர்கள் அவனைச் சூழ்ந்து நின்றனர். வண்டை நகர் மன்னன் கருணாகரத் தொண்டைமான் கைகட்டி நின்றான். இத்தகைய அலங்காரத்துடன் குலோத்துங்கன் திருவோலக்கம் கொண்டிருந்தான்.

## 6. கலிங்க நாட்டின்மீது படையெடுத்தல்

சோழ மன்னவன் கொலு வீற்றிருக்கையில் வாயில் காப்போர் வந்து அரசனைப் பணிந்து, "திறைப் பொருளைக் கொடுக்கும்படி, எம்பெருமானே! பல நாட்டரசர்கள் வாயில் புறத்தே காத்திருக்கின்றனர்" என்றனர். அரசன், "அவர்களை விடுக" என்றனன். என்னலும், தென்னவர், வில்லவர், கூபகர், சாபகர், சேதிபர், யாதவர், கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், கரியர், கோசலர், கங்கர், கராளர், கலிந்தர், துமிந்தர், கடம்பர், துளும்பர், வங்கர், இலாடர், மராடர், விராடர், மயிந்தர், சயிந்தர், சிங்களர், வங்களர், சேகுணர், சேவணர், கொங்கணர், கொங்கர், குலுங்கர், சௌந்திபர், குச்சரர், கச்சியர், மாளுவர், மாகதர், மச்சர், மிலேச்சர், குத்தர், குலத்தர், வடக்கர், துருக்கர், குருக்கர், விபத்தர் முதலான சிற்றரசர் பலர் குலோத்துங்கன் அடிகளில் தம் முடிபட வணங்கி, "எம் பெரும! நீ எங்கட்கு அருள் செய்த நாடு நகரங்களின் பொருட்டாக இருத்தல் வேண்டும் திறைப் பொருளைக் கொணர்ந்தோம். இவை ஆரங்கள், இவை பொற்கலங்கள், இவை களிறுகள், இவை ஒட்டகங்கள், இரத்தினங்கள் இவை, மாணிக்கங்கள் இவை, விலைமதிக்கவொண்ணாத பதக்கங்கள் இவை" என்று இங்ஙனம் பல திறப்பட்ட பொருள்களை அரசன் முன் காட்டிக் கைகுவித்து நின்றனர்.



அப்போது அரசன் கணக்கரை நோக்கி, "இவர்கள் ஒழிய இன்னும் திறை கொடாதார் உளரோ?" என வினவினான். கணக்கர் முன் போந்து அரசனைப் பணிந்து, "பெரும! வடகலிங்கத்தரசனை சோடகங்கன் என்பவன் இரண்டு முறையாகத் திறை கொண்டு வந்திலன்" என்றனர். அவ்வார்த்தைகள் செவிப்படுதலும் மன்னவன் விழிகள் நெருப்புப் பொறிகளைக் கக்கின. உடல் வியர்த்தது. அவன் கடைப் புருவங்கள் நெற்றி முற்றச் சென்றன. கோப நகை நகைத்து, "அவ்வாறாயின், வடகலிங்கம் சென்று அவனைக் கொணர்மின்" என்று உரையினான்.

உடனே சேனைத் தலைவனான கருணாகரத் தொண்டைமான் "அடியேனுக்கு விடை தருக; அவனை இன்னே கொணர்வேன்" என்றான். அரசனும் நன்றென விடையளித்தான். அக்கணமே தொண்டைமான் நெற்றிப்பட்டம் அணிந்த யானையின்மீது பாய்ந்தான். சோழன் படை அவனைப் பின்தொடர்ந்தது. இரை தேடிச் செல்லும் பெரும் புலியைப் போலத் தொண்டைமான் வீரவேகத்தோடு கலிங்கநாட்டை நோக்கிச் சென்றான்.

சோழன் படை சென்ற வேகத்தால் எத்திசைகளும் அதிர்ந்தன. மலைகள் நிலை தடுமாறின. அப்படை பாலாறு, குசைத்தலை, பொன்முகரி, கொல்லி என்ற நான்கு ஆறுகளையும் கடந்து, பெண்ணையாற்றையும் கடந்து நடந்தது. அப்பால் வயலாறும், மண்ணாறும், குன்றியும் கடந்து, கிருட்டினை நதியும் பிற்படப்போனது. பேரா, கோதாவரி, பம்பா நதி,

கோதமை என்னும் நதிகளும் இப்பாலாக அப்பாற் சென்றது. சென்ற படை கலிங்க நாட்டிற்குள் புகுந்தது.

அப்படையில் இருந்த வீரர்கள் கலிங்க நாட்டைச் சேர்ந்த கிராமங்களிற் புகுந்து, கொள்ளை யடிக்க ஆரம்பித்தனர். அதனை யறிந்த பத்தினிப் பெண்டிர் பலர் தங்கள் இல்லங்களின் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு குழந்தைகளோடு ஓட்டம் பிடித்தனர். சில வீரர் வீடுகளைக் கொளுத்தி விட்டனர். சிலர் வைக்கோல் போர்களைக் கொளுத்தினர். சிலர் ஆடுமாடுகளை மடக்கித் தம் வசமாக்கினர். சிலர் தம்மை எதிர்த்தாரை யமனுலகுக் கனுப்பினர். சில குடிகள் பகைவருக்குப் பயந்து ஓடினர். பகைவர் அவர்களை மடக்கி, ஆடையாபரணங்களைக் கவர்ந்துகொண்டனர். சில வீரர், "சோழ மன்னனுக்கு வெற்றி? சோழ மன்னர் பெருமானுக்கு வெற்றி?" என்று சொல்லிக்கொண்டு கூத்தாடினர். சிலர், "பிடி, அடி" என்றும், வேறு சிலர், "பிடி, குத்து, உதை" என்றும், சிலர், "பிடி, வெட்டு" என்றும் வானம் பிளக்கக் கூவினர்.

சோழ நாட்டு வீரர் தங்களால் கூடியவரையில் தங்கள் கோபத்தையும் வீரத்தையும் கலிங்கநாட்டின் மீதும் குடிகள்மீதும் திறம்படக் காட்டினர். அவ் வீரர்களின் கொண்டாட்டத்தில் குழந்தைகள் பல நசுங்கின. முதியோர் பலர் உயிர் துறந்தனர். சிறுவர் சிறுமியர் அல்லலுற்றனர். உறுப்பிழந்தார் பலர், கையிழந்தார் சிலர், சிரமிழந்தார் பலர், செவி



யிழந்தார் சிலர். கலிங்கநாடு அல்லோல கல்லோலப் பட்டது.

கலிங்க நாட்டுத் தலை நகருள் சோழநாட்டுச் சேனை புகுந்தது. நகர மாந்தர், "மதில்கள் இடிகின்றனவே; வீடுகள் எரிகின்றனவே; புகைத்திரள் பரவுகின்றதே; அந்தோ? அரண் எங்கே? நமக்குப் புகலிடம் எங்கே? இங்கு இவர்களை எதிர்க்கத் தக்க தலைவன் யாவன்? அதோ படைகள் மேலும் மேலும் வருகின்றனவே! நாம் மடிவது திண்ணம். ஐயோ! நம் அரசன் சோடகங்கன் குலோத்துங்க மன்னனுக்குக் கொடுக்கவேண்டிய திறைப் பொருளைக் கொடுக்காமல் தாமதித்ததால் அன்றோ இவ்வளவு நேரிட்டது! நாம் எத்தனை சொல்லியும் அரசன் கேட்டானில்லையே. அவன் இப் படைகளுக்குமுன் நின்று எவ்வாறு போர்செய்ய மாட்டுவான்? அபயன் விட்ட படைகள் வந்துவிட்டனவே. இனி, என் செய்வோம்? நம் விதி இருந்தவாறு என்னே! எதற்கும் அரசனிடம் சென்று முறையிடுவோம்" என்பதாகக் கூறிப் புலம்புவாராய், உரை குழற, உடல் பதற 'நான் முன், நீ முன்' என்று ஒருவர்க்கொருவர் முன்னே போய் சோடகங்கனது கொலு மண்டபத்தை யடைந்தார்கள்.

அடைந்த குடிகள் அரசனைப் பணிந்து "அரசே! அந்தோ! வந்துவிட்டதே குலோத்துங்கன் படை. எம் இறைவா! நீர் கட்டவேண்டிய திறைப்பொருளைக் கட்டியிருந்தால், இந் நாட்டுக்கு இக் கதி நேரிட்டிராது. ஐயோ! ஊர்கள் எரிகின்றன. பகைவர்

காட்டைக் கொள்ளையிடுகின்றனர். பெண்கள் பதறி அழுதுழுகின்றனர். இத் துன்பம் எங்களால் பொறுக்க முடியாது. நீர் தாம் எங்களைக் காப் பாற்ற வேண்டும்" என்று கூறி முறை யிட்டனர்.

---

## 7. அமைச்சன் அறிவுறுத்தல்

குடிகளின் முறையைக் கேட்ட சோடங்கன் மனம் கொதித்தது. கண்கள் சிவந்தன. அவன் கோபத்தால் பற்களை நறநற வென்று கடித்தான். மனக் கொதிப்படைந்த அவன், "குடிகளே! சோழன் - குலோத்துங்கன் வந்தானோ? அவனது தானை மட்டும் வந்ததோ?" என்று உசாவினான். குடிகள், "இறைவ! சோழ வேந்தன் வரவில்லை. அவனது மந்திரியும் தானைத்தலைவனும் வண்டை வேந்தனும் ஆன கருணாகரத் தொண்டைமான் காலாட் சேனைகளோடும் வந்துள்ளான். இவன் வந்தபோதே இக் கதிக்கு ஆளாகிறோம். இனி, சோழன் நேரே வந்திருந்தால் நாங்கள் இத்துணைநேரம் எமனுலகில் வசிப்போம்" என்றனர்.

குடிகள் கூறியவற்றைக் கேட்ட காவலன், வெரு வியினால் நெடுமூச்சு விட்டு வியர்த்து நோக்கி, "குடிகளே! நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை. திக்குகளில் உள்ள யானைகளைக் கொன்று அவற்றின் மதத்தைத் தன் மலர்மாலையில் மொய்த்துக்கொண்டிருக்கும் வண்டுகளுக்கு இரையாகப் போடுபவன் அக் குலோத்துங்கன். வெற்றிமிக்க அவ்வேந்தன் நேரே வந்திருப்பின், சிறிது அச்சப்படவேண்டியதே. அங்ஙனம் அவன் வாராமல், தன் சேனையை அனுப்பியுள்ளான். ஆதலால் வெற்றி நமக்கே உரியது: அவன் அனுப்பியுள்ள தண்டினுக்கும், அத் தண்டினைச் செலுத்தி வந்துள்ள கருணாகரத் தொண்டைமானுக்

கும் அஞ்சுபவன் யான் அல்லன். அச்சோழனுக்குக் கெட்டகாலம் வந்துற்றதாலேயே அவன் அறிவு மயங்கி, என்னை வெல்ல இச் சேனையை அனுப்பி யுள்ளான் என்று தெரிகின்றது. காடரணும், மலையரணும், கடல் அரணும் உடையது இக்கலிங்கர்பூமி என்பதை அத்தண்டு அறிந்திலது போலும்! நன்று! நன்று!! வரட்டும்: ஒரு கை பார்க்கின்றேன். இவ்வனபாயனுக்கு யான் எதற்காகத் திறை கட்டவேண்டும்? அவன் வன்மையைப் போர்முனையில் காட்டி என்னை வெல்லட்டும் பார்ப்போம். ஏ, குடிகளே! நீங்கள் செல்லலாம். யான் இதோ போருக்கு வருகின்றேன்" என்று வீரம் பேசினான்.

சோடகங்கன் கூறியவற்றை அமைச்சர் கேட்டனர். சோழனது வலிமையும் அவனது தானைத் தலைவனது தறுகண்மையும் சேனையின் பெருமையும் அவர்கள் நன்கு அறிந்தவர்கள். சோடகங்கனின் எளிமையை அவர்கள் அறியாதவர்களும் அல்லர். எனினும், அவனுக்கு அறிவுறுத்தப் பயந்தனர். என்றாலும், அவ்வமைச்சர்களில் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் உண்மையே பேசும் இயல்பும் உடைய எங்கராயன் என்ற அமைச்சன் ஒருவன் இருந்தான். அவன் தனக்கு உண்மை என்று தோன்றுவனவற்றைச் சிறிதும் அச்சம் இல்லாது எடுத்துக் கூறும் இயல்புடையவன். கேட்போன் அரசனாயினும் சரி, ஆண்டியாயினும் சரி, நியாயத்தையும் உண்மையையும் ஒளிக்காமற் கூறுவான். அவன் எவர்க்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவன்.



சோடகங்கன் சோழனது சேனையைக் கேவலமாகப் பேசியது அவன் மனதைப் புண்படுத்தியது. அதன் பெருமையை உணராது, அவன் அங்ஙனம் பிதற்றியது பிழை என்று அவன் எண்ணினான். அச்சேனையின் பெருமையை எடுத்துக்கூறி, அதனிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளும்படி அரசனுக்கு அறிவுறுத்த விரும்பினான்.

அதனால், அவன் தன் இருக்கையை விட்டு எழுந்து, "அரசன் கோபிப்பான் என்பதை உணர்ந்தும், உண்மையான அமைச்சன் தன் அறிவுக்கு எட்டியதைக்கூறியே தீருவன். ஆதலால், வேந்தே! யான் கூறுவதை அமைதியோடு கேளும். நீர் யான் பேசுவது பிழை என்று எண்ணி, என்னைத் தண்டித்தாலும் சரி, என் வார்த்தையை எடுத்துக் கொள்ளினும் சரியே, எனக்குத் தெரிந்தவற்றை யான் கூறுகின்றேன். நீர் சோழனது சேனையைக் கேவலமாகக் கருதிப் பற்பலவாறு பேசினீர். அவ்வாறு நீர் செய்தது தவறு. சோழன் வாராது தன் தானையை விடுத்தான் என்றீர். ஏனைய அரசர்களை வெல்ல அவன் விடுத்த தானையே போதுமே. அதன் பெருமையைக் கூறுவேன் கேளும்:

சோழன் இச்சேனையை யனுப்பிப் பாண்டியர் ஐவரையும் படாதபாடுபடுத்தினன்; பாண்டிய நாட்டைக் கைப்பற்றியது இத்தானையேயாகும். கடலைக் கடந்து விழிஞம் அழித்ததும், காந்தளூர்ச்சாலையைக் கைக்கொண்டதும் இத்தண்டு அல்லவா? முன்னொரு முறை இப்படையோடு போர் புரியும்படி

எழுந்த உமது படை பட்டபாட்டினை மறந்துவிட்டீரோ? கண்டன் நாயகரால் காக்கப்பட்டுவந்த நவிலை என்னும் ஊரில் ஆயிரம் யானைகளைக் கைப்பற்றியதும் இச்சேனையே. சோழனுடைய இத்தண்டினால் தங்கள் மண்டலங்களை இழந்த அரசர் எத்தனை பேர் என்று எண்ணி அறியமுடியுமோ? இத்தகைச் சிறப்பும் வீரமும் வாய்ந்த சோழன் சேனைமுன் உமது வாள் வலியும் தோள் வலியும் படை வலியும் எம்மாத்திரம்? இதனைத் தீர யோசித்து எக்காரியமும் செய்யத் துணியும். நான் கூறியவை உமக்குச் சலிப்பாகத் தோன்றி, என்னை நீர் இப்போது சீறிச்சினக்கினும், நானே அச்சேனையின் எதிரில் நிற்கும் போதாயினும் யான் கூறியவற்றை நினைப்பீர். ஏதோ எனக்குத் தெரிந்தவை சொன்னேன். இனி, உமது விருப்பம்போல் நடவும்" என்று கூறித் தன் ஆசனத்தமர்ந்தான்.

---

## ௮. கலிங்கப் போர்

அமைச்சன் கூறியவற்றைக் கேட்டுச் சினந்த அரசன் "அடா! அறிவற்ற அமைச்ச! என் வார்த்தைக்கு எதிர்வார்த்தை உரைப்பதென்றால் இமையோரும் என்னெதிரில் வரத்துணியார். நெடுநாட்களாகப் போர் பெறாமல் என் தோள்கள் தினவு தின்றுகொண்டிருப்பதை அறியாய். சிங்கத்தை அதன் குகையின்கண்ணே சென்று யானை எதிர்க்குமோ? அவ்வாறு எதிர்க்கச் சென்றால் அதன் அறிவீனத்தை என்னென்பது? அத்தன்மைபோலச் சோழனது சேனை என்னை என் நாட்டிலேயே எதிர்க்கவந்துள்ளது. அதற்கு அழிவுகாலம் குறுகிவிட்டது என்பது புலப்படவில்லையா? நீ இத்தனை நாட்களாக என்னுடன் பழகியிருந்தும், என்னுடைய தோள் வலியும் என்னுடைய வாள் வலியும் யாதும் அறியாதவன் போலப் பேசிவிட்டனை. இங்ஙனம் பேசியது நின் பேதைமை. நமது நாற்படையும் சோழன் விடவந்துள்ள தண்டின் எதிர் சென்று போர் தொடங்குக" என்றான்.

அரசன் சொல்லி வாய்மூடுமுன் கலிங்கப்படை களித்தெழுந்தது. காடுகள் பொடிபட்டன. முரசங்கள் ஆர்த்தன. அருவிகள் அனல் பட்டன. எள் விழுதற்கும் இடைவெளியின்றி ஒருவர் உடலில் ஒருவர் உடல்புக நெருங்கிச் சென்று, கலிங்கப்படை சோழன் படைமுன் நின்றது.

இரு திறத்துச் சேனைகளும் ஒன்றை யொன்று எதிர்த்தன. படை 'எடும், எடும்' என்ற ஓசையும்,

படை 'டிடிம், டிடிம்' என்ற ஒலியும் இருதிறத்தும் கடலோசை போன்றன. விற்களின் நாண்களைத் தெறிக்கின்ற ஓசை எண்டிசைகளும் வெடித்தாற் போன்றிருந்தது. உலகெலாம் செவிடு படுமாறு கரிகளும் பரிகளும் கூச்சலிட்டன. இருதிறப் படைகளும் எதிரெதிராக முட்டியது, கடலொடு கடல் எதிர்த்தாற் போன்றிருந்தது. பரியொடு பரி மலைவது அலையொடு அலை பொருதாற் போலும், கரியொடு கரி மலைவது மலையொடு மலை எதிர்த்தாற் போலும் இருந்தன. தேர்கள் ஒன்றை யொன்று மோதுதல் ஒரு மேகம் மற்றொரு மேகத்தை முட்டியது போல் இருந்தது. படை வீரர் படை வீரரோடு எதிர்த்துப் போர் புரிந்தனர். அவர்கள் தங்கள் ஈட்டிகளை நாலா பக்கங்களிலும் வீசி மலைந்தனர். அவர்கள் கையிற் கொண்ட சிலைகள் கோடையிடிபோல் இடித்தன ஒவ்வொரு வில்லினின்றும் அம்பு மழை பெய்தது. பெய்யவே, குருதியாறு பெருகியது. அந்நதி சிரங்களையும் கரங்களையும் கரிகளையும் பரிகளையும் அவற்றைத் தின்ன வந்த நரிகளையும் இழுத்துச்சென்றது. அரசர்களுடைய கொற்றக்குடைகள் நுரைகள்போல ஆற்றில் மிதந்தன. வெட்டுண்ட யானைகளின் உடற்கூறுகள் அந்நதியின் இருபுறமும் அடுக்கியிருந்த காட்சி, ஆற்றின் இரு கரைகள் போன்றிருந்தது.

பகைவர் வில்லில் கணையைத் தொடுப்பதைக் கண்டதும் கையில் அம்பில்லாத வீரர்கள் தங்கள் மார்பில் தைத்துள்ள பாணங்களைப்பற்றி எடுத்துச்



சிலையில் தொடுத்தெய்வர். கரிகள் வீரரை எதிர்க்கும். கால்கள் அறப்புண்ட வீரர்கள் அக்கால்களைக் கரிகள்மீது வீசி எறிவர். குதிரைகள் வீரரை மார்பிலே உதைத்துக்கொல்லும். வீரரில் சிலர் அங்ஙனம் தம்மை புதைக்க வரும் பரிகளின் தலையைத் துணித்து, அதனை ஈட்டியில் நாட்டிக் கூத்தாடுவர்.

இங்ஙனம், இருதிறப்படைகளும் இளைக்காமல் அமர் செய்யும்போது விரைவில் போரை முடித்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணிய கருணாகரத் தொண்டைமான் தன் யானையை முன்னே செலுத்தினன். அவன் படையும் முன்னே பாய்ந்து சென்றது. அவ்வளவில் பகைவீரர் வெட்டுண்டனர். யானைகள் துணிக்கப்பட்டன; குதிரைகள் பிளக்கப்பட்டன; தேர்கள் முறிக்கப்பட்டன. கலிங்கர் சேனை நிலை தளர்ந்தது. வீரர்கள் முதுகு காட்டி ஓடினர். "இப்படை, தெய்வத்தன்மை வாய்ந்ததோ, மாயையோ, அன்றி மறலியோ, ஊழியின் இறுதிக் காலமோ" என்று அலறியவர்களாய்ப் பகைவர் நாற்றிசைகளிலும் ஓட ஆரம்பித்தனர்.

கருணாகரத் தொண்டைமான் போர்க்களத்தில் ஆவேசங் கொண்டவனைப் போன்று பகைவர் சேனையைச் சின்னபின்ன மாக்கினன். போர் விரைவில் முற்றுப்பெற்றது. கலிங்கர் தோற்று ஓடினர். அநேக கரிகளும், பரிகளும், தேர்களும் நவநிதிக் குவியல்களும் சோழன் படை வீரர் கைப்பட்டன. இவற்றை யெல்லாம் கைக்கொண்டபின், தொண்டைமான் கலிங்கதேயத் தரசனைத் தேடிப் பிடித்துவர

வீரனை ஏவினன். கலிங்கத்தரசன் தன் சேனை அடியோடு சிதறி யோடியதைக் கண்டதும், அச்சம் அடைந்து, போர்க்களத்தினின்றும் ஓடி, காட்டில் மறைந்தான். ஆனால், அபயன் வீரர் அவனைப் பிடிக்காது விடுவரோ? அவன் அடிச்சுவடும் பெறாது, வரையும் வனமும் துருவித்தேடி முடிவில் ஒரு மலைக் குகையில் இருக்கக் கண்டனர்; உடனே அவனைக் கைப்பிடியாகப் பிடித்து மீண்டனர்.

அவ்வாறு அவர்கள் மீண்டு வருகையில், அவர்களை எதிர்ப்பட்ட கலிங்க வீரர் சிலர் தங்கள் உடல் முழுதும் சாம்பற் பூசி, அரையில் ஆடையின்றிக் கோவணத்தோடு நின்று, "வீரர்களே! நாங்கள் கலிங்கர் அல்லர்; பரதேசிகள். எங்களைத் துன்புறுத்தவேண்டா" என்று கூறித் தப்பியோடினர். சிலர் வில்லின் நாணை மடித்து முப்புரி நூலாகத் தரித்துக்கொண்டு, "ஐய! நாங்கள் இந்நாட்டினர் அல்லேம். கங்கை யாற்றிற் படிந்து மீள்கின்றேம்" என்று சொல்லிப் பிழைத்தனர். வேறு சிலர் இரத்தத்தில் தோய்ந்த கொடிச்சீலைகளை அரையில் உடுத்திக்கொண்டு, "ஐயன்மீர்! நாங்கள் புத்த மதத்தினர்; கலிங்கர் அல்லேம். எங்களைக் கொல்வதால் நீங்கள் ஒரு நன்மையையும் பெறமாட்டீர்கள்" என்று கூறித் தப்பினர். சில வீரர்கள் யானைகளின் கழுத்திற் கட்டியிருந்த மணிகளைக் கழற்றிக் கையில் பிடித்துக்கொண்டு சோழ வீரர்களை நோக்கி, "ஏ! வீரர்களே! நாங்கள் தெலுங்கப் பாணர்கள். அரசனைப் பாடிச் சன்மானம் பெற வந்துள்ளோம்"



என்று சொல்லிப் பிழைத்துப் போயினர். இவ்வாறு பொய்ம் மொழிகள் புகன்று உய்ந்தவர்களையும், கலிங்க நாட்டில் இருந்த முதியோர், குழவிகள் என்ற இவர்களையும் தவிர்த்து வேறு மக்கள் அந்நாட்டில் இல்லா தொழிந்தனர்.

இவ்வாறு, பலவகை அரண் காவலைப்பெற்ற வடகலிங்க நாட்டை அதம் செய்து, சேடகங்களையும் சிறைப்பிடித்து, வெற்றிமாலை புனைந்து, தொண்டைமான் சோழநாட்டை நோக்கித் திரும்பினான். சின்னாட்களில் குலோத்துங்கன் அரண்மனையை யடைந்தான்; தன் வெற்றியை விளங்க உரைத்தான். குலோத்துங்கன் தொண்டைமானைப் புகழ்ந்து, தனது சேனை வீரர்களுக்குப் பெருவிருந்து நடத்திப் பலவித பரிசுகள் தந்தான். இந்தக் கலிங்க வெற்றியைச் சிறப்பித்தே, அப்பொழுது அவ்வேந்தனது சமஸ்தான வித்வானாக இருந்த ஜயங்கொண்டார் என்பவர் கலிங்கத்துப்பரணி என்னும் ஓர் அரிய நூலை இயற்றினர்; அதை அவ்வரசன் அவையிலேயே அரங்கேற்றினர்.

## 9. பெரியபுராணம் இயற்றச்செய்தல்

சோழர் பெருமானான குலோத்துங்கன் ஒரு நாள் புலவர்களோடு அளவளாவிக்கொண்டிருக்கையில் அவர்களை நோக்கி, "புலவீர்! யான் இப்போது உங்களை மூன்று கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். நீவிர் அதற்குத் தக்க விடையளித்தல் வேண்டும்" என்றான். புலவர்கள் "அவ்வாறே யாகுக" என்றார்கள். அதன்மேல் அரசன், "புலவீர்! நிலத்தினும் பெரியது யாது? கடலினும் பெரியது எது? மலையினும் பெரியது யாது?" என்ற வினாக்களை வெளியிட்டான். உடனே, புலவர்கள் ஒன்றும் தோன்றாது விழித்தனர். அவர்கள், "என்ன! இவ்வினாக்கள் நூதனமாகக் காணப்படுகின்றன. இவற்றிற்குத் தக்கவாறு விடையளிப்பது எங்ஙனம்?" என்று நினைத்து, வாட்டம் அடைந்து வாளாவிருந்தனர். அரசனும் புலவர் விடை அறியமாட்டாது விழிப்பதைக் கண்டு மீண்டும் அவர்களைக் கேட்க மனமற்றவனாயிருந்தான்.

அக் காலத்தில் தொண்டைநாட்டுப் புலியூர்க் கோட்டத்துள் விளங்கும் குன்றத்தூர் என்னும் திவ்விய பதியில் அருண்மொழித்தேவர் என்ற ஒருவர் இருந்தார். அவர் வேளாண் மரபைச் சேர்ந்தவர்; சிறந்த புலவர். அவர் இளமையில் ஒரு நல்லாசிரியரை யடுத்துப் பைந்தமிழைப் பாங்குறப் படித்த பெரும்புலவர். அவருக்குச் சேக்கிழார் என்ற பெயரும் உண்டு அப்பெரியார் சோழன் விடுத்த கேள்விகளைக் கேள்வியுற்றார். உடனே அப் புலவர் பெருமான் அவ் வினாக்களுக்கு ஏற்ற விடையாக மூன்று குறட்பாக்களை முறையே எழுதி, அரசன் சமூகத்திற்கனுப்பினர். அவை வருமாறு:



1. நிலத்தினும் பெரியது யாது? என்ற வினாவிற்கு
விடை:-காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

2. கடலினும் பெரியது யாது? என்ற கேள்விக்கு
விடை:-பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

8. மலையினும் பெரியது யாது? என்ற வினாவிற்கு
விடை:-நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

இவ் விடைகளை வாசித்த சோழன் பெருமகிழ்ச்சி யடைந்தான். அவன் உடனே சிவிகை ஒன்றினை அனுப்பிச் சேக்கிழார் பெருமானை அழைத்துவரச் செய்தான். சேக்கிழாரும் அரசன் சமூகத்திற்கு வந்தார். அவர் வருகையை யறிந்த வேந்தன் அவரை முகமன் கூறி வரவேற்றுத் தனியாதனம் ஒன்றில் அமரச்செய்தான்.

பின்னர், சோழர்பெருமான் சேக்கிழார் பெருமானை நோக்கி, "பெரியீர்! என்னை ஒரு பொருளாக மதித்து எனது வேண்டுகோளுக்கு இணங்கி இவ்விடம் தாங்கள் வந்தது என் முன்னோர்செய்த பாக்கியமேயாகும். தாங்கள் இன்றுமுதல் எனது

அவையில் தலைமைப் புலவராகவும் அறிவு புகட்டும் அமைச்சராகவும் இருக்க விரும்புகின்றேன். எனது விருப்பத்தைப் பெரியீர் நிறைவேற்றவேண்டும்'' என்று அன்பு கனியப் பேசினன். சேக்கிழாரும் அவன் விருப்பத்திற்கு இணங்கினர். அரசன் அவருக்கு உத்தம சோழப் பல்லவராயர் என்ற பட்டப் பெயரைச் சூட்டினன். சேக்கிழார் அமைச்சராயிருந்து அரசியலை நன்கு கவனித்தார்; புலவராக இருந்து அவையை மகிழ்வித்தார்.

பலநாட்கள் சென்றன. பின்னர் ஒரு நாள் அவைப்புலவர்கள் சீவகசிந்தாமணி என்ற நூலைப் படித்து உரைவிரித்தனர். அந் நூல் சிந்தாமணி சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்ற ஐம்பெருங் காப்பியநூல்களில் ஒன்றாகும். புலவர்கள் உரை விரிக்க, அரசன் செய்யுட்களில் உள்ள சொற்சுவை பொருட்சுவைகளை யனுபவித்துக்கொண்டிருந்தான்.

மற்றொரு நாள் சோழன் சேக்கிழாரை நோக்கி ''பெருமானே! சீவகசிந்தாமணி என்னும் நூல் வெகு நேர்த்தியானதென்று எண்ணுகின்றேன். சொற்சுவை பொருட்சுவை அந்நூலில் செறிந்து கிடக்கின்றன. அந்நூலைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று உசாவினன். சேக்கிழார் காவலனைக் களிப்புற நோக்கி, ''புவியரசே! சிந்தாமணி சிறந்த காப்பியம் என்பதில் ஐயம் இல்லை. அது உம்மைப் போன்ற அரசனை சீவகனது வரலாற்றை விரித்துக் கூறுவதோர் நூல். உயிர்க்கு



உறுதியைப் பயக்கும் நூலல்லவே! அதனைப் பேரவாவுடன் கேட்டுத்தான் நீர் பெறும் பயன் என்ன? அரச லட்சணங்கள் ஒருங்கே அமையப் பெற்ற நீர், சீவகன் வரலாற்றை யறிந்து என்ன செய்யப் போகின்றீர்? உமக்கு ஒரு பயனும் அது விளைக்காது'' என்றார்.

அரசன் புலவர் கூற்றைக் கேட்டு, ''கவியரசே! உயிர்க்கு உறுதியைப் பயக்கும் நூல்தான் எது? அதனை உரைத்தருள்க'' என்று ஆவலோடு வேண்டினன். சேக்கிழார், ''அரச! சைவசமயக் குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தியார், நாயன்மார்கள் பெயர்களைத் தொகுத்துத் திருத்தொண்டத் தொகை என்ற பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார். அதனை முதல் நூலாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் அந்தாதியாகப் பாடியுள்ளார். அடியார்கள் பெருமையைக் கூறும் அத்தகைய அரிய நூல்களைப் படிக்கக் கேளும். ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்களும் உம்மை விட்டு அகலும். நீர் நற்பேற்றைப் பெறுவீர்'' என்று கூறி முடித்தார்.

அரசன், ''பெரியீர்! தாங்கள் கூறிய நாயன்மார்களின் பெருமை பொருந்திய வரலாற்றைத் தாங்களே கூறி யருளுக'' என்று வேண்டினன். சேக்கிழாரும் அதற்கு உடன்பட்டனர். அன்று முதல் சேக்கிழார் நாயன்மார்கள் பெருமையை அரசனுக்குக் கூறி அவனை மகிழ்வித்து வந்தார். அறுபத்துமூன்று பெரியார்களின் சரிதைகள் கூறி முடிக்

ததும், சோழன் புலவரை நோக்கி, "பெரியீர்! இந் நாயன்மார்களின் அருமை பெருமைகள் நன்றாகப் புலப்படுமாறு பெரியதோர் புராணமாகத் தாங்கள் பாடியருளல் வேண்டும்" என வேண்டினன். சேக்கிழாரும் அதற்கு உடன் பட்டனர்.

பின்னர்ச் சேக்கிழார் அரசனிடம் விடை பெற்று, தில்லைக்காடு நிறைந்து, முல்லைகள் மலரும் தில்லைச் சிதம்பரத்தை யடைந்தார்; அடைந்தவர் ஆலயத்துட் சென்று சபேசனைத் தரிசித்து, "நடன சிகாமணியே! நாயினும் கடைப்பட்ட அடியேனை அடியார் பெருமைகளை எடுத்துக் கூறும் பெரிய தோர் புராணம் பாடும்படி அரசன் பணித்துள்ளான். நீர் இவ்வமயம் எனக்கு உதவி புரியவேண்டும்" என்று வேண்டி நின்றனர்.

அப்போது உலகெலாம் என்னும் மங்கலச் சொல் சேக்கிழார் செவியிற் பட்டது. சேக்கிழார் மனமகிழ்ந்து, அச்சொல்லையே தொடக்கமாகக் கொண்டு, சின்னாட்களில் அறுபத்துமூன்று நாயன் மார்கள் வரலாற்றையும் பாடி முடித்து, அந்நூலுக் குப் பெரியபுராணம் என்ற பெயரையும் இட்டார்.

புராணம் பாடி முடிவு பெற்றதும் குலோத்துங் கன் தில்லையை யடைந்தான்; பெரிய புராணத்தைத் தன் இரு கண்களாலும் கண்டு மகிழ்ந்தான். பலகவி யரசர்களும் புவியரசர்களும் தில்லையில் கூடினர். அவர்கள் முன்னிலையில் சேக்கிழார் பெருமான் தாம் இயற்றிய பெரிய புராணத்தைப் பாடிக் காட்டி அரங் கேற்றினார். அரசன் சேக்கிழாரையும் பெரிய புரா



ணத்தையும் யானைமீதேற்றி நகர்வலம் செய்வித்தான். மேலும், அரசன் சேக்கிழாருக்குத் தொண்டர் சீர் பரவுவார் என்ற சிறப்புப் பெயரையும் தந்தான்.

பின்னர், அனைவரும் தில்லையை விட்டு நீங்கித் தத்தம் ஊருக்கேகினர். சோழன் சேக்கிழாரை யழைத்துக்கொண்டு தன் தலைமைப் பட்டினத்தை அடைந்தான்.

# 10. அரசியலும் குணாதிசயங்களும்

பல நாடுகளைத் தன் வசமாக்கிக் கொண்டதும் குலோத்துங்க மன்னன் நாட்டை ஒழுங்குபெறச் செய்ய ஆரம்பித்தான். தன் ஆட்சிக்குட்பட்ட நாட்டிற்கு எல்லை வகுத்து, பகைவர் எதிர்க்காதவாறு ஆங்காங்கே தன் படைகளை வைத்தான்; நாட்டை மண்டலங்களாகவும், சிறு நாடுகளாகவும், கோட்டங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பெற்று, ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே ஒரு சபை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தந்தப் பிரிவின் ஆட்சி, அச்சபையினராலேயே நடைபெறது. அரசன் நாட்டில் இன்றியமையாத பல சிவாலயங்களையும் விஷ்ணுவாலயங்களையும் கட்டுவித்தான். அவன் சிறந்த சிவபக்தன் ஆதலால், சிதம்பரத்தில் பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான். அதனால், அவன் பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன் எனப் பெயர் பெற்றான். ஆலயங்களுக்கு வேண்டிய நிலங்களை மானியமாக விட்டான். கோயில்களில் காலந்தவறாது பூசை, விழா முதலியன குறைவின்றி நடக்குமாறு ஏற்பாடு செய்தான். கோயில்கள் சம்பந்தமான வேலைகளையும் வருவாயையும் கவனிப்பதற்கு ஒரு கூட்டத்தாரை நியமித்தான்.

அவனது அரசியலில் பண்டைக் கால முறைப்படி அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதுவர், சாரணர் என்ற ஐம்பெருங் கூட்டத்தார் தலைமை பெற்றிருந்தார். அவர்களுக்கு ஐம்பெருங்குழு என்று பெயர். அவர்களே யல்லாமல் ஒவ்வொரு தொழிலையும் கவனிக்கப் பல உத்தியோகஸ்தர்கள் சோழன் அரசியலில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தேசத்தின் ஆட்சியை நடத்துபவர், தேசத்தின் வருவாய்களைக் கவனிப்பவர், நாட்டின் நடவடிக்கைகளைக் கவனிப்பவர், நாட்டில் நடைபெறும் நன்மை தீமைகளைக் கவனிப்பவர், குற்றங்குறைகளைத் தீர்ப்பவர், படைகளைப் பாதுகாத்துத் தலைமை ஸ்தானத்தை வகிப்பவர், அரண்மனை வரவு செலவுகளைக் கவனிப்பவர் ஆகப் பல உத்தியோகஸ்தர்கள் அக்காலத்தில் இருந்தார்கள்.

நாட்டுப்புறக் கிராமங்களில் பல உத்தியோகஸ்தர் இருந்தனர். நாட்டில் சண்டை சச்சரவுகள் நேராதபடி பாதுகாத்துக் கொள்பவர் சிலர். ஓர் ஊரில் நடக்கும் செய்தியை உடனுக்குடனே அரசாங்கத்தாருக்கு அறிவிக்கத் தக்க உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு ஊரிலும் இருந்தார்கள். குடிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துவைக்க வேறொரு கூட்டத்தார் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆற்று நீரை அணைக்கட்டிப் பல கால்வாய்கள் மூலம் வயல்களுக்குப் பாயுமாறு செய்யப் பல உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். சுருங்கக் கூறின், இக்காலத்தில் நாம் அரசாங்கத்தாரிடம் இருந்து பெறுகின்ற நன்மைகளில் பெரும்பாலானவை அக்காலக் குடிகள் சோழன்—குலோத்துங்கனிடமிருந்து பெற்றனர் என்றே சொல்லலாம்.

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தரும வைத்திய சாலைகள் நாடெங்கும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மலையில் உண்டாகும் சிறந்த மூலிகைகளும் கொடிகளும் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுத் தோட்டங்களில் வைத்துப் பயிராக்கப்பட்டன. வழிப்போக்கர் வெயிலால் வாட்டமுறு வண்ணம் சாலைகளின் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டன. சாலைகள் அடிக்கடி செவ்வை செய்யப்பட்டன. பத்து மைல்களுக்கு ஒவ்வொரு அறச்சாலை கட்டப்பட் டிருந்தது. அதில் வழிப் போக்கர்களுக்கும் ஏழைகட்கும் பரதேசிகட்கும் உண்டி வழங்கப்பட்டது. சாலை யோரங்களில் அங்கங்கே இளஞ் சோலைகளும் நன்னீர்க் கிணறுகளும் உண்டாக்கப் பட்டன. ஆற்றுப் பாய்ச்சல் அற்ற நாடுகளில் பல ஏரிகளும் குளங்களும் வெட்டப் பட்டன.

குலோத்துங்கன் திக்கு விஜயம் செய்து, பகையரசர் யாவரையும் ஒடுக்கி, வெற்றிமாலை புனைந்து, திரிபுவன சக்ரவர்த்தி என்னும் பட்டம் புனைந்து விஜயாபிஷேகம் செய்து கொண்டான். சோழ மன்னவன் இரவிலும் பகலிலும் கனவிலும் நனவிலும் குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே நாட்டம் உடையவனு யிருந்தான். "குடிகளுக்கு இன்னும் என்ன செய்தால் நலமாயிருக்கும்?" என்ற யோசனையே எப்போதும் அவனுக்கு உண்டாவது. அவன் புலவர், பாணர், இரவலர், என்ற இவர்களைப் பெரிதும் ஆதரித்தான். யார் எதை விரும்பி வரினும், "பெறுக" என்று மனந்தளராது கொடுக்கும் வள்ளல். அவனுடைய நற்குண நற்செயல்களால் சோழ



நாட்டுக்குடிகள் அவனையே கண்கண்ட தெய்வமாகப் போற்றிவந்தனர். "எம் அரசன் நீடுவாழ்க" என்பதே அவர்கள் உச்சரித்த மந்திரமாகும்.

இம் மாபெரு வேந்தன் நாற்பத் தொன்பது ஆண்டுகள் (கி. பி. 1070—1119) விரப்பிரதாபம் விளங்க அரசாண்டான். இவனுக்குப் பின்னர் இவன் மைந்தன் விக்கிரமசோழன் பட்ட மடைந்தான். அன்பும், அடக்கமும், புலமையும், நல்லறிவும், தெய்வ பக்தியும் கொண்ட சோழன் - குலோத்துங்கனைத் தமிழ் உலகம் என்று மறக்கற்பால தன்று.

---

# பாண்டியன் - நெடுஞ்செழியன்

# பாண்டியன் — நெடுஞ்செழியன்

## 1. பாண்டி நாடும் பாண்டியரும்

நமது கதைக்கு வேண்டிய நாடு பாண்டிய நாடு. இதனை ஆண்டுவந்தவர் பாண்டியர். அவர்கள் அநேக ஆயிர வருடங்களாக நாகரிகத்திற் சிறந்து விளங்கினார்கள் என்பது பழைய தமிழ் நூல்களால் அறியப்படும். பாண்டிய நாட்டில் மிகச் சிறப்புற்று விளங்குவது பொதியமலை. அம் மலையில் பெரியார் பலர் இன்னமும் வசிக்கின்றனர் என்பது பெரியோர் கொள்கை. அவ்விடத்தேதான் தமிழ் மொழியை வளர்த்த அகத்தியமுனிவர் இருந்தார். இராமாயணம் நடந்த காலத்திற்கு முன்பே அகத்தியர் தென்னாட்டிற்கு வந்தவர். அவர் பொதியமலையில் தவம் செய்துகொண்டிருந்தார் என்பது நூல்களால் அறியப்படுகிறது. பொதியமலையில் சந்தன மரங்கள் அதிகம். மன்னார் குடாவில் முத்து அதிகமாக எடுக்கப்படுகிறது. ஆகவே, சந்தனமும் முத்தும் பாண்டியர்களுக்கு உரியவை. பாண்டிய நாட்டில் வற்றாத நீர்ப் பெருக்கையுடைய பெரியாறு, வைகை என்ற ஆறுகள் பாய்கின்றன. மிக்க மலைவளம் பெற்ற நாடு பாண்டியநாடு.

பாண்டியர் இயற்கை இன்பங்களைப் பெரிதும் அனுபவித்து வந்தனர்; மலை நாட்டு வளத்தில் வளர்ந்தவர்கள்; அழகிய மேனியும் உரம்பெற்ற உடலும் பெற்றவர்கள்; வீரம், தைரியம், பரந்த நோக்கம், விரிந்த சிந்தை, பிழை பொறுத்தல், வாய்மை முதலான அரச லட்சணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவர்கள்; தமிழையும், புலவர்களையும், பாணர்களையும், கூத்தர்களையும் ஆதரித்து, அவர்கள் வறுமையைப்போக்கி வந்தனர். யார் எதை வேண்டி வரினும் "பெறுக" என்று சொல்லி, மனம் தளராமல் மேன்மேலும் பொருளை வாரிக்கொடுக்கும் வள்ளல்கள் இப் பாண்டியர்கள்.

இவர்கள் தருமத்தை ஆதரித்தார்கள். குடிகளுக்கு யாதொருதீங்கும் நேராவண்ணம் பாதுகாத்துவந்தனர். இவர்கள் நற்குண நற்செயல்களையே தங்கட்கு ஆபரணமாகப் பூண்டிருந்தனர். மூன்று தமிழ்ச் சங்கங்களைக் கூட்டித் தமிழைப் பெருக்கிய பெருந்தகையாளர்கள் இம் மன்னர்களே. இவர்கள் அருளாற்றான் நாம், தமிழ் மொழியைக் கற்றுவருவது. இவர்கள் தமிழை ஆதரியாமல் இருந்தால், தமிழ் நம்நாட்டில் அழிந்திருக்கும் என்பது உண்மை. இப் பாண்டிய மன்னர்களும் தமிழைக் கற்று அம் மொழியில் சிறந்த புலமை வாய்ந்திருந்தனர். இங்ஙனம் பலவழிகளிலும் சிறப்புற்று விளங்கிய பாண்டியர்களைப்பற்றிய வரலாறுகளைத் தெளிவாக விளக்க வல்ல நூல் இக்காலத்தில் இல்லை. பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் சில செய்யுட்களைக்கொண்டு,



இவர்கள் வரலாற்றை ஒருவாறு ஆராய்ந்து கூற வேண்டியிருக்கிறது. அங்ஙனம் கூறுதல் மிகக் கடினமாகத் தோன்றினும், நம் தமிழ் நாட்டு அரசர் வரலாறுகள் வெளிவர வேண்டும்; மாணவர் கற்கவேண்டும் என்ற அவாவால் அறிஞர் பலர் பண்டை நூல்களை ஆராய்ச்சி செய்து ஒருவாறு சில அரசர்களைப் பற்றிய வரலாறுகளை வெளியிடுகின்றனர். அங்ஙனம் வெளிப்போந்த நூல்களைப் போன்றது இச்சிறுநூல். இதில், மிகச் சிறப்புடன் விளங்கிய பாண்டியன்—தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்போனது வரலாறு கூறப்படுகின்றது.

---

## 2. பாண்டியன் - நெடுஞ்செழியன்

பாண்டிய மன்னர்களில் மிகச் சிறந்தவன் நெடுஞ்செழியன் என்பவன். அவன் தந்தை மிக்க பராக்கிரமம் வாய்ந்தவன். தன் மைந்தனையும் தன்னைப்போன்ற சிறந்த வீரனாக ஆக்கவேண்டும் என்பது அவன் விருப்பம். அதனால் அவன் சிறந்த ஆசான் ஒருவனைத் தேர்ந்தெடுத்துத் தன் மைந்தனை அவனிடம் காட்டி, "ஐய! இம் மைந்தன் என் போன்ற சிறந்த வீரனாகவும் செங்கோல் மன்னனாகவும் ஆகவேண்டும். உமது முயற்சியால் நீர் அவனைச் சிறந்த வீரனாகச் செய்யும். நீர் நல்ல சன்மானம் பெறுவீர்" என்று கூறித் தன் மைந்தனை ஆசானிடம் ஒப்பு வித்தான்.

நெடுஞ்செழியன் அரசகுமாரனாக இருந்தும், சிறிதும் பெருமிதம், கோபம் இன்றி அடக்கமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்து ஆசான் கூறுவனவற்றைக் கவனமாகக் கேட்டு அவற்றின்படி நடந்து வந்தான். அதனால் அவன் சில வருடங்களுக்குள் சிறந்த போர் வீரனானான். மேலும், ஆசானை இடைவிடாது அவன் எங்குச் சென்றாலும், தானும் பின் சென்றான். அவன் அவ்வப்போது கூறும் பொன் மொழிகளை மனத்தில் பதித்து வந்தான். அதனால், நாளடைவில் நெடுஞ்செழியன் நற்குணங்கள் நிறையப்பெற்றவனானான். இங்ஙனம் அவன் போர்த் தொழிலிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியது ஆசானை யடுத்துக் கல்வி பயின்றதால் அல்லவா?



எனவே, நெடுஞ்செழியன் உத்தம மாணாக்கனாக இருந்தான் என்பது பெறப்படுகிறது. மாணாக்கர்களை மூவகையினராகப் பிரிக்கலாம். அவர் உத்தம மாணாக்கர், மத்திம மாணாக்கர், அதமமாணாக்கர் எனப்படுவர். உத்தம மாணவர் ஆசான் கற்பிக்கும் விஷயங்களை மனதில் நன்றாகப் பதித்துச் சமயம் வாய்த்தபோது அவற்றை மெல்ல நினைப்பிற்குக் கொண்டுவந்து ஆராய்ச்சி செய்து தம் அகத்தே நன்றாகப் பதிய வைத்துக் கொள்வர். தம் இளவயதில் கற்ற விஷயங்களைத் தம் முதுமைப் பருவத்திலும் எடுத்துச் சொல்லும் பேராற்றல்வாய்ந்த பெரியோர்களை இக் காலத்தும் காணலாம். அவர்கள் உத்தம மாணவர்களாக இருந்தவர்கள். மேலும் இவ் வுத்தம மாணவர் நல்ல விஷயங்களையே தம் மனத்தில் பதிய வைத்துக் கொள்வர்; சாரமற்ற விஷயங்களை அகற்றி விடுவர். இதனால் உத்தம மாணாக்கர்களை,

"பாலு நீரும் பாற்படப் பிரித்தல்
அன்னத் தியல்பென அறிந்தனர் கொளல்"

என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறிப் போந்தனர். நன்னூலாரும்,

"அன்னம் ஆவே" என்று அன்னத்தையும் பசுவையும் நன் மாணாக்கருக்கு உவமை கூறினர்.

இடை மாணாக்கர் ஆசிரியன் சொன்ன விஷயங்களை மட்டுமே கருத்தில் வைத்துக்கொள்வர். தாமாக ஆராய்ச்சி செய்யும் வன்மை அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் கிளிப்பிள்ளைக்குச் சமானமானவர்

கள். நாம் சொல்லிக்கொடுக்கும் வார்த்தைகளையே கிளி திருப்பிச் சொல்லுமே தவிர, தானாக ஒன்றும் சொல்ல அறியாது. அங்ஙனமே, மத்திம மாணாக்கர்களும் ஆசான் கூறிய விஷயங்களையே ஒப்புவிப்பார்களே யல்லாமல் தாமாக ஒரு வார்த்தையும் சொல்லார்கள். இடை மாணாக்கரைத் தொல்காப்பியர்,

"கிளந்தவா கிளத்தல் கிளியினது இயல்பு"

என்று கிளிக்கு உவமையாகக் கூறினர்.

அதமமாணாக்கர் ஆசிரியன் சொன்ன விஷயங்களை அக்கணமே மறந்துவிடுவர். ஆசிரியன் சொல்லி முடிந்ததும் தான் கூறியவற்றைக் கூறும்படி கேட்டால் இம் மாணாக்கர் ஒன்றும் கூறத் தோன்றாது விழிப்பர். இக் காலத்தும் சில மாணவர்கள் ஒரே வகுப்பில் பல வருடக்கணக்காக இருப்பதைக் காண்கிறோம். அவர்கள் அதம மாணாக்கர்களே. அவர்களுக்கு நன்னூலார்,

'இல்லிக்குடம் மாடு எருமை நெய்யரி' என்பனவற்றை உவமையாகக் கூறுகின்றார். ஓட்டைக் குடத்தில் எத்துணை நீர் ஊற்றினும், அந்நீர் குடத்தில் தங்காது ஒழுகிவிடுதல்போல, ஆசிரியன் எத்துணை எடுத்துக் கூறியும் தம் அகத்தே வைத்துக் கொள்ளாதவர் இவ் வதம மாணாக்கர்.

பாண்டியன் - நெடுஞ் செழியன் ஒழுங்காகக் கல்வி கற்றதும், அவன் தந்தை அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். நெடுஞ் செழியன் அமைச்சர்களோடு இருந்து அரசியல் முறைகளை யெல்லாம்



நன்றாய்க் கற்றறிந்தான். பாண்டிநாட்டுக் குடிகள் நெடுஞ் செழியனிடம் அதிக அன்புகொண்டனர். 'எம் இளவரசன் நீடூழி வாழ்க' என்று அவர்கள் தம் வாயார வாழ்த்திக்கொண்டிருந்தனர்.

சில ஆண்டுகள் சென்ற பின்னர், நெடுஞ்செழியனின் தந்தை உயிர் நீத்தான். குடிகள் நல்ல மனத்துடன் வரவேற்கப் பாண்டியன் - நெடுஞ்செழியன் அரசனானான்.

---

## 3. சேர சோழர் பொறாமை கொள்ளல்

பொறாமை என்பது மக்கள் மனத்தில் உண்டாகும் ஒரு தீய எண்ணம். அக்கொடிய எண்ணம் அறியாமையால் உண்டாவதேயல்லாமல் வேறன்று. கற்றோராயினும் கல்லாராயினும் செல்வராயினும் வறிஞராயினும் இத்தீய எண்ணம் இல்லாதார் இலர். பிறரது செல்வப் பெருக்கைக்கண்டு, அவர்மீது பொறாமை கொள்வர் பலர். பிறரது கல்வியறிவைப் பார்த்து, தம்மினும் மேம்பட்டவராய் அவர் விளங்குதலைக் காணச் சகியாதார் பலர். பிறர் தமது கொடைத் திறத்தால் எய்தும் புகழைக்கண்டு அவர் மீது பொறாமை கொள்பவர் பலர். பிறர் தமது வீரத்தால் வெற்றியுடன் விளங்குவதைக் காணச் சகியாதார் பலர். வேந்தராயினும், முற்றும் துறந்த பெரியாராயினும் இப்பொறாமை என்னும் கொடிய பேய் அவர்களைப் பிடித்துத் தன் ஆட்சியைச் செலுத்துகின்றது.

பாண்டியன் - நெடுஞ் செழியன் பாண்டிய நாட்டை யாண்டு வருகையில், சோழநாட்டில் ஒரு பகுதியைச் சோழன் - இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவன் ஆண்டுவந்தான். அப்போது சேர நாட்டின் ஒரு பகுதியை, யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பவன் அரசாண்டு வந்தான்.

சோழ மன்னன் சிறந்த வீரன். அவன் தன் இளமைப் பருவத்தில் தக்க ஆசிரியனிடத்துப் பயின்று, கல்வி கேள்விகளிலும் போர் செய்வதிலும்



சமர்த்தனாயிருந்தான். அவன் பல அரசர்களைப் போரில் வென்றவன். அம்மன்னன் அரசர்க்கு உரிய லட்சணங்களைப் பெற்றிருந்தான். போர்புரிவது அவனுக்கு அதிக மகிழ்ச்சியை யுண்டாக்கும். சிறுவர் எத்துணை அலட்சியமாகத் தாம் செய்த சிற்றிலைச் சிதைத்து விடுகிறார்களோ, அத்துணை அலட்சியமாக அச்சோழன் பகைவர் சேனையைச் சின்ன பின்னப்படுத்துவன். அவனது போர்த் திறத்தையும் அஞ்சாமையையும் சேர அரசனும் பாண்டிய அரசனும் நன்கு உணர்ந்திருந்தார்கள். அவன் போருக்குப் பயப்படாத நால்வகைச் சேனைகளை வைத்திருந்தான். அவனுடைய வாள்வலியும் தோள்வலியும் படைவலியும் நன்குணர்ந்தவர்களாதலால் ஏனைய அரசர்கள் அவனிடம் நட்புக் கொண்டிருந்தனர்.

அவன் தன் படைவலியால் சிலகுறுநில மன்னர்களையும் தன் வசப்படுத்திக்கொண்டிருந்தான்.

சேர அரசனான யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையும் சோழன்போலவே வீரப்பிரதாபங்களில் சிறந்து விளங்கினான். அவன் தனது அன்பான ஆட்சியால் குடிகளைத் தன் வயப்படுத்திக் கொண்டனன். அரசன் எதைக் கூறியபோதிலும் அதனைப் பூர்த்திசெய்யக் குடிகள் காத்துக் கொண்டிருந்தனர். அவனுக்கு யானைக்கிருப்பவை போலச் சிறு கண்கள் இருந்தமையால் யானைக்கட் சேய்மாந் தரஞ் சேரலிரும்பொறை என்ற பெயர் பெற்றான். அவன் மிக்க உயரமாகவும் உரம்பெற்ற உடலுடனும்

விளங்கினான். அவனைக் காண்போர் 'யுகாந்த கால ருத்திரனோ' என்று சந்தேகித்துப் பயப்படுவர். பார்வைக்கு அவன் பயங்கரமாகக் காணப்படினும் நற்குண நல்லொழுக்கம் வாய்ந்தவன். சோழனைப் போலவே அவனும் தன் நாட்டில் இருந்த சிற்றரசர்களை வென்று தன் ஆட்சிக்குட்படுத்திக்கொண்டான். அவன் எங்கேனும் போருக்குச் சென்றால் அக்குறுநில மன்னரும் தத்தம் சேனையோடு உடன்செல்ல வேண்டும். இங்ஙனமே சோழ அரசனும் தனது சிற்றரசர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டான். நிற்க,

நெடுஞ்செழியன் தன் ஆட்சியில் பல நன்மைகளைக் குடிகளுக்குச் செய்தான். தமிழில் வல்ல நல்லிசைப் புலவர்களை யாதரித்தான். அப்புலவர்கள் பிறநாடுகளில் சென்று பாண்டியன் பெருமையைப் பாராட்டிப் பேசினர். இதல்லாமல் தூதுவர் பாண்டியனின் நற்குண நற்செயல்களைத் தத்தம் வேந்தர்க்கு உரைத்தனர். எனவே, பாண்டி மன்னனது புகழ் தமிழ்நாடெங்கும் தலைகாட்டியது. சேர சோழரது பெருமையைப் பாராட்டிப் பேசுவார் இலர்.

நாட்கள் பல செல்ல, சேரநாட்டுக் குடிகளும் சோழநாட்டுக் குடிகளும் எங்குப் பார்த்தாலும் பாண்டியனைப்பற்றியே பேசிக்கொண் டிருந்தார்கள். தங்கள் குடிகளும் பாண்டியனைப் பாராட்டிப் பேசுதலைக் கண்டதும் சேர சோழர்க்குப் பாண்டியன்மீது பகைமை உண்டாயிற்று.

## 4. சேரன் ஆலோசனை

சேர நாட்டில் பாண்டியனைப்பற்றிய பேச்சே அதிகமாக இருந்தது. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையால் வாளாயிருக்க முடியவில்லை. தன்னைப்போன்ற ஒரு அரசனைப் பெருமைப்படுத்தித் தன்னாட்டுக் குடிகள் பேசுவதைக் கேட்க அவனால் பொறுக்கக்கூடவில்லை. தானும் பாண்டியனைப் போலக் குடிகளுக்கு புதிய முறையில் பல நன்மைகளைச் செய்தும் புலவர்களுக்குப் பரிசில் கொடுத்தும் பொது மக்களுடைய அன்பைப் பெறலாமா என்று யோசித்தான். தான் அவ்வாறு செய்தால், பாண்டியன் செய்தவற்றைக் கேள்வியுற்றுத் தான் செய்வதாகக் குடிகள் நினைத்துக் கேவலமாகப் பேசுவார்களோ என்று அவன் அஞ்சினான்.

என்ன செய்வது என்று சேரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் பலவாறு யோசனை செய்தான்; முடிவில் பாண்டியனைப் போரில் எதிர்த்துக் கொல்வதே சரி யென்று தீர்மானித்தான். என்ன காரணத்தைக்கொண்டு போருக்குப் புறப்படுவது என்பது அவனுக்கு விளங்கவில்லை. பல நாட்களாக யோசித்துப் பார்த்தான். அவன் ஒரு முடிவுக்கும் வரக் கூடாதவனாக விருந்தான். 'பாண்டியன் - பாண்டியன்' என்று குடிகள் பேசுவது அவன் காதுகளைத் துளைத்தது. பொறாமை அவன் மனத்தில் பேரூன்றி வளரத்தலைப்பட்டது.

ஒருநாள் அவன் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கையில், அவன் எண்ணம் பாண்டியனைப்பற்றியே யிருந்தது. அரச காரியங்களை முன்போல ஊக்கமாக அவன் கவனிப்பதில்லை. அரசன் ஏதோ கவலை கொண்டு இருக்கின்றான் என்பதை மட்டும் அமைச்சர்கள் அறிந்து கொண்டார்கள். ஆனால், அவன் மனத்தில் தோன்றிப் போராடும் எண்ணம் யாது என்பதை அவர்களால் அறியக்கூடவில்லை. என்றாலும், தங்கள் அரசனுக்குற்றது தங்களுக்கு என்று கருதும் நேர்மையுடைய அவ்வமைச்சர்கள் அரசனை நெருங்கி, அவன் உள்ளத்தில் ஊசலாடும் எண்ணம் என்ன என்பதை அறியவேண்டும் என்றும், அதற்கு ஏற்ற பரிகாரம் செய்யவேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டார்கள்.

அன்று மாலை சேரன் அரண்மனைப் பூந்தோட்டத்தில் உலவிக்கொண் டிருந்தான். அப்போது அவன் முகம் தூசியால் மறைக்கப்பட்ட கண்ணாடி போலவும், மேகங்களால் மறைப்புண்ட சந்திரனைப் போலவும் கவலைகளால் பொலிவு இழந்து காணப்பட்டது. அவன் தன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு கீழ்நோக்கி உலவிக்கொண் டிருந்தான்.

அப்போது அமைச்சர்கள் அங்குத் தோன்றினர். அமைச்சர்கள் வந்து நின்றது சேரனுக்குத் தெரியாது. அவன் நிலத்தை நோக்கிய வண்ணம் உலவிக் கொண்டே யிருந்தான். சில நிமிடங்கள் கழிந்ததும் கீழ் நோக்கியிருந்த மன்னன் தலை நிமிர்ந்தான்; தன் அமைச்சர்கள் எதிரே நிற்கக் கண்டான்.



அரசனைக்கண்ட அமைச்சர்கள் அவனடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். அந்நேரத்தில் அமைச்சர்கள் தன்னிடம் வர நேரிட்ட காரணம் என்னவென்று அரசனுக்கு விளங்கவில்லை. அவன் ஒன்றும் பேசாது அமைச்சர்களை நோக்கினான்.

அவ்வமயம் அமைச்சரில் ஒருவன் அரசன்முன் வந்து, "எங்கள் அன்புள்ள அரசே! சில நாட்களாகத் தங்கள் முகம் வாட்டம் அடைந்திருக்கக் காண்கிறோம். அகமலர்ச்சி யில்லாவிட்டால் முகமலர்ச்சி உண்டாவதில்லை. இன்று காலை, தங்கள் முகத்தைக் கொலுமண்டபத்தில் கவனித்ததில் தாங்கள் கவலை கொண் டிருப்பதாகத் தெரிகிறது. தங்கள் மனத்தை இரவும் பகலும் வருத்தும் அவ் விஷயம்தான் என்ன? எங்களிடம் கூறினால், அதனைப்போக்க எங்களால் இயன்றதைச் செய்வோம். உங்கள் உத்திரவின்றி இங்ஙனம் நாங்களே வந்து கேட்டதைத் தாங்கள் மன்னிக்கவேண்டும். தங்களுக்கு உண்டாகும் நன்மை தீமைகள் எங்களுக்கும் உண்டல்லவா?" என்று வெகு அன்போடும் மரியாதையோடும் பேசினான்.

சேரன் சிறிதுநேரம் யோசித்துப் பார்த்தான். தன் உள்ளத்தில் இருந்து பிய்த்துத் தின்னும் தன் கொடிய எண்ணத்தைத் தன் அமைச்சர்களிடம் கூறினால், அவர்கள் ஏதாவது புதுவழி காணக்கூடும். எதற்கும் அவர்களிடம் தன் விருப்பத்தைக் கூறுவதென்று தீர்மானித்தான். பின்னர் அவன் அமைச்சர்களை நோக்கி, "அமைச்சர்களே! வாருங்கள் ஒரு

தனியான இடத்திற்குச் செல்வோம்; நாம் பேசுவன பிறர் காதில் படலாகா" என்று கூறி அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு தனி இடத்தை அடைந்தான். யாவரும் ஒரு புதரண்டை உட்கார்ந்தனர்.

பிறகு சோழன், "நற்குண முடையீர்! உங்கள் துணையைப் பெற்ற எனக்கு என்ன குறையுளது! யான் கூறுவதைக் கவனமாய்க் கேளுங்கள். சிறிது காலமாகப் பாண்டியன்-நெடுஞ் செழியனைப் பற்றிப் பலர் பலவாறு புகழ்ந்து பேசுகின்றார்கள். நம் நாட்டுக்குடிகளும் என்னேரமும் அவனையே பாராட்டிப் பேசுகின்றனர். எனது நாட்டுக்குடிகள் என்னைப் பற்றிப் பேசாது, பிற நாட்டான் ஒருவனைப் பற்றிப் பேச, அதனைக்கேட்க யான் எவ்வாறு மனம் பொறுப்பேன்? என்ன அரிய செல்களை அப்பாண்டியன் செய்து விட்டான்? புலவர்களை அவன்றானா ஆதரிக்கின்றான்? நான் அவர்களை ஆதரிக்க வில்லையா? சோழன் ஆதரிக்கவில்லையா? குடிகளுக்குப் பாண்டியன் பல நன்மைகளைச் செய்தானும். என்னை விட என்ன அதிகமான நன்மைகளை அவன் செய்திருக்கக்கூடும்? அறிவற்ற இக் குடிகள் தங்களைக் காத்தருளும் என்னைப் பாராட்டிப் பேசாமல் முன்பின் அறியாத பாண்டியனைப் புகழ்ந்து பேசுகின்றார்களே. இதனால், எனக்கு ஒரு புறம் அவமானமும் மற்றொருபுறம் அப்பாண்டியன்மீது பொறாமையும் உண்டாகின்றன. அவனை எவ்விதத்திலாவது அடக்கி விடவேண்டும். அவனைப்பற்றி எந் நாட்டவரும்



புகழ்ந்து பேசாதபடி செய்ய வேண்டும். இதற்கு என்ன யோசனை கூறுகிறீர்கள்?" என்றான்.

அப்போது ஒரு அமைச்சன் எழுந்து, "அரசரே! பாண்டியன் பெருமையைக்கண்டு நீர் பொறாமை கொள்ளுதல் சரியன்று. அவனைப்போல் நீரும் பல தான தருமங்களைச் செய்யும்; புலவர்களை ஆதரியும். உமது பேரும் தமிழ் நாட்டில் பரவும். என்றாலும், பாண்டியன் தனிப்பிறவி என்றே எண்ணுகின்றேன். அவன் சீரிய ஒழுக்கம் வாய்ந்தவன். அவனைப் போரில் வெல்ல உம்மால் முடியாது.. சோழனோடு சேர்ந்துகொண்டு அவனை எதிர்த்தாலும் வெல்லுதல் அரிது" என்றான்.

சேரன் அவ் வார்த்தைகளைக் கேட்டதும் சினம் பொங்கிச் சீறினான். "அறிவற்ற அமைச்சனே! எனக்கு அறிவு புகட்டவா உன்னை யழைத்தேன்? என் அன்னத்தை உண்டு எனக்கே துரோகம் எண்ணுபவன் நீ. பாண்டியனைப்பற்றிப் புகழ்ந்து பேசுகின்றாய். என்னைப் புகழ்ந்து பேச மறந்து விட்டனை போலும்! நன்று! நன்று!! நீ என் முன் நிற்காதே, ஓடிப்போய்விடு" என்று உறுமினான்.

அமைச்சன் எழுந்து, "அரசரே! உண்மையும் உள்ளன்பும் உடைய அமைச்சர்கள் தங்கள் அரசனின் நன்மையிலேயே நாட்டங்கொண்டு உண்மையைப் பேசுவர். உம்மீது கொண்ட உள்ளன்பால் எனக்குத் தெரிந்ததை உமக்குக் கூறினேன். அது உம்மைச் சினங்கொள்ளச் செய்தது. இப்போது நீர் என்மீது சீறிச் சினந்தாலும், நானே அப்பாண்

டியனால் தோற்கடிக்கப்பட்டுக் கட்டுண்டு கிடக்கும் போது யான் கூறியவற்றை நினைப்பீர். யான் இப்போதே உமது முன்னின்றும் அகல்வேன்'' என்று கூறிப் போய்விட்டான்.

உண்மையைச் சொன்னதால் அமைச்சன் அரசனின் அன்பைப் பெறவில்லை. ஆதலால், அரசன் விருப்பப்படியே தாங்களும் அபிப்பிராயப் படுவதாகக் கூறுவதென்று ஏனைய அமைச்சர்கள் தீர்மானித்தனர். அவர்கள் ஏகமனதாய், ''அரசரே! சேரர் பெருமானே! தாங்கள் நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற விருப்பத்தால் போருக்குப். புறப்பட்டதாகச் சொல்லிக்கொண்டு முதன் முதலில் பாண்டியன்மீது படையெடுங்கள். இதுவே சிறந்த வழி'' என்றார்கள்.

அமைச்சர்கள் கூறியதைக் கேட்டு அரசன் ஆனந்தித்தான். ''இரண்டு நாட்களில் நம்படையைத் தயாரியுங்கள். யான் போருக்குப் புறப்பட வேண்டும். இனி நாம் போகலாம்'' என்று, எழுந்தான். அரசன் தன் அரண்மனைக்குச் சென்றான். அமைச்சர்கள் அரசனது அறிவீனத்தை நினைந்து வருந்தியவர்களாய்த் தத்தம் இல்லம் நோக்கி நடந்தனர்.

## 5. வினை விதைத்தவன் வினை யறுப்பான்

சேரன் கட்டளையிட்ட வண்ணம் அமைச்சர் கொல்லிமலை நாட்டிலும், தலைநகரமான தொண்டியிலும் பறை யறைவித்து, அரசனது விருப்பத்தை நிறை வேற்றினர். இரண்டு நாட்களில் அநேக ஆயிரக் கணக்கான வீரர்களும் தேர் வீரர்களும் யானை வீரர்களும் குதிரை வீரர்களும் ஒன்று சேர்ந்தனர். அவ்வீரர்கள் போர் செய்யப் பெரு விருப்பங் கொண்டவர்கள்.

நாற்படையும் சேர்ந்தபின் அமைச்சர் அரசனையடைந்து, ''காவல! தங்கள் விருப்பப்படியே நாற்படையும் தயாரயின. இனிப் போருக்கு எழ வேண்டியதே தாமதம்'' என்றனர். அரசன் மகிழ்ந்து, தன் பட்டத்து யானைமீ தேறி, நல்ல முகூர்த்தத்தில் அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். நாற்படைகளும் அவனைச் சூழ்ந்தன. பேரிகைகளும் சங்கங்களும் முழங்கின. வீரர்கள் தாங்கள் போர் செய்யப் போவதை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். பலர் இன்னிசைப் பாடல்களைப் பாடிக்கொண்டே நடந்தனர். அரசன் தன் வீரர்கள் போர்மீது கொண்டுள்ள அவாவினைக்கண்டு மகிழ்ந்து, சென்று கொண்டிருந்தான்.

சேரமான் பாண்டியன்மீது படையெடுத்து வருவதைத் தொண்டி நகரத்தில் இருந்தபாண்டியன் ஒற்றர் கேள்வியுற்றனர். அவர்கள் உடனே அதிவேகமாகச் சென்று பாண்டியர் பெருமானைக்கண்டு

பணிந்தனர். நெடுஞ்செழியன் ஒற்றர்களை நோக்கி, "யாது விசேடம்?" என்று அன்புடன் வினவினான். ஒற்றர்கள், "அரசரே! வாழ்க, தங்கள் கொற்றம்; கொல்லிமலைக்குத் தலைவனான யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை தங்கள்மீது படையெடுத்து வருகின்றான். இன்னும் இரண்டு நாட்களில் நமது நாட்டெல்லையை அடைவான். இதுவே யாங்கள் கொணர்ந்த செய்தி" என்று கூறிப்பணிந்தனர்.

ஒற்றர்கள் கூற்றைக் கேட்ட வேந்தன் குலுங்க நகைத்தான். அவன், "என்ன! இச் சேரனுக்குப் புத்தி என்பது இல்லையோ? சோழனும் சேரனும் என்னுடன் நட்புக்கொண்டு இருக்கையில், சேரநாட்டில் ஒரு பகுதிக்கு அரசனான இவன் என்மீது போருக்கெழுந்தது ஆச்சரியமாக இருக்கின்றதே. என்ன காரணத்தால் அவன் இங்கு வருகின்றான் என்பதை நீங்கள் அறிவீர்களோ?" என்று ஒற்றர்களைக் கேட்டான்.

அப்போது ஒற்றர்களில் ஒருவன் அரசனைப் பணிந்து, "வேந்தே! ஒருநாள் அரசனும் அமைச்சரும் பூங்காவில் தனித்ததோர் இடத்தில் பேசிக் கொண்டிருந்தனர். யான் அவர்கள் பேசியவற்றை ஒற்றுக்கேட்டேன். தங்கள் நற்குண நல்லொழுக்கத்தை வியந்து, சேரநாட்டுக்குடிகள் தங்கள் திருநாமத்தை என்னேரமும் கூறிக்கொண்டிருந்தனர். அதனைக் கேட்கச் சேரன் ஆற்றானாயினான். பொறாமை கொண்ட அவன் தங்களைப் போரில் வெல்ல விரும்பினான். தங்கள் பெருமையை எடுத்துக் கூறி, தங்க



ளுடன் போர்புரியச் செல்லுதல் சரியல்லவென்று அமைச்சன் ஒருவன் சொன்னான். அவன் வார்த்தைகளை அரசன் கேட்கவில்லை. பின்னர் எஞ்சிய அமைச்சர்களின் துணையைக்கொண்டு நாற்படைகளையும் தயாரித்துத் தங்கள்மீது போருக்கு வருகின்றான்" என்றனன்.

நற்குணம் வாய்ந்த பாண்டியன் கோபம் அடையாமல் நகைத்து, "இச் சேரன் அறிவற்றவன். பொறாமை கொண்டு ஒருவனை அழிக்க விரும்புவோன், தன்னையே அழித்துக் கொள்வன். தினை விதைத்தவன் தினை யறுப்பான், வினை விதைத்தவன் வினை யறுப்பான் என்ற உண்மையை இச் சேரன் அறியான் போலும்! இவன் வினையை விதைக்கின்றான். முடிவில் வினையையே அறுக்கப் போகின்றான். இவன் கொண்ட கெட்ட எண்ணம் இவனையே பாழாக்கப் போகிறது" என்று கூறி, ஒற்றர்களை யனுப்பி விட்டான்.

பின்னர், பாண்டியன் சேனைத்தலைவர்களை நோக்கி, "வீரர்களே! யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை நம்மீது படையெடுத்து வருகின்றான். அவன் அறியாமையால், பொறாமை என்னும் கொடிய பேய்க்கு அடிமையாகி, இங்கு வருகின்றான். மேலும், அவன் ஒரு சிற்றரசன்; சேரநாட்டில் உள்ள கொல்லிமலைப் பகுதியை யாண்டுவருகின்றான். ஆதலால், அவனிடம் சேனை அதிகமாயிராது. மேலும் அவன் ஒரு வீரன் அன்று. அவனைக் கொல்வதால் நமக்குப் பெருமை யுண்டாகாது. சுத்த வீரன்

பொறுமைகொண்ட ஒருவனைக் கொல்லுதல் அழகல்ல. ஆதலின், அவன் போர் செய்தாலும், யான் அவனைக் கொல்லமாட்டேன். நீங்கள் நமது படைகளைத் தயாரித்து, நம் நாட்டின் எல்லைப்புறத்தில் அணிவகுத்து நிறுத்தி வையுங்கள். நான் அங்கு வருகின்றேன்" என்று கூறினன்.

படைத்தலைவர்கள் பாண்டியனைப் பணிந்து சென்றனர். அரசன் கட்டளைப்படி நால்வகைப் படைகளையும் நாட்டின் எல்லைப்புறத்தில் நிற்கவைத்தனர். சேரன் படையை ஆவலோடு எதிர்நோக்கியிருந்தனர்.

சேரமான் படையும் வந்தது. பகைவர் படையைக் கண்டதும் பாண்டியன் சேனை கொதித்தெழுந்தது. இருதிறப் படைகள் ஒன்றையொன்று எதிர்த்தன. வீரர்கள் வீரர்களை எதிர்த்தனர். யானைகள் யானைகளைத் தாக்கின. குதிரைகள் குதிரைகளை எதிர்த்தன. தேர்வீரர் தேர் வீரரோடு சண்டையிட்டனர். போர் கடுமையாக நடந்தது. அவ்வேளை பாண்டியன் நெடுஞ் செழியன் தனது பட்டத்து யானைமீது அமர்ந்து போர்முகத்தை யடைந்தான். தங்கள் அரசனைக் கண்ட நால்வகைப்படைகள் வீராவேசங்கொண்டு பகைவர் சேனைமீது பாய்ந்தன. போர் நடந்தவிடம் இரத்தமயமாக இருந்தது. பகைவர் சேனை சின்னா பின்னப் பட்டது. பாண்டியன் தனித்ததோர் விடத்தில் இருந்துகொண்டு போரைக் கவனித்தான். சேனைத் தலைவர் சேனைத் தலைவரோடு பொருதனர். அதிகம் கூறுவதேன்? சிறிது நேரத்



திற்குள் சேரமான் சேனை சிதறுண்டது. சேனைத் தலைவர்கள் நாலாபக்கங்களிலும் ஓட வாரம்பித்தனர். தலைவர்கள் ஓடுவதைக்கண்ட வீரர்கள் தங்கள் ஆயுதங்களைநிலத்தில் விட்டெறிந்துவிட்டு, ஓட்டமெடுத்தனர். சேரமான் இக்காட்சியைக் கண்டு, மனம் நொந்தான்; பின்னர்த் தன்னைத் தேற்றிக்கொண்டு, தன் யானையை முன்னே செலுத்தி வந்து, பாண்டியனை எதிர்த்தான். அஞ்சா நெஞ்சம்படைத்த வல்லாள உக்கிரசிங்கம் போன்ற நெடுஞ் செழியன் சேரமான் அறிவீனத்திற்குப் பெரிதும் இரங்கி, அவனோடு கடுமையாகப் போர் புரியாமல், சிறிது நேரத்திற்குள் சேரமானைக் கைப்பிடியாகப் பிடித்து அவன் கைகளையும் கால்களையும் கட்டி விட்டான்.

தங்கள் அரசன் கட்டுண்டதைக் கண்ட எஞ்சியிருந்த வீரர்கள் ஓடி விட்டனர். எனவே, சேரமானைத் தவிர அவனதுவீரர்கள் ஒருவரும் அகப்படவில்லை. பல வீரர் மாண்டனர். யானைகள் வெட்டுண்டன. குதிரைகள் கொல்லப்பட்டன. தேர்கள் அழிக்கப்பட்டன. பாணடியநாட்டு வீரர் வெற்றி முழக்கத்தோடு நாடுநோக்கித் திரும்பினர். பாண்டியன் சேரமானோடு தன் நகரை யடைந்தான்.

சேரமான், தனது அமைச்சன், பாண்டியன் பெருமையைக் கூறியதும், தான் அவன் வார்த்தையைக் கேட்காது, துன்மந்திரிகள் பேச்சைக் கேட்டு வந்து, படையையும் இழந்து, பாண்டியன் வசப்பட்டதும் எண்ணி எண்ணி மனம்புண்ணாயினான். பெருந்தகையான பாண்டியன் அவனுக்குப் பல புத்திமதி

களை எடுத்துக் கூறி, பொறாமைக்கு இடங்கொடுத்ததால் அவன் அடைந்த இழிவையும் எடுத்துக்காட்டி, அவனைக் கட்டவிழ்த்துவிட்டான்.

பாண்டியனின் நற்குணத்தை நேரே கண்ட சேரன், அவனிடம் மன்னிப்புப் பெற்றுத் தன் நாட்டிற்குச் சென்றான். வினை விதைத்ததால் அவன் வினையறுத்தான். தான் ஒருவனைக்கெடுக்க எண்ணியதால் அவனே கெட்டழிந்தான்.

---

## 6. இருபெரு வேந்தரும் ஐம்பெருவேளிரும்

யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை பாண்டியன்-நெடுஞ்செழியனால் தோற்கடிக்கப்பட்ட விஷயம் தமிழ் நாடெங்கும் பரவியது. சேரநாட்டின் பெரும்பாகத்தை வலிமைபொருந்திய சேரமன்னன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவன் தோள்வலியும் வாள்வலியும் பெற்ற வீரன். அவன் எந்த யுத்தத்திலும் தோல்வி யடையாதவன். தன் நாட்டு அரசனானவனும் தன் இனத்தானும் ஆன மாந்தரஞ் சேரலிரும்பொறை பாண்டியனால் தோற்கடிக்கப்பட்டான் என்பதைக் கேட்க அவன் மனம் வருந்தியது. அவனுக்கு நேர்ந்த அவமானம் தனக்குண்டானதே போல அவ்வரசன் எண்ணினான். அதை நினைத்தபோது அவனுக்குப் பாண்டியன்மீது கோபமும் பொறாமையும் உண்டாயிற்று. என்றாலும், தான் ஒருவனே அப்பாண்டியனை வெல்ல முடியாது என்பதையும் அவன் அறிந்திருந்தான். தான் தனியாகச் சென்றால், யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை பெற்ற தோல்வியும் அவமானமும் அடைவது நிச்சயம் என்று அவன் எண்ணினான். தனக்கு உதவிபுரிய யாரை வேண்டலாம் என்று அவன் சிந்தித்துக்கொண் டிருந்தான்.

சேரன் இங்ஙனம் இருக்கையில், சோழ மன்னவன் எவ்வாறு இருந்தான் என்பதைப்பார்ப்போம். அவன் ஏற்கனவே பாண்டியன்மீது பொறாமை கொண்டிருந்தான் என்று சொன்னோம் அல்லவா?

சேரமான் பாண்டியனிடம் தோல்வியுற்றதை அறிந்ததும், அவன் பாண்டியன்மீது கொண்ட பொறாமை அதிகமாயிற்று. சோழ நாட்டுக் குடிகள் பாண்டியனை அதிகமாகப் புகழ ஆரம்பித்தார்கள். குடிகள் மனநிலையைக் கண்ட சோழன அக்கணமே பாண்டியனைக் கொன்று விடலாமா என்று எண்ணினான். என்றாலும், தான் ஒருவனாக அவனிடம் போர் செய்வது உசிதமல்ல என்பதை அவன் உணர்ந்தான். தன் எண்ணம் நிறைவேறக்கூடிய காலம் எப்போது வருமோ என்று அவன் எதிர்பார்த்திருந்தான்.

சோழன், பாண்டியனை எதிர்க்கத்தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் சேரன் ஒற்றர்களால் உணர்ந்தான். அவனுக்கு அதிக மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே அவன் தன் விருப்பத்தைச் சேரனுக்குத் தூதுவன் மூலம் அறிவித்தான். சோழ மன்னவன் சேரன் கூற்றைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைந்தான். அவன் தூதனை நோக்கி, "வீர! உங்கள் அரசனுடன் சேர்ந்து உதவிபுரியச் சித்தமா யிருக்கிறேன். உங்கள் நாட்டுக் குறுநில மன்னர்களையும் உதவிக்கு அழைத்துக் கொள்ளச் சொல்வாயாக. நானும் என் சிற்றரசர்களோடு வருவேன். இன்றைய எட்டாம்நாள் போருக்குப் புறப்படுவோம்" என்று கூறினான்.

தூதுவன் சோழனைப் பணிந்து விடைபெற்றுச் சேரநாட்டை யடைந்தான்; சோழன் கூறியவற்றைச் சேரனிடம் செப்பினான். சேரன் உள்ளத்தில்



ஒருவராலும் கரைசெய்ய அரியதொரு மகிழ்ச்சி கொண்டான். அவன் தூதுவரை யனுப்பித் தன் விருப்பத்தைச் சிற்றரசர்களுக்கு அறிவித்தான். அவர்கள் தத்தம் சேனையோடு சேரனது தலைநகரத்தை யடைந்தார்கள். குறித்த தினத்தில் சேரனும் தன் பெரிய படையுடன் புறப்பட்டான். எனவே, சேரனும் குறுநில மன்னரும் தத்தம் சேனையோடு பாண்டியன்மீது போருக்கு எழுந்தனர்.

சோழ மன்னவன் தன்குறுநில மன்னர்களோடும் ஒரு பெருஞ் சேனையோடும் வந்து, சேரனோடு கலந்து கொண்டான். ஆகவே, சேரன் சோழன் என்ற இரு பெரு வேந்தரும், திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற ஐம்பெரு வேளிரும் தத்தம் சேனையோடு பாண்டியன்-நெடுஞ் செழியனைப் போரில் எதிர்க்கச் சென்றனர்.

---

# 7. மாபெரும் போர்

இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிரும் பாண்டியன்மீது போருக்கு வருவதை ஒற்றர் பாண்டியனுக்கு அறிவித்தனர். அவன் மனம் எவ்வாறு இருந்திருக்கும் என்று நீங்களே உணருங்கள். அவன் ஒருபுறம் கோபமும் மற்றொருபுறம் வருத்தமும் கொண்டான். அவர்கள் தன்னைப்பற்றிக் கேவல அபிப்பிராயம் கொண்டவர்கள் என்பதையும், அவர்கள் தன்னை இழித்துரைத்தார்கள் என்பதையும் அறிந்தான். அவன் மனம் நெருப்பிற்பட்ட புழுப் போலத் துடித்தது. அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன.

கொலுமண்டபத்தில் அமைச்சர்கள் சூழக் கொலுவீற்றிருந்த பாண்டியர் பெருமான், "ஆ! என்ன ஆச்சரியம்! சேரனும் சோழனும் குறுநில மன்னர் ஐவரும் என்மீது போருக்கு வருகின்றார்களாம். இவர்கள் எனது வாள்வலியும் தோள்வலியும் படைவலியும் நன்கு அறிந்திருந்தும், ஏதும் அறியாத பிறர்போல இங்ஙனம் போர் செய்ய வருவது நகைத்தற் கிடமாயிருக்கிறது. நன்று! நன்று! இவ்வேந்தர்கள் என்மீது கொண்ட பொறாமை காரணமாக இவ்வாறு போருக்கு வந்துள்ளார்கள் எனத்தெரிகிறது. இவர்கள் கொண்ட பொறாமையால் என்னைச் சிறியவன் என்றும், அற்பன் என்றும், சிறிய சேனையையுடையவன் என்றும், தாங்களே



வலி மிகுந்த யானைப்படையுடையவர்கள் என்றும், கூறிக்கொள்வது அழகாயிருக்கின்றது! இவர்கள் அறிவீனத்தை என்னென்பது? தமிழ்நாட்டில் உள்ள அரசர்கள் தமக்குள் ஒன்றுபட்டு இருந்தால் அல்லவோ பிறநாட்டார் நம்மிடம் அச்சங் கொள்வர். ஒருவன் 'புகழோடு வாழ்வானானால், அவனைத் தொலைத்துவிட வேண்டும் என்று கேவலமாக நினைக்கும் இத்தகைய அரசர்களும் உலகில் இருக்கின்றார்களே! இவர்கள் எழுவர் வந்தால், என்னை எளிதில் வென்றுவிடலாம் என்று நினைத்துக் கொண்டார்கள் போலும்! இவர்கள் மட்டும் அல்லர், இத்தமிழ் நாடே ஒன்று சேர்ந்து வந்தாலும், பாண்டியன் நெடுஞ்செழியன் அஞ்சுபவன் அல்லன். இந்த எழுவரின் அகந்தையை அடக்குவேன். இவ்வரசர்களை வெல்லுவதற்கு அரிய போரிலே, வெற்றிகொள்ளாவிட்டால், என் குடிகள் நிற்க நிழல்கூட காணாது, தவித்துக் கண்ணீர் விட்டுப் புலம்பி, 'எங்கள் அரசன் மகா கொடியன்; அவன் ஆட்சி கொடுமையானது' என்று இகழ்வார்களாக. தமிழ்மொழியில் வல்ல புலவர்களான மாங்குடி மருதனார் முதலிய புலவர்கள் என்னைப் பாடா தொழிவார்களாக. என்னைத் தமிழ் மக்கள் நினைக்காமல் போகக்கடவர். அமைச்சர்களே! சேனைத் தலைவர்களே! நமது நால்வகைப் படைகளையும் அணிவகுத்து நிற்கச் செய்யுங்கள். ஒருகை பார்த்து விடுவோம். பாண்டியன் இந்த ஏழு அற்பர்களுக்கு அஞ்சுபவன் அல்லன் என்னும் உண்மையை அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்.

கிறேன்" என்று வீராவேசத்துடன் கூறி, தன் அரியாசனத்தினின்றும் எழுந்தான்.

அரசன் கொலுமண்டபத்தைவிட்டு நீங்கி அந்தப்புரஞ் சென்றான். அரண்மனையுள் அழகிய குளம் ஒன்று இருந்தது. பாண்டியன் குளிர்ந்த நீரையுடைய அப்பொய்கையில் நீராடி எழுந்தான்; தூய நல்லாடைகளை உடுத்தினான். பிறகு, அவன் தன் வழிபடு கடவுளான விரிசடைப்பெம்மானை மனத்தால் வணங்கினான். பாண்டிய அரசர்கள் சூடும் அடையாள மாலையாகிய வேப்பமாலையைச் சூடினான்; தனது வாளையும், ஈட்டி, கேடயம், வில், அம்பறாத்தூணி முதலானவற்றை எடுத்துக் கொண்டான். பின்னர், மன்னன் அந்தப்புரத்தில் விடைபெற்றுக் கொண்டு, அரண்மனை வாயிலை அடைந்தான். அவனது பட்டத்து யானை அலங்காரத்தோடு வந்து நின்றது. நல்ல சுபலக்கினத்தில், சகல வாத்தியங்களும் முழங்க, மங்கையர் மங்களகீதம் பாட அரசன் யானை மீதேறினான். நாற்படைகளும் அவனைச் சூழ்ந்தன. நகர மாந்தர் தத்தம் மாளிகை மேன் மாடங்களில் இருந்துகொண்டு, "எம்மரசன் வெற்றி பெற்று மீள்வானாக; வீரலட்சுமி அவனுக்கு உதவிபுரிவாளாக; ஜயலட்சுமி அவனுக்கு வெற்றியைத் தருவாளாக; பாண்டியன்-நெடுஞ்செழியன் நீடூழி வாழ்க" என்று வாயார வாழ்த்தி அன்று மலர்ந்த நறுமலர்களை வாரி அரசன்மீது சொரிந்தார்கள். மன்னன் மனக்களிப்போடு நகரை விட்டுப் புறப்பட்டான்.



மதுரைக்கு அருகில் பகைவர் சேனை தங்கியிருந்தது. பாண்டியனும் தன் சேனையோடு அவ்விடத்தை அடைந்தான். அவன் தன் சேனையை நோக்கி, "சமர் தொடங்குக" என்றான். அவ்வளவே: பாண்டியன் சேனை பகைவர் சேனையைத் தாக்கியது. கரியொடு கரி தாக்கியது. பரியொடு பரி தாக்கியது. தேரொடு தேர் மோதுண்டது. வீரரொடு வீரர் சண்டையிட்டனர் சிறிது நேரத்தில் எங்கும் பிணக் குவியல்கள் காணப்பட்டன. யானைகளும் குதிரைகளும் வெட்டுண்டு தரையில் வீழ்ந்தன. இரத்தம், நதி என்று சொல்லும்படி பெருக்கெடுத்து ஓடியது. எங்கும் வில், வாள், வேல், கேடயம் முதலான ஆயுதங்கள் தத்தம் வேலையைச் செய்தன. வீரர்கள் ஒருவரோடு ஒருவர் அஞ்சாமல் போர் செய்தார்கள். காண்போர் நடுங்கத் தக்கவிதம் அப்போர் காணப்பட்டது. முடியுடை மூவேந்தரும் ஐந்து சிற்றரசர்களும் சேர்ந்து போர் செய்ததால், அதனை மாபெரும்போர் என்று கூறத் தகும்.

இரு திறத்தாரும் இளைக்காமல் நெடுநேரம் அமர் புரிந்தனர். பாண்டியன் போர்செய்ய விரும்பினான். தனது தேரை முன்னே நடத்தி, வாளைக் கையில் ஏந்தினான்; பகைவர் சேனையுள் புகுந்தான். அவ்வளவில், வீரர்கள் வெட்டுண்டார்கள். யானைகள் தலையறுப்புண்டன. குதிரைகள் குதிததுச் செத்தன. சேரனும் சோழனும் தங்களால் கூடிய வரையில் சண்டையிட்டனர். என்றாலும், பாண்டி

யனைப்போலச் சண்டைசெய்ய அவர்களால் முடியவில்லை. அதனால், அவர்கள் மனங் கலங்கினார்கள். குறுநில மன்னர் குருதியைச் சிந்தினர். பாண்டியன் ஆற்றலை உணர்ந்தும், அவனோடு பகைமைகொண்டு போருக்கு வந்தது மூடத்தனம் என்பதை அப்போதே அவர்கள் எழுவரும் உணர்ந்தார்கள். கடல் போன்ற தங்கள் சேனை சிதறியோட ஆரம்பித்ததைக் கண்டதும் அவர்கள் பெரிதும் அச்சமும் கவலையும் கொண்டார்கள். பாண்டிய சேனை வீராவேசத்தோடு போர் செய்யவே, பகைவர் சேனை அல்லோகல்லப்பட்டது. பகையரசன் மனதைத் தேற்றிக்கொண்டு தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது, 'போருக்கு வந்துவிட்டோம். இனி, நாம் பயப்படுவதில் பயனில்லை; யோசிப்பதிலும் பயன் இல்லை. நம்மால் கூடியவரையிலும் போர்செய்து பார்க்கலாம். வெற்றி பெற்றால் பூமியை யாள்வோம்; இல்லாவிடில், வீர சுவர்க்கம் அடையலாம்' என்பதே.

ஆகவே, அவர்கள் எழுவரும் மீண்டும் கொதித்தெழுந்து சண்டை செய்தனர். அவர்கள் என்ன கடுமையாகப் போர் செய்தும் பயன் என்? உலகத்தையே ஆட்டுவிக்கும் வீரம் பொருந்தியவனும் அஞ்சா நெஞ்சம் படைத்தவனும் ஆன நமது பாண்டியனுக்கு முன் அவ்வேழு அரசர்கள் என்ன செய்யமாட்டுவர்? பாண்டியன் பகைவரை விடாது சண்டையிட்டான். பகைவர் சேனை சிதறியது, வீரர் நிலை கலங்கினர்; மன்னர் மதிகலங்கினர். சேனா வீரர்கள் நாற்புறமும்



ஓட வாரம்பித்தனர். சேனை சிதறியதைக் கண்ட எழுவேந்தரும் செய்வது அறியாது, கால்களைப் பின் வைத்தனர். அவர்கள் புறங்காட்டி ஓடுவார்கள் என்பதை உணர்ந்த பாண்டியன் வாளேந்தி அவர்களை நெருங்கினான்.

'நாம் இனித் தாமதித்தால் பாண்டியன் வாளுக்கு இரையாவோம்' என்பதைப் பகை மன்னர் உணர்ந்தனர். உடனே அவர்கள் புறங்காட்டி ஓடத் தலைப்பட்டார்கள். பாண்டியன் சினங்கொண்டு, அவர்களை விடாது துரத்திச் சென்றான். அவனைப் பின்பற்றி அவன் நாற்படைகளும் சென்றன. இவ்வாறாக எழுவர் முன்னே ஓட, ஒருவன் அவர்களைத் துரத்தி யோட, முடிவில் இருதிறத்தாரும் தலையாலங்கானம் என்னும் இடத்தை அடைந்தார்கள். அத் தலையாலங்கானம் என்ற இடம் சோழநாட்டில் உள்ளது; தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவாரூருக்குச் சுமார் எட்டுமைல் தூரத்தில் இருக்கிறது; அதன் தற்காலப்பெயர் தலையாலங்காடு என்பது என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர்.

அவ்விடத்தில் பாண்டியனுக்கும் பகையரசர் எழுவருக்கும் கொடும்போர் நடந்தது. அப்போர் இத்தன்மையது என்று எடுத்துக்கூற இயலாது. பகைவர் என்ற கடலில் பாண்டியன் என்ற மரக்கலம் ஓடிற்று. பாண்டியன் அச் சண்டையில் எங்குப் பார்த்தாலும் காணப்பட்டான். அவன் பகையரசர் கண்களுக்கு யமனைப் போல விருந்தான். பகைவர் அன்றே தமது வாழ்நாள் முடிவுபெற்றதாக எண்ணி

விட்டனர். அறியாமையால் தாங்கள் அவன்மீது கொண்ட பொறாமைக்காக வருந்தினார்கள்; தாங்கள் செய்த பிழைக்காகத் தங்களையே நொந்துகொண்டார்கள். அதிகம் கூறுவானேன்? பாண்டியன் நெடுஞ் செழியன் சேரனையும் சோழனையும் ஐம்பெரு வேளிரையும் அத்தலையாலங்கானம் என்ற விடத்தில் முற்றிலும் தோற்கடித்தான். பகையரசர் இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர்.

பாண்டியன் பெற்ற வெற்றி என்றும் மறக்கக் கூடியதன்று. ஒரே காலத்தில் தனி வீரனாக நின்று, தன்னைப் போன்ற இரண்டு பெரிய வேந்தர்களையும் சிற்றரசர்கள் ஐவரையும் போர் செய்து வெல்லுதல் எளிதன்று. இத்தகைய அரியதோர் செயலைச் செய்த பாண்டியன் நெடுஞ் செழியன் வெற்றிமாலை சூடி, தன் நாற்படைகளும் சூழத் தன்னகரத்தை நோக்கித் திரும்பினான். அவன் பெற்ற பெரிய வெற்றி காரணமாக அவனுக்குத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

## 8. புலவர் புகழ்மொழிகள்

பாண்டியன் பகைவரை வென்ற பின்னர், தன் நாட்டையடைந்தான். அவன் பகைவரை வென்று வெற்றி மாலை சூடி மதுரைக்கு மீண்டான். அவன் போரில் வெற்றி பெற்றதை யறிந்த அவனது நண்பர்களான பல புலவர்கள் அவனை வந்து கண்டார்கள். அவர்களில் கல்லாடனார் என்பவர் ஒருவர். அவர் பாண்டியனை நோக்கி, "யமனைப் போன்ற வலிமையையுடைய மன்ன! நீ, வலிமை பொருந்திய பெரிய யானைகளை யுடையாய்; மகா வீரனான சூரபதுமனைக்கொன்ற முருகக் கடவுளை ஒப்பாய்; உனது சேனை முருகனது பூதங்களை யொக்கும். நீ போர் செய்யச் சென்றவிடம் எல்லாம் வெற்றிமாலை புனைந்து மீள்கின்றாய். உன்னைப் பார்த்த பகைவர் 'கருடனைக்கண்ட நாகம்போல' நடுங்குவார். நீ செல்லும் நாடெல்லாம் காடாகிறது. உனது கோபத்தைப் பெற்றவர்கள் உயிர் பெற்றிரார். நீ, வேற்றரசருடைய காவல் மரங்களை யழிப்பதில் பெருவிருப்புடையாய். நீ சேர சோழ மன்னரோடு குறுநில மன்னர் ஐவரையும் தலையாலங்கானத்தில் முற்றிலும் தோற்கடித்து, வெற்றி பெற்றதாகக் கேள்வியுற்றேன். அதனால், நின்னைக் காண யான் விருப்பங் கொண்டேன்; எனது ஊரினின்றும் புறப்பட்டு, காட்டு வழியாக நடந்து வந்தேன்" என்று, பாண்டியனது வெற்றிப் புகழையும், தாம் அவனைக்காண வந்த அன்பையும் பைந்தமிழில் பாங்குற எடுத்துக் கூறினார்.

பாண்டியன் புலவர் அன்பிற்கும் புகழ்மொழிகட்கும் மகிழ்ச்சியடைந்தான். அவன் அவருக்கு நல் விருந்து செய்து, வேண்டிய பரிசுகளைக் கொடுத்தான். புலவர் பாண்டியனை வாயார வாழ்த்தி அவனிடம் விடைபெற்றுத் தம் ஊர் போய்ச் சேர்ந்தார்.

இடைக்குன்றூர் கிழார் என்பவர் பாண்டியனை நோக்கி, "அரசே! கவியரசும் புவியரசும் ஆன வள்ளலே! வேப்பமாலையை யணிந்தவனே! இவ்வுலகம் மிகப் பெரியது. இதனில், ஒருவனை ஒருவன் தோற்கடித்தலும், ஒருவனை யொருவன் வெல்லுதலும் புதிதல்ல, ஆச்சரியமும் அல்ல, அவ்வாறிருக்க உனது பெருமையை அறியாதவர்களாய்ச் சேர சோழர் நின்மீது போருக்கு வந்தனர். அவர்கள் தம்மோடு ஐந்து சிற்றரசர்களையும் அழைத்து வந்தனர். ஆக, எழுவர் நின் ஒருவனை எதிர்க்க வந்தனர். அவ்வெழுபேரையும் நீ ஒருவனாகவே நின்று, தலையாலங்கானத்தில் தோற்கடித்ததாகக் கேள்வியுற்றேன். நின் வேப்பமாலை வாழ்வதாக. நீ உன்னோடு சண்டையிட வரும் வீரர்களைக் கொன்றதும் இல்லை. அவர்கள்மேல் இரக்கம் கொள்ளுகின்றாய். நீ பெற்ற வெற்றியை நினைத்து மகிழ்வதும் இல்லை. நினது பெருமையையும், அருமையையும், பரந்த சிந்தையையும், விரிந்த நோக்கத்தையும் என்னவென்று சொல்லுவேன்? நீ, நீடூழி வாழ்க. நின் பெருமையும் வெற்றியும் சிறக்க" என்று, அரசனைத் தம் வாயார வாழ்த்தி நின்றனர்.



நெடுஞ் செழியன் புலவரைப் போற்றி, அவருக்கு இன்னமுது ஊட்டி, அவர் மனம் களிப்படையும்படி வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்தனுப்பினான்.

பின்னர், மாங்குடி மருதனார் என்ற புலவர் பாண்டியனைப் பார்த்து, "மிக்க போரைச்செய்யும் பாண்டிய மன்ன! பெரிய கடலைக் கப்பல் சென்று கிழிக்கின்றது. அதுபோல, நின்யானை பகைவர் கூட்டத்தில் நுழைந்து வழி யுண்டாக்குகின்றது. அவ்வழியே நீ வேலை ஏந்திச் சென்று, சண்டை செய்வாய்; பகைவர் உடலைக் கூறுகூறாக வெட்டுவாய்; அவர் உதிரத்தைப் பெருக்குவாய்; யாவரும் அறக்கள வேள்வி செய்வார்கள். நீயோ, மறக்கள வேள்வி செய்கின்றாய். சிறந்த அந்தணர்களோடு நின்று தரும வேள்வியையும் செய்து முடித்தாய். பெரிய வீரனாக உன்னால் கொல்லப்பட்ட வீரர்கள் தடையில்லாமல் வீர சுவர்க்கம் அடைவார்கள். உனது வாளால் மாய்ந்தோர் பெருமைப் பட்டவர்களே யாவார்கள். அரசே! நீ, ஆற்று மணலினும் அதிக வாழ்நாட்களைப் பெற்று வாழ்வாயாக," என்று, அரசனைப் பெரிதும் புகழ்ந்து பேசி ஆசீர்வதித்தார்.

பாண்டியன் புலவர் கூறியவற்றைக் கேட்டு அகமகிழ்ச்சி கொண்டான். அவர் தன்னைப் புகழ்ந்தது போலத் தானும் அவரைப் புகழ விரும்பி, "கவியரசே! தங்கள்போன்ற புலவர் பெருமக்கள் ஆசீர்வாதத்தால் நான் அரசாள்கின்றேன்; நீங்கள் கூறும்

செந்தமிழ்ப் பாக்களைக் கேட்டு ஆனந்தமடைகின்றேன். என்னைச் சந்தோஷப் படுத்துவோர் தங்களைப்போன்ற புலவர்களே. உங்கள் அன்பு இருக்கும் வரையில் எனக்கு என்ன குறையுளது?'' என்று உபசார வார்த்தைகள் கூறி, அவர் மனம் மகிழுமாறு, பரிசில் பல தந்தான். புலவர் அரசனை வாழ்த்தி அகன்றார்.

நான்காவதாக, புலவர்-குட புலவியனார் என்பவர் அரசனைக் கண்டு, "இரு பெரு வேந்தரும் ஐம்பெருவேளிரும் நின்னை எதிர்த்தனர்; நீ அவர்களைத் துரத்தி யடித்துத் தலையாலங் கானத்தில் முறியடித்தனை என்று கேள்விப்பட்டேன். பாண்டிய மன்ன! நின் வெற்றிக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். நின் பகைவர் புண்பட்ட யானைபோலப் புறங்காட்டி யோடினர். நீ பெற்ற வெற்றியை நினைந்து, குறப் பெண்கள் பாடிக்கொண் டிருந்தார்கள். குறவர்கள் ஆடிக் கொண்டிருந்தார்கள். உனது போர்த் திறத்தைக்கொண்டாடிப் பலர் பேசுவாராயினர். முத்தாரமிட்ட உனது மார்பை உனது வெற்றிக்குக் காரணமாக யான் தழுவவில்லையே என்று வருந்துகின்றேன். நீ வாழ்வாயாக'' என்று, பாண்டியனின் போர்த் திறத்தையும், நட்பின் சிறப்பையும், தன் அன்பையும் வெளியிட்டார். அரசன் புலவரை அன்போடு உபசரித்து நல்விருந்தளித்து, அவர் மனம் வெறுக்குமாறு பரிசில் நல்கினான். புலவர் களிப்படைந்து, பாண்டியனிடம் விடைபெற்றுத் தம்மூர் போய்ச் சேர்ந்தார்.

## 9. பாண்டியனும் மிழலைக் கூற்றமும்

சோழநாட்டில் மிழலைக்கூற்றம் என்று ஒரு ஜில்லா இருந்தது. அது மிகச் செழிப்பான இடம். அது காவிரியாற்றின் நீர்ப்பெருக்கால் வற்றாத வளம் பெற்ற நாடு; நல்ல விளைச்சலை யுடையது. மீன் விற்கும் நெய்தல் நிலப்பெண்கள் மீன்களுக்குப் பதிலாக அந்நாட்டில் முத்துக்களைப் பெறுவார்களாம். இதனால், அந்நாட்டின் செல்வ மிகுதி நன்றாய்ப் புலப்படுகிறது.

இவ்வாறு, நீர்வளம் நிலவளம் பெற்ற நாட்டை எவ்வி ஆண்டு வந்தான். அவன் சிறந்த கொடையாளிகளுள் ஒருவன். அவன் இறந்த பின்னர் வேறொரு வேள் அந்த நாட்டை யாண்டுவந்தான். அவன் எக்காரணத்தாலோ, நம் பாண்டியர் பெருமான் சிற்றத்துக்கு ஆளானான்.

பாண்டிய மன்னன் அவ் வேளை எதிர்த்துப் போர் செய்து, அவன் நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்று விருப்பங் கொண்டான். அதனால் அவன் காலதூதர் போன்ற தன் சேனைவீரருடன் மிழலைக் கூற்றத்தை எதிர்த்தான்.

அதனை யறிந்த அச்சிற்றரசன் தன் படைகளைத் திரட்டினான். அஞ்சா நெஞ்சம் படைத்த மாபெரும் மன்னனான பாண்டியன் நெடுஞ் செழியனைத் தன்னால் வெல்ல இயலாது என்பதை அவன் நன்றாய் உணர்ந்திருந்தான். நடக்கப்போகும் போரில் வெல்

வது அல்லது உயிரை இழப்பது என்று தீர்மானித்தான். எனவே, அவன் தன் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, தன் சேனை வீரர் புடைசூழப் பாண்டியனைத் தாக்கினான்.

இரு திறத்தாருக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இரு பக்கத்தாரும் வீராவேசத்துடன் போர் செய்தனர். பல வீரர்கள் இரு பக்கத்திலும் மாண்டனர். பலர் கால்களை யிழந்தனர்; தலை யிழந்தனர் பலர்; உடல் அழிந்தனர் சிலர், தப்பியோடினர் பலர். போரை அதிகநேரம் நீடித்துவைக்கப் பாண்டியன் விரும்பவில்லை. அதனால் அவனே வாளேந்திப் போருக்குப் புறப்பட்டான். அவ்வளவே: வேள் தோல்வியுற்றான் என்று சொல்லவும் வேண்டுமோ? பாண்டிய வீரர் வெற்றிக் கூச்சல் இட்டனர். ஆகவே, பாண்டியன் மிழலைக் கூற்றத்தையும் அதனை யடுத்திருந்த முத்தூர்க் கூற்றத்தையும் பிடித்துக்கொண்டான்.

---

## 10. புலவர் அறிவுறுத்தல்

பாண்டியன் அமைதியோடு நாட்டை ஆண்டுவந்தான். அவன் சிறந்த தமிழ்ப் புலவனாக இருந்தபடியால், புலவர் பெருமையும் தமிழின் அருமையும் அறிந்திருந்தான். அதனால், பல புலவர்கள் அவனைச் சென்று காண்பது வழக்கம். அவனும் புலவர்களை நன்முகத்தோடு வரவேற்று, அவர்களோடு அளவளாவுவான்; அவர்கள் மனம் மகிழும்படி நல்ல பரிசுகளை வழங்குவான்.

ஒரு நாள் குடபுலவியனார் என்ற தமிழ்ப் புலவர் ஒருவர் அரசனை யடைந்தார். அரசன், அவர் மீது அன்பு கொண்டு, அவரை வரவேற்றான். புலவர் பாண்டியனை நோக்கி, "இப் பெரிய உலகத்தில் அழியாத புகழை நிறுத்தி மறைந்த பெரிய அரசர்கள் சந்ததியில் தோன்றிய மன்னனே! நின் வாழ்நாட்கள் அதிகமாகுக. விரிந்த புகழோடு நீ வாழக் கடவை. வாளை, வரால், ஆரல் முதலிய மீன் இனங்கள் வாழும் அகழியை உடையாய்; வானத்தை யளாவி உயர்ந்துள்ள நெடிய மதிலை உடையாய்; நீ, நிலைபெற்ற புகழை இவ் வுலகத்திலே நிலை நிறுத்தி விட்டனை. மறுவுலகத்தில் நின் புகழை நிலை நாட்ட வேண்டுமே. அதற்கு என்ன செய்யப் போகின்றாய்? யான் கூறுவதைக் கேள். அதன்படி நடப்பாயானால், நீ மறுமையில் பேரின்பத்தோடு வாழ்வாய். இவ் வுலகம் எல்லாம் உனக்குச் சொந்தமாயிருப்பினும், பயன் என்? மறு உலகத்தில் நீ உட்கார இடம்

வேண்டுமே. அரசர்களுக்குச் சிறந்தன மறக்கள வேள்வியும் அறக்கள வேள்வியுமே. இவ்விரண்டையும் நீ செய்திருக்கின்றாய். இவ்வுடல் நிலையற்றது. இளமைப் பருவம் நீரில் தோன்றிமறையும் குமிழிக்குச் சமமானது. நிறைந்த செல்வம் நீரில் சுருண்டு ஓடுகின்ற அலைகளுக்குச் சமமானது. நமது உடல், நீரில் எழுதிய எழுத்து உடனே மறைவதுபோல நிலையற்றது. ஆதலால், வேந்தே; நிலையற்ற இவ்வுடலை நிலையுற்றது என்று எண்ணி, பலர் மமதை கொண்டிருக்கின்றனர். நீ அங்ஙனம் இராமல் யான் கூறியபடி நடப்பாயாக. நீ சிறந்த அறிவுள்ளவன்; நல்ல எண்ணம் உடையவன்; ஈவதைத் தவிர்க்காதவன்; என் போன்ற புலவர்களை ஆதரிக்கின்றாய். நீ இப்போது கொண்டுள்ள நற்குணங்களோடும் நற் செயல்களோடும் என்றும் இருக்க வேண்டும். இவற்றில் சிறிது மாறினாலும் நீ துன்பத்தை யடைவாய். ஆதலால், யான் கூறியவற்றை மறவாது நடப்பாயாக'' என்று கூறிமுடித்தார்.

பாண்டியன் பெருங்களிப் படைந்தான்; புலவர் செய்த அறிவுரையைப் புகழ்ந்தான்; அவருக்கு வேண்டும் உபசாரங்களைச் செய்தான்; அவருக்கு வேண்டிய வெகுமதி தந்தான். புலவர் உள்ளம் பூரித்துப் பாண்டியர் பெருமானை ஆசிர்வதித்துத் தம்மூர் போய்ச் சேர்ந்தார்.

---

## 11. அரசியல்

பாண்டியன் - நெடுஞ் செழியன் ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் அரசாண் டிருந்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இவன் நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற விருப்பம் இல்லாதவனா யிருந்தான். ஆனாலும் 'ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்' என்றபடி, சேர சோழர்கள் வலுவிலே வந்து, அவனோடு போர் செய்து, தோற்றுப் போயினர். அதனால், அவர்கள் நாடுகளில் சில பகுதிகள் பாண்டிய நாட்டோடு சேர்ந்தன. வேள் - எவ்வி ஆண்டிருந்த நாடும் இவன் ஆட்சிக்குட்பட்டது. எனவே, ஒரு பெரும் பூபாகத்தைப் பாண்டியன் ஆளவேண்டியவனானான்.

நாடு பெரியதா யிருந்ததால், அதனைச் சிறு பகுதிகளாகப் பிரித்துப் பல சிற்றரசர்களை ஏற்படுத்தி, அப்பகுதிகளை ஆளச்செய்தான்; தன் நாட்டின் பாதுகாப்பைக் கருதி, எல்லைப் புறங்களில் தன் சேனைகளைத் தக்க விடத்தில் இருக்கச் செய்தான். இவன் நாடுகளைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கியதில் இருந்து, நாடு அமைதியுற் றிருந்தது. இவனது அரசியலில் முற்கால வழக்கப்படி அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதுவர், சாரணர் என்ற ஐந்து கூட்டத்தார் முதன்மை பெற்றிருந்தார்கள். இவர்களைத் தவிர, தேசத்தின் ஆட்சியை நடத்துவோரும், வருவாயைக் கவனிப்போரும், நியாயாதிகாரிகளும், சேனைகள் சம்பந்தமான காரியங்களைக்

கவனிப்போரும், அரசன் செய்யவேண்டிய காரியங்களுக்குத் தக்கவாறு வேளை பார்த்துக் கூறும் காலக்கணிதரும் என்ற இவர்கள் அரகாங்கத்தில் சிறந்த உத்தியோகஸ்தர்களாக இருந்தார்கள்.

இவர்களை யல்லாமல் ஒற்றர்கள் என்று ஒரு கூட்டத்தார் இருந்தனர். அவர்கள் ஒவ்வொரு அரசன் தலைநகரத்திலும் இருப்பார்கள். அந்த அந்த அரசனின் நோக்கம், அவன் செய்யும் செயல்கள் இவற்றைக் கவனித்து, தம் அரசனிடம் அறிவிப்பது அவர்கள் வேலை. இங்ஙனம் பல ஒற்றர்கள் பாண்டியன் அரசாட்சியில் இருந்தார்கள். அரசன் அவர்களுக்கு அவ்வப்போது சன்மானம் கொடுப்பது வழக்கம்.

நெடுஞ்செழியன் காலத்தில் அவனுடைய குடிகள் சிறந்த நாகரீகம் பெற்றிருந்தனர். பாண்டியன் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் உடையவனாயிருந்ததால் குடிகளிடத்தில் நிறைந்த அன்புடையவனாய் நடந்துகொண்டான். குடிகளும் அவனை அதிக அன்போடு ஆதரித்தார்கள். அரசன் குடிகளிடம் ஆறில் ஒரு கடமையாக வரிவாங்கி, அப்பொருளை அவர்கள் நன்மைக்கே செலவிட்டான். அவன் போரில் எத்துணைச் சிறந்தவனோ, அத்துணைச் சிறந்தவன் குடிகளை யாள்வதிலும்; இரவிலும், பகலிலும், கனவிலும், நனவிலும் குடிகளது நன்மையிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தான்.

குடிகளுக்கு எத்தகைய குறையிருந்தாலும் அதனை நேரே தன்னிடம் எந்த வேளையிலும் வந்து



கூறலாம் என்று அவன் குடிகளுக்கு அறிவித்திருந்தான். அவனது ஆட்சியில் குடிகள் இன்பத்தை அறிந்தார்களே யல்லாமல் துன்பத்தை யறிந்தார்களில்லை.

பாண்டியனாடு நல்ல வளம்பெற்ற பூமி. அதன் தலைநகரமாகிய மதுரை, வையை என்ற ஆற்றின் கரையிலே அமைந்துள்ள சிறந்த நகரமாகும். பாண்டியநாட்டுக் குடிகள் நல்லவர்கள். தங்களுக்கு நன்மை செய்வோரைக் கனவிலும் மறவார். தீமை செய்வோரை உடனே ஒழித்துவிடுவார்; அரசனைத் தங்கள் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வந்தனர்.

தமிழ் மொழியைக் கற்றுப் பேரறிவினனாய் விளங்கிய பாண்டியன் தமிழுக்குப் பெருமதிப்பைத் தந்தான். பல தமிழ்ப் புலவர்கள் அவன் அவையில் இருந்தனர். புலவர்களுக்குப் பாண்டியன் குறைவின்றிக் கொடுத்துவந்தான். பாண்டிய நாட்டில், கல்வி, செல்வம், வாணிபம், விவசாயம், சிற்பம் முதலியவைகளை அதிகப்படுத்துவதில் பாண்டியன் ஊக்கத்துடன் வேலை செய்தான். அவன் நாற்படைகளையும் பெரிதும் உற்சாகங்காட்டி அன்போடு ஆதரித்து வந்தான்.

## 12. குணாதிசயங்கள்

இனிப் பாண்டியன் நெடுஞ் செழியனின் குணாதிசயங்களை ஆராய்வோம். பண்டைக்காலத்து அரசர்கள் எந் நிலையில் இருந்தார்கள் என்ற விஷயம் இந்நூலில் நன்கு கூறப்பட்டுள்ளது. பாண்டியன் குணாதிசயங்கள் அறிஞர் பாராட்டத் தகுந்தவைகளாகவே இருந்தன.

அவன் இளமைப் பருவத்திலேயே பட்டத்தைப் பெற்றான்; தக்க ஆசிரியனிடத்துப் பயிற்சி பெற்றவனாதலால் அவன் பாண்டிய நாட்டைப் பாங்குற அரசாண்டான். பல பாண்டிய மன்னர் புகழின்றி அரசாண்டு ஒழிந்தனர். நெடுஞ்செழியன் அவ்வாறு இல்லாமல் பாண்டிய குலத்திற்கே பெரும்புகழை நிலை நாட்டி மறைந்தான். அவனிடம் சிறந்த குணங்கள் குடிகொண்டிருந்தன. சிறு வயதிலேயே, தன் மீது பொறாமைகொண்டு வந்த யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைப் போரில் வென்றான். சேரமான் தன்மீது படையெடுத்து வருவதைக் கேள்வியுற்றதும், பாண்டின் சேரமானின் அறியாமையை நினைந்து வருந்தினான். அதினின்றும், அவன் சிறந்த குணம் உடைய அரசன் என்பது விளங்குகின்றது. தானாக வந்த சேரமானைப் போரில் கொல்லாமல், தன் பெருந் தகைமைக்கு ஏற்ப, அவனுக்குப் புத்திமதிகள் பல கூறி அனுப்பிவிட்டான். இவ்வாறு சிறந்த குணம் படைத்தவர் மிகச் சிலரே.



இரு பெரு வேந்தரும் ஐம்பெரு வேளிரும் ஒன்று சேர்ந்து போருக்கு வந்த போதும், பாண்டியன் அவர்கள் அறியாமைக்குப் பெரிதும் இரங்கினான். தாங்களாகவே போர்செய்ய வரும்போது, பாண்டியன் வாளாயிருக்க முடியாதவனாய்ப் போர் செய்தான். வந்தவர்களைக் கொன்று விடாமல் முற்றிலும் தோற்கடித்து விரட்டியது பாண்டியன் கொண்ட பெருந்தன்மையை விளங்குகின்றது.

அவர்கள் தன்னை இழித்துக் கூறினார்கள் என்பதைக் கேட்டதும் பாண்டியன் கோபங் கொண்டான்; அவ் வெழு பேரையும் வெல்லாவிடின், தன்னைக் கொடுங் கோல் அரசன் என்று குடிகள் கூறக் கடவர் என்பதாகச் சபதம் செய்தான் அல்லவா? இவற்றால், அப்பெருமான் பிறர் தன்னை இகழ்வதைப் பொறுக்காதவன் என்பதும், குடிகள் வருந்த, அரசன் கோடுங்கோலனா யிருப்பது மிகக் கோடியது என்பதை நன்கு உணர்ந்திருந்தான் என்பதும் தெரிகின்றன. அவன் கூறிய சபதத்தில் இருந்து, அவன் குடிகளை மகிழ்விப்பதில் நாட்டம் உடையவன் என்பதும் செங்கோல் மன்னன் என்பதும் நன்கு விளங்குகின்றன.

தலையாலங் கானத்தில் தான் வெற்றிபெற்ற செய்தியைப் பற்றிப் புகழ்ந்து பாராட்டிய புலவர்களிடம் அவன், அன்பு, அடக்கம், தருமகுணம் காட்டி அவர்களை உபசரித்து அனுப்பியதில் இருந்து, அவனது தனிப்பட்ட அருங்குணங்கள் குன்றின் மீதிட்ட விளக்கு போல விளக்கமாகின்றன. புலவர்கள் கூறியதில் இருந்து பாண்டியனின் முன்னோர்

களும் வெற்றி வீரர்களாகவும், செங்கோல் அரசர்களாகவும் இருந்தமை நன்கு தெரிகிறது.

புலவர் - குடபுலவியனார் சாதாரண மனிதர். அவர் தனக்குப் புத்தி கூற, அவர் அறிவுரையைப் பாண்டியன் பெருமகிழ்ச்சியோடும், அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொண்டிருந்தான், என்று படித்தோம் அல்லவா? இதனால், பாண்டியன் கல்வியறிவுடையவர்களிடம் எத்தகைய மதிப்பு வைத்திருந்தான் என்பது பெறப்படும். ஒவ்வொரு புலவரும், 'அரசே! நீ ஆற்று மணலினும் பல வாழ்நாட்களைப் பெற்று வாழ்க' என்று, தம் வாயார வாழ்த்தினர். இதனால், அவர்கள் பாண்டியனிடம் எத்துணை அன்பு கொண்டிருந்தார்கள் என்பது அறியக் கிடக்கிறது.

அரசியல் சம்பந்தமாக, பாண்டியன் பல சீர்திருத்தங்களைச் செய்தான். குடிகள் அவனைத் தொழுது வந்தனர் என்றால், அரசனின் அருங்குணங்களை எடுத்துச் செல்லவும் வேண்டுமோ? இத்தகைய பெருமை பொருந்திய பாண்டியன் நெடுஞ் செழியனைத் தமிழ் உலகம் என்றும் மறக்கத்தக்கதன்று.

---

# சேரன் - செங்குட்டுவன்

# சேரன் - செங்குட்டுவன்

## 1. சேர நாடும் சேரரும்

வேங்கடமலைக்குத் தெற்கேயும் கன்னி முனைக்கு வடக்கேயும் வங்காளக் கடலுக்கு மேற்கேயும் அரபிக் கடலுக்குக் கிழக்கேயும் உள்ள நாடு தமிழ்நாடு என்று சொல்லப் பெறும். அந் நாடு மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. அப் பிரிவுகள் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. சேர நாடு என்பது கருவூர்ப் பிரதேசமும், கோயமுத்தூர் சேலம் நீலகிரி ஜில்லாக்களும், மைசூர் நாட்டின் தென்பகுதியும், மேற் கடற் பிரதேசமும் சேர்ந்த நிலப் பரப்பாகும். அந் நாட்டிற்குத் தலைமைப் பட்டினம் வஞ்சிமாநகர் என்பது.

இந் நகரம் மிகப் பழமையானது. இதற்குக் கருவூர் என்னும் பெயர் உண்டு. இப் பழைய நகரின் அமைப்பு அறிய வேண்டுவது அவசியம். ஆதலால், பழைய நூல்களில் கூறியுள்ளபடி சொல்வோம். இவ் வஞ்சிமாநகரின் கோட்டைக்கு வெளியில் தேவர் கோயில்களும், சமணப் பள்ளிகளும், சோலைகளும் பொது விடங்களும், பொய்கைகளும் அதிகமாக இருந்தன. கோயில்களிலும் பள்ளிகளிலும் முனிவர்களும், பேரறிஞரும், சாத்திரவிற்பன்னரும் வாழ்ந்து வந்தார்கள்.

கோட்டையைச் சூழ்ந்துள்ள விடத்தில் அரசனுடைய படை யிருப்புக்களும், அயல் நாட்டார் தங்குவதற்கு அமைந்த மாளிகைகளும் இருந்தன. கோட்டையைச் சுற்றிலும் ஆழமான அகழி ஒன்று இருந்தது. அவ் வகழியில் பலவகை மீன் இனங்களும் முதலைகளும் இருந்தன. அகழிக்கும் கோட்டைக்கும் இடையே காவற்காடு ஒன்று இருந்தது. கோட்டை மதிலில் பலவகை எந்திரங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. அம் மதிலின் வாயில் நகரத்திற்கு வாயாக விளங்கி யிருந்தது. அவ் வாயில் வேலைத்திறன் அமைந்த சிற்பிகளால் அழகாய்க் கட்டப்பட்டிருந்தது.

அந்த வாயிலின் வழியே உட்சென்று பார்த்தால், பல வீதிகளைக் காணலாம். அவற்றில் கோட்டை வாயிலைக் காக்கும் காவலாளிகளும், மீன் விலைஞரும், உப்பு வாணிகரும், பிட்டு அப்பங்கள் விற்போரும், வாசனைப் பண்டங்களை விற்போரும், ஆடுகளை விற்போரும் வசித்து வந்தனர்.

அவ் வீதிகளுக்கு அப்பால் குயவர், கன்னார், பொற் கொல்லர், தச்சர், பொம்மைகள் செய்வோர், மாலை கட்டுவோர், தையல் வேலை செய்வோர், சோதிடநூல் வல்லார், பாணர் முதலாயினோர் உறையும் வீதிகள் இருந்தன. அவைகளையும் தாண்டி அப்பாற் சென்றால் சங்கு அடிப்போர், கல்லிழைப்போர், நாடகக் கணிகையர் முதலானவர்கள் வசிக்கும் தெருக்களைக் காணலாம். கூலவகைகளை விற்போர், மணிவணிகர், ஆடைகளை விற்போர் முதலியோர்



வதியும் தெருக்கள் இருந்தன. அரண்மனைக்கு அருகில் அரசவீதி, அந்தணர்வீதி, அமைச்சர்வீதி, அரசாங்க அதிகாரிகள் வீதி என்றாற் போன்ற பல வீதிகள் இருந்தன.

இவை யல்லாமல் பல பொது விடங்கள் அந்நகரில் பல இடங்களில் அமைந்திருந்தன. தென்றற் காற்று துள்ளி விளையாடும் பூஞ்சோலைகளும், செய்குன்றுகளும், இளமரக்காக்களும் அந்நகரில் அடிமைக்கப்பெற் றிருந்தன. பல அறச்சாலைகள், அம்பலங்கள், தவப் பள்ளிகள் ஆகிய புண்ணிய விடுதிகள் பலவும் அப் பட்டினத்தில் இருந்தன.

நகரின் நடுவில் சேர அரசரது அரண்மனை நடு நாயகமாக விளங்கியது. அவ் வரண்மனையில் பல அழகான மண்டபங்களும் மாளிகைகளும் பந்தாடும் இடமும் பூஞ்சோலை யொன்றும் இருந்தன.

இங்ஙனம், பல துறைகளிலும் சிறந்து விளங்கிய வஞ்சிமா நகரைத் தலைநகராகக்கொண்டு, சேர நாட்டைச் சேரமன்னர் ஆண்டு வந்தனர். இவர்கள் பாண்டிய மன்னர்களைப் போலவே பசுந் தமிழைப் பாங்குடன் வளர்த்து வந்தார்கள்; தமிழ்ப் புலவர்களைத் தண்ணளியொடும் ஆதரித்து வந்தார்கள். இவ்வரசர்களில் சிலர் வடநாட்டு அரசர்களுக்கும் சிற்சில சமயங்களில் உதவி செய்ததாகத் தெரிகிறது. இம் மரபரசன் ஒருவன் உதியன் சேரலாதன் என்பவன். அவன் காலத்திற்கு முன் வடநாட்டில் பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் பெரும்போர் மூண்டது. அப்போது சேரலாதன் அவ் விருதிறத்தார்க்

V211,1 N31 67905

கும் போர் முடியும்வரையில் சோறு போட்டான். பாண்டவர் சேனைக்கும் துரியோதனனுதியர் சேனைக்கும் சோறு போடுவ தென்றால் யாரால் ஆகும்? செய்தற்கு அருமையான அன்னதானத்தைச் செய்த மாபெரும் வள்ளல் உதியன் சேரலாதன். அந் நற் செய்கையால் அவன் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்று பெயர் பெற்றான். இப் பெரிய செய்கையில் இருந்து சேர நாட்டின் பொன்றாத வளமும் சேர வரசரின் தண்ணளித்திறனும் நன்கு விளங்குகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இந்திய நாட்டின் பெரும் பகுதியைத் தனிக்குடையில் ஆண்ட அசோகமன்னன் காலத்திலும் இச் சேரமன்னர் பெருமையோடும் அமைதியோடும் அரசாண்டிருந்தனர். தமிழகம் அசோக மன்னனின் ஆட்சிக்குட்படவில்லை என்றால், தமிழ் வேந்தரின் தனிப் பெருமைதான் என்னே!

## 2. சகோதர அன்பு

பெருமையுற்ற சேர அரசர்களில் இமயவரம்பன் - நெடுஞ் சேரலாதன் என்பவன் ஒருவன். அவன் வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு சேர நாட்டை ஆண்டுவந்தான். அவன் தோள்வலியும் வாள் வலியும் உடையவன். அம்மன்னன் இமயமலை வரையில் சென்று தன் வீரப் பிரதாபங்களைக் காட்டியுள்ளானதலால், இமய வரம்பன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

அம் மன்னனுக்குச் செங்குட்டுவன், இளங்கோ என்ற இரு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் உத்தம அரச இலக்கணங்களைப் பெற்றிருந்தார்கள். யானை யேற்றம், குதிரை யேற்றம் முதலியன கற்றுச் சிறந்த வீரர்களாய் விளங்கினர். அவர்கள் கல்வியினும் தலை சிறந்து விளங்கினர். மக்களின் கூர்ந்த அறிவையும் ஆற்றலையும் கண்ட சேரலாதன் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

ஒரு நாள் சேரலாதன் தன் இரு மக்களையும் நன்றாய் அலங்கரித்துக் கொலுமண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். அரசன் தன் அரியாசனத்தில் அமர்ந்தான். அவனது ஆசனத்திற்குச் சரியான வேறு இரு ஆசனங்களில் இரு மக்களும் அமர்ந்தனர். அவர்கள் இருவரும் அரசனுக்கு இருபுறங்களிலும் வீற்றிருந்த காட்சி, காண்போர் மனதைக் கவரத்தக்க வண்ணம் இருந்தது.

அரசன் கொலு மண்டபத்தில் வந்து அமர்ந்ததும் சிற்றரசரும் பிரபுக்களும், அமைச்சரும் அவனடி

பணிந்தார்கள். அரசன் அரச காரியங்களைக் கவனிக்கலானான். அவ்வமயம் அங்கு இருந்த அவையோரில் சோதிடன் ஒருவன் இருந்தான். அவன் செங்குட்டுவனையும் இளங்கோவையும் மாறி மாறிப் பார்த்தான். ஏதோ எண்ணியவன் போல அந் நிமித்தகன் எழுந்து, சேரலாதனைப் பணிந்து, "மன்னர் பெரும! தங்களுக்கு இரு புறங்களிலும் வீற்றிருக்கும் இச் செம்மல்கள் தங்கள் செல்வப் புதல்வர்கள் என்று நினைக்கிறேன். இவ்விருவர்களில் இளைய குமாரரிடத்தில் உத்தம அரச லட்சணங்கள் அமைந்துள்ளன. தங்களுக்குப்பின் அரச பட்டத்தை இவ் விளவலே ஏற்பர் என்றான்.

அவையில் இருந்த அனைவரும் சோதிடன் கூற்றைக் கேட்டார்கள். அவர்கள் மனம் திடுக்கிட்டுச் செங்குட்டுவனையும் இளங்கோவையும் சேரலாதனையும் மாறிமாறிப் பார்த்தார்கள். அரசன் ஒன்றும் தோன்றாது விழித்தான். அவன் முகம் வாட்டமுற்றது. செங்குட்டுவன் முகம் கரிந்தது. இளங்கோவின் விழிகள் சிவந்தன; கடைப் புருவம் நெற்றி முற்றச் சென்றது. உடல் வியர்த்தது; உதடுகள் துடித்தன. அவன் சோதிடனை வெறிக்கப் பார்த்துக் கோபித்தெழுந்து, "அடா! மதியற்ற சோதிடனே! என்ன சொன்னாய்! பிழையான வார்த்தைகளைக் கொட்டிவிட்டனையே. என்னிடத்தில் என்ன உத்தம லட்சணங்களைக் கண்டுவிட்டாய்? என் அண்ணனிடம் இல்லாத லட்சணங்கள் எவை என்னிடம் உள்ளன? உன் வாய்க்கு வந்த வெல்லாம் கூறிவிட்



டாய். நீ சொன்ன விஷயம் நடக்கக் கூடியதா? நீயே யோசித்துப் பார். மூத்தவன் இருக்க, இளையவன் பட்ட மடைந்தான் என்று எங்கேனும் நீ கேள்வியுற்ற துண்டா? இராம கதையை யறியாயோ? அந்தோ! நிமித்தக! நான் கூறுவதைக் கேள்.

சீராமன் தன் தாய் கோசலையிடம் சென்று, 'அம்மா! என் இளவல் பரதன் பட்டமடையப் போகிறான். நான் காடடையப் போகிறேன்,' என்று கூறியபோது, அவ்வம்மை என்ன சொன்னாள் அறிவையோ? அவள் சீராமனை நோக்கி, 'மைந்த! பரதன் நாடாள்வதைக் கேட்கச் சந்தோஷிக்கின்றேன். அவன், மூன்று உலகங்களில் உள்ளாரை விட நிறைந்த குணங்களை யுடையவன். உன்னைவிடப் பன்மடங்கு நல்லவன்; குணக்குன்றாயவன். என்றாலும், மூத்தவனாகிய நீ இருக்க, இளைஞனாகிய பரதன் பட்டமடைதல் பழுதாயிற்றே. இங்ஙனம் இதுவரையில் ஒருவரும் செய்தாரில்லையே. முறை தவறிய இக் காரியத்தைச் செய்ய நின் தந்தை எப்படி இசைந்தார்?' என்றாள்.

ஆதலால், சோதிடனே; கனவிலும் நினைக்கத் தகாத பழிச் சொல்லைப் பின்பற்றுவது இவ் வரசர் குல மல்ல, என்பதை வற்புறுத்திச் சொல்லுகின்றேன் கேள். நாங்கள் தரும நெறியி னின்றும் தவறி எக்காரியமும் செய்யத் துணியோம்" என்று பேசி முடித்தான்.

இளங்கோ கூறியவற்றைக் கேட்ட சோதிடன் அச்சங் கொண்டான்; தனக்குத் தெரிந்ததை மறைக்

காமற் கூறியது இளங்கோவுக்குச் சிற்றத்தை யுண்டு பண்ணிய தென்பதை நன்கு உணர்ந்தான். அவன் இளங்கோவைப் பார்த்து, "இளவரசே! உமக்குள்ள குறிகளைக் கண்டு எனக்குத் தோன்றியதைக் கூறினேன். என் மீது நீர் சினங்கொள்ள லாகாது. நீர் அதைப் பிழையென்று கருதுவீராயின், என்னை மன்னிப்பீராக" என்றான்.

அப்போது இளங்கோ எழுந்து, "சோதிடனே! என்னிடம் அரசனுக்குரிய லட்சணங்கள் அமைந்திருக்க வில்லை. துறவிக்குரிய லட்சணங்களே அமைந்துள்ளன. நான் துறவறத்தையே மேற்கொள்வேன். இல்லறம் எனக்கு இன்பத்தைப் பயக்காது. ஆதலின், நான் இந் நிமிட முதற்கொண்டு துறவியே. இது முக்காலும் சத்தியம்" என்று கூறி முடித்தான்.

இளங்கோவின் வீர வார்த்தைகளைக் கேட்ட அவையோர் அயர்ந்தனர். அவர்கள், "என்ன! இவ்விளவல் சற்றேனும் முன்பின் யோசியாது இத்தகைய கொடிய விரதத்தை மேற்கொண்டான்! வீடுமன், தந்தையான சந்தனுவின் விருப்பத்தை நிறைவேற்ற, கொடிய விரதத்தைப் பூண்டான். அவ்வீடுமனை ஒத்து விளங்குகின்றான் இவ்விளங்கோ" என்று எண்ணி வாளா விருந்தனர்.

மைந்தனது விரதத்தைக் கேட்ட மன்னவன் மனம் வருந்தினான். அவன் விழிகளில் நீர் அரும்பின. அவன் இளங்கோவை நோக்கி, "மதியுடை மைந்த! என்ன காரியம் செய்தனை? சிறிதேனும் ஆழ்ந்து யோசியாது கேவலம் ஒரு நிமித்தகன் பிதற்றிய வார்த்தைகளைக் கேட்டு வெகுண்டு, இங்ஙனம் துறவியாகத் துணிந்தது முறையோ? நீ அரசனாக முடிசூடி அவனியாள விருப்பம் இன்றேல், இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு இருத்தல் ஆகாதோ? தமையனுக்குத் துணைவனாயிருந்து வாழ்தல் அடாதோ? அன்புள்ள குமர! கொடிய சபதம் செய்து விட்டனையே!" என்று கூறி மனம் வருந்தினான்.



இளங்கோ தந்தையைப் பணிந்து, "தாதையே! யான் பதட்டமாக எதையும் செய்யவில்லை. ஆய்ந்தோய்ந்தே இதனைச் செய்தேன். யான் கூறுவதைக் கேளுங்கள். இல்லறத்தில் இருக்கலாகாதா என்றீர்கள். ஒரு பெண்ணை மணந்து வாழ்வதில் சுகம் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. ஆதலால் யான் துறவறம் மேற்கொண்டேன். மேலும், என் அண்ணனோடு என்னை வாழச் சொன்னீர்கள். பல துட்டர்கள் எனக்குக் கிடைத்து என் அறிவை மாற்றி எனக்கும் என் தமையனுக்கும் பகைமை யுண்டாக்குவார்கள். கலங்காத என் அறிவு கலங்கினும் கலங்கும். அறிவு கலங்கி அருமை அண்ணனோடு மனவருத்தம் கொள்ளுதலில் என்ன பயன்? இவற்றை எல்லாம் முன்னர் யோசித்தே யான் துறவு மேற்கொண்டேன். என் அருமைத்தந்தையே! என்னை மன்னித்து, ஆசீர்வதிப்பீர்களாக" என்று கூறிப் பணிந்தான்.

அதுவரை நடந்த செய்திகளை யெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தான் செங்குட்டுவன். தன் இளவல் தன்னிடம் கொண்டுள்ள அன்பை எண்ண

எண்ண அவன் மனம் மகிழ்வெய்தியது. "என்ன ஆச்சரியம்! உலகில் இத்தகைய தம்பியும் உளனோ! அருங் குணமும், சீரிய அறிவும், விரிந்த நோக்கமும் கொண்ட இவ்விளையானை என் தம்பியாகப் பெற யான் முற்பிறப்பில் எத்தவத்தைச் செய்தேனோ! என் பாக்கியமே பாக்கியம்" என்று எண்ணி மகிழ்ந்தான். அவன் விழிகளில் ஆனந்த நீர் அரும்பியது. செங்குட்டுவன் இளங்கோவைத் தன் இரு கரங்களாலும் அணைத்து, "என் ஆருயிர் அனையாய்! சகோதர அன்பும், புனித வாழ்க்கையும், பரிசுத்த எண்ணமும் உடைய உன்னைத் தம்பியாகப்பெற்ற எனக்கும் குறைவுண்டோ? நான் முற்பிறப்பில் நல்வினை செய்தவன் என்றே எண்ணுகின்றேன். அப்பா! நான் உன் விருப்பப்படி அரசை யேற்றுக் கொள்வேன். ஆனால், நீ எனக்கு உற்ற துணையாக இருக்க வேண்டும். நீ என்னை விட்டு அகன்றால் என் வாழ்க்கை பயனற்றதாகும். உன்னை விட்டுப் பிரிய யான் இசையேன். ஆதலின், நம் குலம் நற்பெயர் பெற்று விளங்க வேண்டுமாயின் நீ என்னை விட்டகலாதிருக்க வேண்டும். என் அருஞ் செல்வ! உன் முன்னோன் வேண்டுதலை நிறைவேற்றுவாயாக" என்றான்.

இளங்கோ, "அண்ணா! தங்கள் விருப்பப்படி யான் தங்களுடனே யிருப்பேன். தாங்கள் கவலை கொள்ள வேண்டா" என்று வாக்குறுதி தந்தான். அன்று முதல் யாவரும் இளங்கோவை இளங்கோவடிகள் என்றழைக்கத் தலைப்பட்டனர்.

---

## 3. செங்குட்டுவன் போர்ச் செயல்கள்

செங்குட்டுவன் பட்டத்தை வகிக்கத் தக்க வயதடைந்தபோது சேரலாதன் சேரன்-வேற் பஃறடக்கை பெருநற்கிள்ளி என்பானுடன் பெரும் போர் செய்தான். அப்போரில் இருவரும் ஒருங்கே இறந்துபட்டனர். சேரலாதன் இறக்கவே அவனது மனைவியும் செங்குட்டுவன் தாயுமான நற்சோணை என்பவள் உயிர் நீத்தாள். சேரன்-செங்குட்டுவன் சேர அரசனானான்.

செங்குட்டுவன், இறந்த தன் தாயைப் போல் சிலை யொன்று செய்ய விருப்பங் கொண்டான். தான் விரும்பிய வண்ணம் உயர்தரக்கல்லில் தன் தாயைப் போன்ற உருவம் ஒன்றைச் செய்வித்தான். அச்சிலையைக் கங்கையாற்றில் நீராட்டிக் கொண்டுவர எண்ணங்கொண்டான்; ஒரு பெரும் படையொடு சிலையை எடுத்துச் சென்றான். தென்னாட்டரசன் வடநாட்டிற்கு வருவதை யுணர்ந்த வட்நாட்டு ஆரிய அரசர் ஆயிரம்பேர் ஒன்று சேர்ந்து பெரும் படையுடன் வந்து அவனைத் தாக்கினர். தென்னாட்டுச் சிங்கமான செங்குட்டுவன் அஞ்சுபவனோ? அவன் ஆயிரம் அரசர்களையும் கங்கையாற்றங் கரையில் தோற்கடித்தான். சேரன் செங்குட்டுவனின் வீரத்தை யுணர்ந்த வடநாட்டரசர் ஓடி யொளித்தனர். அரசன், சிலையைக் கங்கை யாற்றில் நீராட்டுவித்து, தன் நாட்டிற்குக் கொணர்ந்தான்.

சிறிது காலஞ் சென்ற பின்னர், எக் காரணத்தை முன்னிட்டோ, சேரன் சோழபாண்டியரோடு கொங்கர் செங்களம் என்ற இடத்தில் போர் நடத்தினான். சேரன் முடியுடை மன்னர் இருவரையும் அப்போரில் தோற்கடித்து, அவர்கள் கொடி முதலான சின்னங்களைக் கைக்கொண்டான்.

அதன் பின்னர், சேரன், செருக்குக் கொண்டிருந்த 'கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், கட்டியர், வடவாரியர்' முதலான பலதிறப் பட்ட வேந்தர்களோடு போர்செய்து, அவர்கள் அனைவரையும் வென்றி கொண்டதாகத் தெரிகிறது. இவ்விஷயங்களைச் சிலப்பதிகாரம் என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

ஒரு முறை சேரன் கடலருகேயிருந்த 'வியலூர்' என்ற ஊரைக் கைக்கொண்டான். அதற்கப்பால் சோழநாட்டில் கலகம் ஏற்பட்டது. சோழநாட்டையாண்டுவந்த சோழன், செங்குட்டுவனுக்கு அம்மான். அவன் இறந்ததும், அவன் மைந்தன் பட்டத்தையடைந்தான். அதனாற் பொறாமை கொண்ட சோழ வம்சத்தினர் ஒன்பதுபேர் நாட்டில் கலகஞ் செய்தனர். பட்டத்தைப் பெற்றவன் செங்குட்டுவனுக்கு அம்மான் மகனாக வேண்டும். ஆதலால், சேரன் தன் மைத்துனனுடைய பகைவரைத் தொலைக்க விரும்பினான். அவன் பெரும்படையுடன் புறப்பட்டு அவ்வொன்பதின்மரையும் நேரிவாயில் என்ற விடத்தில் ஒரே பகலில் கொன்று, தன் மைத்துனனை அரியாசனத்தில் சரியாக வீற்றிருக்கச் செய்தான்.



பழையன் என்னும் வீரன் ஒருவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும், ஒருவரும் இலர் என்று பெருமிதங் கொண்டிருந்தான். அவன் செருக்கைச் சேரர் பெருமான் அடக்க விரும்பினான். சேரன் பெரிய சேனையைக் கூட்டிக்கொண்டு சென்று பழையனோடு போர் நடத்தி, அவனைப் போரில் வென்றான்; அவனது காவல் மரமாகிய வேம்பினை அடியோடழித்தான். அவனுடைய யானைகளைக் கடாக்களாகவும் அவன் மகளிரது கூந்தலைத் திரித்துக் கயிறாகவும் கொண்டு வண்டியில் இழுப்பித்தான்.

இங்ஙனம் சிறந்த போர்களை நடத்தி வெற்றி பெற்ற சேரன்-செங்குட்டுவன் தமிழ் நாட்டில் மன்னர் மன்னனாக விளங்கினான். அவனது ஆருயிர்த் தம்பியான இளங்கோவடிகளும் அவனுடன் வசித்து வந்தார்.

## 4. வீர பத்தினியின் வரலாறு

செங்குட்டுவன் வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டை அரசாள்கையில், சோழன்-கரிகாலன் என்பவன் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டு சோழநாட்டை யாண்டுவந்தான். அதே காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை நெடுஞ் செழியன் என்போன் அரசாண்டுவந்தான்.

அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகுலத்தில் மாசாத்துவான், மாநாய்கன் என்ற இருவர் செல்வர் இருந்தனர். மாசாத்துவான் மகனான கோவலனுக்கு மாநாய்கான் மகளான கண்ணகியை மணஞ் செய்தார்கள். கோவலனும் கண்ணகியும் தனித்து இல்லறம் நடத்தினார்கள். கண்ணகியின் நற்குண நற்செய்கைகளைக் கண்டு மகிழ்ந்த கோவலன் அவளைப் பலவாறு புகழ்ந்து போற்றலானான்.

இவ்வாறு இருக்கும் நாட்களில் ஒரு நாள் கோவலன், மிக்க அழகுடையவளும் ஆடல் பாடல்களில் தேர்ச்சி பெற்றவளுமான மாதவி என்னும் நாடகக் கணிகையை விரும்பித் தன்னிடத்துள்ள பொருள்களை யெல்லாம் இழந்தான்; சில காலம் அம்மாதவியோடு இன்புற்றிருந்தான். அது சமயம் கணவன் பிரிவாற்றாது கண்ணகி துன்புற்றிருந்தாள். நிற்க,

அவ்வூரில் வருடாவருடம் இந்திர விழா நடப்பது வழக்கமாயிருந்தது. அவ்விழாவின் முடிவில்



அந் நகரத்தார் கடலாடுதற்குச் சென்றார்கள். கோவலனும் மாதவியும் போனார்கள்: இருவரும் ஓரிடத்தில் அமர்ந்தனர். கோவலன் மாதவியின் யாழை வாங்கிப் பலவகைப் பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடினான். அப் பாடல்கள் மாதவி மனத்தைப் புண்படுத்தின. ஏனெனில், அவை கோவலன் வேறு மகளிர்பால் விருப்புடையவன் என்பதைத் தெரிவித்தன. உண்மையில் கோவலன் பிறர்பால் விருப்பங்கொண்டவன் அல்லன். மாதவி, அவ் யாழை வாங்கித் தானும் சில வரிப்பாட்டுக்களைப் பாடினாள். அவை, அவள் வேறு ஆடவர்பால் நாட்டம் உடையவள் என்பதைப் புலப்படுத்தின. ஆனால், மாதவி உண்மையில் அவ்வாறு நாட்டம் உடையவள் அல்லள்! 'கோவலன் பாடினானே, நாமும் பாடுவோம்' என்று எண்ணியவளாய் அவள் பாடினாள்.

கோவலன் அவள்மீது வெறுப்புற்று, அக்கணமே அவளை விட்டு நீங்கினான். நீங்கித் தன் மனையாள் இல்லத்திற்கு வந்தான். வந்து, தன் எளிமை தோன்ற நின்றான். அவன் படும் துன்பத்தைக் கண்ட கண்ணகி, "என்னிடத்து இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கைக்கொண்டருள்க" என்றாள். கோவலன், "நான் மதுரைக்குச் சென்று இச்சிலம்பை விற்று, அப்பொருளை வாணிக முதலாகக் கொண்டு வியாபாரம் செய்ய விரும்பியுள்ளேன். நீயும் என்னுடன் வருக" என்றான். அவளும் உடன்பட்டாள்.

அன்றிரவின் கடையாமத்தில் இருவரும் புறப்பட்டு, காவிரியின் வடகரை வழியாக மேற்கே சென்று

ஒரு பூஞ்சோலையை யடைந்தனர். அங்கே கவுந்தி யடிகள் என்ற சமண சமய அம்மையாரைக் கண்டு, மதுரை செல்ல இசைந்த அவரையும் உடன் அழைத்துக்கொண்டு, மூவரும் மதுரை நோக்கிச் செல்வாராயினர். வழியில் ஸ்ரீரங்கம் தென்பட்டது. மூவரும் அங்கு வந்த சாரணர்களைத் தரிசித்து, ஓடமேறிக் காவிரியின் தென்கரை சேர்ந்து ஒரு பொழிலில் தங்கினர். அவ்வமயம் கோவலனையும் கண்ணகியையும் அவமதித்துப் பேசிய பரத்தை யொருத்தியையும் தூர்த்தன் ஒருவனையும் கவுந்தியடிகள் நரிகளாகச் சபித்தார். பின்னர், மூவரும் உறையூரையடைந்தனர்.

மூவரும் உறையூரில் அன்றிரவு தங்கி மறுநாட் காலையிற் புறப்பட்டனர். செல்லுகையில் ஒரு நாள் கோவலன் குடிக்கத் தண்ணீர் கொண்டுவரத் தனியே சென்றான். அப்போது கௌசிகன் என்னும் அந்தணன் ஒருவன் மாதவியால் அனுப்பப்பட்டு அங்கு வந்தான். கோவலன் பிரிவாற்றாது அவனது பெற்றோர் வருந்துவதையும் மாதவி படும் துயரையும் மறையோன் எடுத்துக் கூறினன். கோவலன் மனம் வருந்தி, தன் வணக்கத்தைத் தன் பெற்றோர்க்குக் கூறுமாறு சொல்லி யனுப்பினான். பின்னர்க் கோவலன் கண்ணகியையும் கவுந்தியையும் அழைத்துக் கொண்டு சென்று, வையை யாற்றைக் கடந்து, மதுரையின் மதிற்புறத்ததாகிய முனிவர் ஆச்சிரமத்தில் தங்கினான்.

மறுநாள் கோவலன் தனியே புறப்பட்டு மதுரைக்குள் சென்றான்; அம்மாநகரின் வளப்பத்தைப்



பார்த்து மீண்டான். அப்போது மாதரி என்ற இடைச்சியர் தலைவி ஆச்சிரமத்திற்கு வந்தாள். கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் மாதரியிடம் அடைக்கலமாக விட்டார். மாதரி இருவரையும் அழைத்துச் சென்று, குறைவின்றி அன்னம் படைத்தாள். கோவலன் கண்ணகியின் சிலம்பை எடுத்துச் சென்று மதுரைக்குள் நுழைந்தான்.

நுழைந்து கடை வீதியாகச் செல்கையில், பலர் பின்னே வரப் பொற்கொல்லன் ஒருவன் வந்தான். கோவலன் அவனை யணுகி, "ஐய! இச்சிலம்பு அரசிகள் அணியத் தக்கது. இதனை விலை மதிக்க உன்னால் ஆகுமோ?" என்றான். பொற்கொல்லன் "ஐய! இச்சிலம்பு எமது அரசியே அணியத்தக்கது. இதனை யான் அரசனுக்குக் காட்டி வருமளவும் நீர் இங்கு இரும்" என்று கூறி, அரண்மனையை நோக்கி நடந்தான். நடந்து செல்லுகையில் பொற்கொல்லன், "யான் முன்பு வஞ்சித்துக் கவர்ந்து கொண்ட சிலம்பு என்னிடம் உள்ள தென்று அரசன் அறியா முன்னம் அதனோடு ஒத்த இச்சிலம்பைக்கொணர்ந்த இப்புதியவனால் என் மீது உள்ள ஐயத்தைப் போக்கிக் கொள்ளலாம்" என்று எண்ணிக் கொண்டான்.

பொற்கொல்லன் அரண்மனையை நெருங்கினான். அவ்வமயம் பாண்டியன்-நெடுஞ்செழியன் விரைவாக அந்தப்புறம் நோக்கிச் சென்றுகொண் டிருந்தான். பொற்கொல்லன் அவனைப் பணிந்து, "அரசே! கன்னக்கோல் முதலியன இல்லாமல் அரண்மனையில் இருந்த சிலம்பைத் திருடியவன் அடியேனுடைய

சிறு குடியில் இச்சிலம்போடு வந்துள்ளான்" என்றான். பாண்டியன் உடனே காவலாளிகளை யழைத்து "என் மனைவியின் சிலம்பு இவன் கூறிய கள்வனிடத்து உள்ளதாயின், அவனைக் கொல்லுதற்கு அச்சிலம்போடு கொண்டுவருக" என்று சொல்ல வாயெடுத்தவன், வினை பலிக்கும் காலமாதலால் நாக்குழறி, "அவனைக் கொன்று அச் சிலம்பைக் கொணர்க" என்று கூறிப் போந்தான்.

காவலாளிகள் பொற்கொல்லனோடு கோவலனை யடைந்தார்கள். மாசற்ற முகத்தோடு விளங்கிய கோவலனைக் கள்வன் என்றுநினைக்க அவர்கள் மனம் இடம்தரவில்லை. அவர்கள் அவனைக் கொல்லவும் விரும்பவில்லை. அதுகண்ட பொற்கொல்லன் காவலாளிகள் மனமாறுதல் அடையும்படி, களவுநூலில் உள்ள பல விஷயங்களை யெடுத்துக்கூறி, கோவலன் கள்வனே என்று எண்ணுமாறு செய்தான். அதன்மேல் கொலையஞ்சான் ஒருவன் விரைந்துசென்று கோவலனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகிக்கு எட்டியது. அவள் அறிவு கலங்கி அழுது அரற்றி, "கதிர்ச் செல்வனே! நீயறிய என் கணவன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்" என்றாள். அப்பால், கண்ணகி மதுரையுள் நுழைந்து, வெட்டுண்டு கிடந்த கோவலனைச் சிலர் காட்டக்கண்டு, அவனுடம்பைத் தழுவினாள். அவ்வளவில் கோவலன் உயிர்பெற்றெழுந்து "மதிபோன்ற முகம் வாடியதே" என்று



சொல்லிக் கையாலே அவள் கண்ணீரை மாற்றினான். கண்ணகி அழுதுகொண்டே அவன் பாதங்களிற் பணிந்தாள். உடனே அவன், "நீ இங்கிருக்க" என்று கூறிச் சுவர்க்கம் அடைந்தான்.

பின்னர்க் கண்ணகி தலைவிரிகோலமாகப் பாண்டியன் முன்னர் நின்றாள்; தன் வழக்கை யுரைத்தாள்; தனது சிலம்பை யுடைத்தாள். அதினின்றும் மாணிக்கப் பரல் தெரிந்தது. அரசனது பத்தினியின் சிலம்போ முத்துப்பரல்கள் கொண்டது. அப்பொழுதுதான் பாண்டியன் உண்மையுணர்ந்தான். "இழிந்த பொற்கொல்லன் வார்த்தையைக் கேட்ட யானோ அரசன்! மிகவும் புகழ்படைத்த தென்னவர் மரபு என்னால் பாழாயிற்றே" என்று கூறி ஆதனத்தினின்றும் கீழே வீழ்ந்தான்; உயிர் துறந்தான். அவனது திருமாபத்தினி கோப்பெருந்தேவியும் உயிர்நீத்தாள்.

அதன் பிறகு, கண்ணகி, "நான் பத்தினியாயின் இவ்வூரை யழித்துவிடுகிறேன் பார்" என்று சபதஞ் செய்து, தனது இடக்கொங்கையை வலக்கையால் திருகியெடுத்து, நகரத்தின்மீது எறிந்தாள். உடனே அக்கினிதேவன் பார்ப்பனக்கோலத்தோடு வந்து, "மாபத்தினி! யான் என்ன செய்ய வேண்டும்?" என்றான். கண்ணகி, "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவி என்னும் இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்றாள்.

அப்பொழுதே அந்நகரில் தீப்பற்றிக்கொண்டது. நகரைக் காக்கும் தெய்வங்கள் ஓடிவிட்டன.

மதுரையின் அதிதேவதை கண்ணகியிடம் வந்து, " அம்மா! உனக்கு ஒன்று சொல்ல வந்தேன். இப் பாண்டியன் குற்றம் உடையவன் அல்லன். நீ முற்பிறப்பில் சிங்கபுரத்தில் பரதன் என்பவனது மனைவியாயிருந்தாய். பரதன் இப்பிறப்பில் கோவலனாக வந்தான். அவன் சங்கமன் என்றவன்மீது பொறாமை கொண்டு, அவன் பகையரசனது ஒற்றன் எனத் தன் அரசனிடம் கூறி, அவனைக் கொல்லச் செய்தான். அச்சங்கமனே பொற் கொல்லனாகப் பிறந்தான். சங்கமன் மனைவி கணவன் பிரிவால் பதினான்குநாள் வருந்தி, பின்பு ஒரு மலையின்மீதேறிக் கணவனைச் சேர்தற்பொருட்டுத் தன் உயிரைவிடத் துணிந்தவள், 'எமக்குத் துன்பஞ் செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைக' என்று சாபமிட்டிறந்தாள். அச்சாபம் உங்களைத் தொடர்ந்தது. நீ இற்றைக்குப் பதினான்காம் தினத்தன்று பகல்சென்ற பின்பு, உன்னுடைய கணவனைக்கண்டு சேர்வாய்" என்று கூறி மறைந்தது.

கண்ணகி மதுரையினின்றும் நீங்கி வையைக் கரை வழியே மேற்கே சென்று மலைநாட்டை யடைந்தாள். அடைந்தவள், திருச்செங்குன்றம் என்னும் மலைமீதேறி ஒரு வேங்கை மரநிழலில் நின்றாள். அப்போது அங்கு வானுலகினின்றும் விமானம் வந்து இறங்கியது. அதில் கோவலன் வீற்றிருந்தான். கண்ணகி விமானத்தில் உட்கார்ந்தாள். தேவர்கள் போற்றும்படி வீரபத்தினி சுவர்க்கம் புகுந்தாள்.

---

## 5. பத்தினிக்காலயம் எடுக்க நினைத்தல்

கண்ணகி மலையுச்சியில் இருந்து வானுலகம் புகுந்ததை மலைநாட்டு மக்களான வேடர்கள் பார்த்திருந்தார்கள். அற்புதமான அவ்விஷயத்தை அரசனுக்கு அறிவிக்கவேண்டும் என்று அவ்வேடர்கள் விரும்பினார்கள். அரசனைச் சென்று காணவேண்டி அவர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் தமிழ்ப் புலவர் ஒருவர் செங்குட்டுவனைக் காண வந்திருந்தார். அப்போது அரசன் தன் மனைவியான இளங்கோவேண்மாள் என்பாளுடன் மலைவளத்தைக் காணச் சென்றான். சாத்தனாரும் உடன்போயினர். அரசன் பரிவாரங்களும் அரசனைப் பின்பற்றின. அரசன் பெரியாற்றங்கரையின் மணற் பரப்பில் தங்கினான். அதுசமயம் குன்றக் குரவர் மலைநாட்டுப் பழங்களையும் கிழங்குகளையும் தேனையும் புட்பங்களையும் மற்றும் பலவிதமான பொருள்களையும் எடுத்துவந்து அரசனைப் பணிந்தனர். பணிந்து,

" எழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்தன மிழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி

வானவர் போற்ற வானகம் பெற்றனள் ;
எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்னாட் டியாங்கள் நினைப்பினு மறியேம்''

என்று அரசனை நோக்கிக் கூறினர்.

குறவர் கூற்றைக் கேட்ட சேரன் - செங்குட்டுவன் வியப்புற்று ஒன்றும் தோன்றாது விழித்தான் அவ்வமயம் அருகில் இருந்த தண்டமிழ்ச் சாத்தனார் சேரனை நோக்கி, "அரசர் பெரும! யான் அறிகுவன் அவள் வரலாற்றை" என்று கூறி, வீரபத்தினியின் வரலாற்றை விரிவாகக் கூறினார்.

வீரபத்தினியின் வரலாற்றைக்கேட்ட சேர மன்னவன் வருத்தமுற்றவனாய், "புலவீர்! எம்மையொத்த பாண்டிய மன்னன் செங்கோலினின்றும் வழுவினான். அதனால் அவன் செங்கோல் வளைந்தது. அவன் தான் செய்தது பிழையென்று உணர்ந்ததே உயிர்நீத்தான். அதனால் அவனது வளைந்தகோல் நிமிர்ந்தது. அரசர்களாயிருப்பார்க்கு நாட்டில் மழை பெய்ய வேண்டிய காலத்திற் பொய்த்துப் போனால் துன்பம் உண்டாகும். உயிர்கள் பிழை செய்யுமாயின் துன்பம் விளையும். கொடுங்கோலுக்கு அஞ்சி அரசராயிருத்தற்குரிய உயர் குலத்தில் பிறத்தலில் துன்பமே யன்றி இன்பம் ஒன்றும் இல்லை" என்று கூறினான். பின்னர்ச் சேரன் தன் தேவி இளங்கோ வேண்மாளை நோக்கி, "நன்னுதால்! கணவனோடு உயிர்விட்ட காரிகை சிறந்தவளா? வீரத்தோடு மதுரையை எரித்து நம் நாட்டை யடைந்து சுவர்க்கம்



புகுந்த வீரபத்தினி சிறந்தவளா? அறிந்து கூறுக" என்றான். அரசி, "மன்னவ! தன் கணவன் உயிர் நீத்தான் என்பதை யுணர்ந்து உடன் உயிர் நீத்த கோப் பெருந்தேவி வானுலகத்தில் செல்வத்துடன் வாழ்கின்றாள். நமது நாட்டை நோக்கிவந்த வீரபத்தினியை நாம் சிறந்தவளாக எண்ணி, அவளை வழிபடல் வேண்டும்" என்றாள்.

வேந்தன், மனையாள் விருப்பத்திற்கு இணங்கியவனாய்த் தன் அமைச்சரை நோக்கினான். அவன் குறிப்பை யுணர்ந்த அமைச்சர் அரசனைப் பணிந்து, வேந்தே! பொதிய மலையினின்றும் படிவம் சமைத்தற் குரிய சிலையை எடுத்து வரலாம்; அவ்வாறு எடுத்துவந்தால், அதனைக் காவிரியாற்றில் நீராட்ட வேண்டும். அங்ஙனமின்றி, சிலையை இமய மலையினின்றும் கொண்டுவரலாம். அவ்வாறு கொணர்ந்தால், அதனைக் கங்கை யாற்றில் நீராட்டல் வேண்டும்" என்றனர்.

அதுகேட்ட சேரர்பிரான் "பொதிய வெற்பினின்றும் கல்லைக்கொணர்ந்து, காவிரியில் நீராட்டுதல் பெருமையுற்ற சேரவரசர் செய்யும் செய்கையன்று; ஆதலால், இமயமலையினின்றே கல்லைக் கொண்டு வரலாம்; நாம் அவ்வாறு செய்வதை வடநாட்டரசர் தடுப்பாராயின், நம் பெருஞ்சேனையோடு வஞ்சிமாலை சூடிச்சென்று நம் வீரத்தைக் காட்டிச் சிலையைக் கொணர்வோம்" என்று வீராவேசத்துடன் பேசினான்.

அப்பொழுது அச்சபையில் இருந்த வில்லவன் கோதை என்னும் அமைச்சன் எழுந்து நின்று, "அரசே! முன்னர், கொங்கர் செங்களம் என்னும் போர்க்களத்தில் சோழனும் பாண்டியனும் தோல்வியுற்று, நீ வெற்றி பெற்றபோது அச்செய்தி உலகம் முழுவதும் பரந்ததல்லவோ? அது உன் புகழை நிலைநிறுத்தியது. இன்னும், கொங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், பல்வேல் கட்டியர் ஆகிய அரசர்கள் வட ஆரியரோடு சேர்ந்து நின்னோடு பொருதார் அல்லரோ? அப்போது நினது சேனை போர் செய்த திறமும் நீ, உனது யானையைச் செலுத்திய ஆற்றலும் இன்னும் என் கண்களைவிட்டு நீங்கவில்லை. அன்றியும், எனது அரசியும் நினது தாயுமான நற்சோணை மரித்தபோது அவள் சிலையைக் கொண்டுவர வடநாட்டிற்கு நாம் சென்றோம். சிலையைக் கங்கை யாற்றில் நீராட்டிய போது உன்மீது கோபித்துவந்த ஆரிய அரசர் ஆயிரவர்க்கும் ஒருவனாய் நின்று நீ போர் நடத்திய கோலத்தைக் கடுங்கட் கூற்றமும் கண்விழித்துக் கண்டதல்லவா? இவ்வாறு பெறுதற்கரிய ஆற்றல் பெற்ற நீ, வடநாட்டி யாத்திரை செய்ய விரும்புவாயானால், நின்னை எதிர்க்கத்தக்க அரசர் யாருளர்? எதிர்த்தாலும், நின்னை வெல்ல அவர்களால் ஆகுமோ? ஆதலால், நீ வடநாட்டிற்குச் செல்லும் செய்தியை அங்குள்ள மன்னர்க்கு முன்னதாகவே எழுத்து மூலமாய் அறிவிக்கவேண்டும்" என்றான்.



அது கேட்ட அழும்பில் வேள் என்னும் வேறொரு அமைச்சன் எழுந்து அரசனைப் பணிந்து, "மன்னவ! நாம் புறப்படும் செய்தியை வடநாட்டரசர்க்கு அறிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. எந்நாட்டு ஒற்றர்களும் நம் நாட்டில் இருக்கிறார்கள். ஆதலால், நமது வஞ்சிமா நகரில் பறையறைவித்து நமது பிரயாணத்தை அறிவித்தால் அவ்வொற்றர்களே இச்செய்தியைத் தத்தம் அரசர்க்கு அறிவிப்பார்கள். இதுவே நல்ல முறையாகும்" என்றான்.

செங்குட்டுவனும் அதனை ஒப்புக்கொண்டான். பின்னர்ச் செங்குட்டுவன் ஆணையின்படி, அவன் வடநாட்டு யாத்திரை செய்வதைப் பற்றி நகரெங்கும் பறையறைவிக்கப் பட்டது. பட்டத்து யானைமீது பறையேற்றி "எம் அரசர் பத்தினிக்குப் படிவம் சமைக்கச் சிலைகொண்டு வரும்பொருட்டு இமயமலைக்குச் செல்கின்றார். வடநாட்டு அரசர்கள் தத்தம் திறையோடு எம் அரசரைக் காண வருக. இல்லாவிடின், நாட்டை விட்டுக் காட்டை யடைக" என்று பறையறைவித்த ஒசை நகரெங்கும் பரந்தது.

நகரில் பறை யறைவித்த பின்னர், சேரன் தன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். புரோகிதன், அமைச்சர், சேனைத் தலைவர் ஆகிய இவர்கள் அரசனைச் சூழ்ந்திருந்தனர். அப்போது சேரன், "சபையீர்! வடநாட்டில் முன் ஒரு முறை சுயம்வரம் நடந்தது. அதற்கு வடநாட்டரசர் யாவரும் சென்றிருந்தனர். அப்பொழுது அவர்கள், 'தென்னாட்டு வேந்தர் சிறிதும் அச்சம் இன்றி நமது நாட்டைக் கடந்து

இமயம் சென்று, அம் மலையில் வில், புலி, கயல் ஆகிய சின்னங்களைப் பொறித்தனராம். அப்போது நாம் இல்லா தொழிந்தோம். இருந்திருப்போமாயின், அவர்களை வர விட்டிரோம்' என்று தமிழரசரது ஆற்றலை அறியாது இகழ்ந்து கூறினர் என்று இமய மலையினின்றும் இங்கு வந்த சிலர் மூலமாய் அறிந்தேன். இவ்விகழ்ச்சியைத் தமிழ்வேந்தர் கேட்பரோ? இருக்கட்டும்; யான் பெரும் படையொடு சென்று அவ்வடநாட்டரசர்களையும் அவர்கள் தலைவரான கனக விசயர் என்போரையும் வென்று, அவ்விருவர் தலைமீதும் பத்தினிக்கல்லை எற்றி வருவேன். அங்ஙனம் செய்யேனாயின், நான் கொடுங்கோலனாகக் கடவேன்" என்று சபதஞ் செய்தான்.

அப்பொழுது புரோகிதன் எழுந்து, "வேந்தே! வடநாட்டரசர் நின்னை இகழ்ந்தாரில்லை. சோழ பாண்டியரையே அவர்கள் இகழ்ந்தனர். நினது வீரச் செயல்களை அவர்கள் அறியாதவர்கள் அல்லர்; நின் கோபம் தணிக" என்று கூறினன்.

உடனே காலக் கணிதன் எழுந்து பணிந்து, "அரசே! வாழ்க நின் கொற்றம், நிலவுலகத் தரசரை உன் அடிக்குக் கீழாக்கத் தக்க நல்ல முகூர்த்தம் இதுவேயாம். வட நாட்டியாத்திரைக்குத் தக்க காலம் இதுவே" என்று சொன்னான்.

அரசன் அது கேட்டு மகிழ்ந்தான். அரண்மனை முரசம் அதிர்ந்து முழங்கியது. அரசன் தன் வாளையும் குடையையும் அந்த நல்ல முகூர்த்தத்தில் வடதிசை நோக்கிப் பெயர்த்து வைக்கக் கட்டளையிட்



டான். உடனே போர் வீரர் ஆரவாரஞ் செய்தனர். பகைவர் கண்டு அஞ்சத்தக்கதான படைகள் மணி விளக்குகளோடும் துவசங்களோடும் முன்சென்றன. ஐம்பெருங் குழுவும், எண் பேராயமும், கரும வினைஞரும், கணக்கியல் வினைஞரும், தரும வினைஞரும், தந்திர வினைஞரும் மன்னனை வாழ்த்திப் பட்டத்தி யானைமீது அரசனுடைய வாளையும் குடையையும் எற்றி நகர்க்கு வெளியே இருந்த கோட்டத்தில் பெயர்த்து வைத்தனர்.

பின்னர் யாவரும் அரச சபையை அடைந்தார்கள். அன்று அரசன் தனது படைத் தலைவர்க்குப் பெருஞ் சோற்றை வழங்கினான். பின்பு, அரசன் வஞ்சி மாலையைத் தன் மணி முடியில் அணிந்து, மறுநாட் காலையில் யாத்திரைசெய்யச் சித்தமா யிருந்தான்.

---

## 6. படிவம் சமைக்கச் சிலையைக் கொணர்தல்

மறுநாட்காலையில் அரண்மனை முரசம் அதிர்ந்து முழங்கியது. சேரன் படுக்கையைவிட் டெழுந்து, பரிசுத்த நீரில் நீராடித் தன் வழிபடு கடவுளான சிவபெருமானைப் பணிந்து விடைபெற்று, யானைமீதேறிப் புறப்பட்டான். செல்லும் வழியில் மறையோர் ஆக்கிய வேள்விச் சாலைகளை வணங்கிச் சென்றான். அப்போது, ‘குடவர் கோமானாகிய செங்குட்டுவன் வெற்றி பெறுவானாக’ என்று வாழ்த்தி, ஆடகமாடம் என்னும் கோயிலினின்றும் திருமாலின் பிரசாதங் கொண்டு சிலர் அரசன் முன் நின்றனர். அரசன் அத்திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் அணி மணித் தோளில் தாங்கினான்.

அங்கு நின்றும் அரசன் புறப்பட்டுச் செல்ல, நாடகப் பெண்கள் ஆங்காங்கு நின்று, இருகைகளையும் கூப்பி அரசனைத் தொழுது, வாயார வாழ்த்தினர். சூதர், மாகதர், வேதாளிகர் என்போர் அரசனது பெருமை, வெற்றி முதலியன தோன்றும்படி வாழ்த்திக்கொண்டு வழிநடந்தனர். கரிவீரரும் பரிவீரரும் காலாட் படையும் சேரர் பெருமானைத் தம் வாயார வாழ்த்திச் சென்றனர். இங்ஙனம் மங்கல கோலத்தோடு புறப்பட்ட புரவலன் வழி கடந்து நீலகிரி மலையை யடைந்தான். அதன் அடிவாரத்தில் அமைக்கப்பட்ட பாடி வீட்டில் தங்கினான்.

சேரன் பாடி வீட்டில் இருக்கையில், இமயமலையிலிருந்து தென் திசையிற் செல்லும் முனிவர் சிலர்



நீலகிரியிற் றங்கினர். அவர்கள் சேரனைக் கண்டு ஆசிர்வதித்து, “அரசே! நீ இமயமலைக்குச் செல்வதாகக் கேள்விப்பட்டோம். நீ அங்குச் செல்வதால் அங்கிருக்கும் முனிவர்களுக்கு யாதொரு துன்பமும் நேராவண்ணம் பாதுகாக்க வேண்டுவது நினது கடமை” என்று கூறிச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்னர், “வீங்கு நீர் உலகம் ஆள்வோன் வாழ்க” என்று சொல்லிக் கொண்டே கொங்கணக் கூத்தரும், கொடுங் கரு நாடரும் தத்தம் மகளிரோடு பாடிக்கொண்டு வந்து அரசனைக் கண்டனர். குடகு நாட்டவர் தம் மகளிரோடு கார் காலத்தைப் பற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டு வந்து வேந்தனைக் கண்டனர். மன்னன் அவர்கள் ஆடல் பாடல்களைக் கண்டு மகிழ்ந்தான். அவரவர்கள் திறமைக்குத் தக்கபடி பரிசில் கொடுத்து அனுப்பினான்.

அப்பொழுது, செங்குட்டுவனின் நட்பரச்ரான நூற்றுவர் கன்னர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ‘சஞ்சயன்’ என்னும் தூதன் பெருஞ்செல்வத்துடனும், நாடகக் கணிகையர், வாத்தியக்காரர், நூல் வல்லார் பலர், வேழம்பர் பலர், கருமத்தலைவர் பலர் ஆக, இவர்களுடன் செங்குட்டுவனை வந்து கண்டான். கண்டு, “மன்னர் மன்ன! தாங்கள் இமயம் செல்வதை யறிந்த எம்மன்னர், பத்தினிக் கல்லைத்தாமே யெடுத்து வருவதாகக் கூறினர். தங்கள் சித்தம் எப்படியோ,” என்றான். அது கேட்ட சேரன், “சஞ்சயா! வடநாட்டரசர்களிற் சிறந்தவராகக் கரு

தப்படும் கனக விசயர், தமிழரசர் ஆற்றலை யறியாது, இகழ்ந்து கூறியதாகக் கேள்வியுற்றேன். ஆதலால், யானே நேரிற் சென்று, அவர்களைப் போரில் வென்று, அவ் விருவர் தலைமீதும் பத்தினிக்கல்லைக் கொண்டு வர விரும்பியுள்ளேன். ஆதலின், உனது அரசர் இமயத்திற்குச் செல்ல வேண்டா. கங்கை யாற்றிற்குச் சென்று, எமது சேனை அக்கரை சேர்தற்கு வேண்டிய மரக்கலங்களைத் தயார் செய்து வைக்கச் சொல்'' என்று கூறினன். சஞ்சயனும் அவனடி பணிந்து சென்றான்.

சஞ்சயன் சென்ற பின்னர், பாண்டிய மன்னனிடத்தில் இருந்து சந்தனம் முத்து முதலிய திறைப் பொருள்கள் சேரனுக்கு வந்தன. தன்னைக் காண விரும்பியவர் யாவரும் வந்து கண்ட பின்னர், சேரர் பெருமான் இமயமலையை நோக்கிப் பிரயாணமாயினான். அவனது சேனையும் கொதித்து எழுந்தது. சில நாட்களில் சேர மன்னன் கங்கைக் கரையை யடைந்தான். நூற்றுவர் கன்னர் தயாரித்து வைத்திருந்த மரக்கலங்களின் உதவியால் சேரன், படைகளோடு கங்கை யாற்றைக் கடந்தனன்; கடந்து, உத்தர கோசலத்தை அண்மினான்.

சேரன் - செங்குட்டுவன் தம் நாடுகளை நோக்கி வருவதை யறிந்த வடநாட் டரசரான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலானவர் கனகன் விசயன் என்ற பெரு வேந்தரோடு கலந்து, "தென் நாட்டு வேந்தரின் வல்லமை காண்போம்'' என்ப



தாகச் சொல்லிச் சேனைகளோடு வந்து, சேரனைத் தாக்கினர். நம் சேரர் மன்னனோ அஞ்சா நெஞ்சம் படைத்த வல்லாள உக்கிரம சிங்கன். அவனோ வட நாட்டரசர்க்கு அஞ்சுபவன்! யானைக் கூட்டத்திற் சிங்கம் பாய்ந்தாற்போலப் பாய்ந்து, கடும்போர் செய்தான். அப் போரில் துகிற் கொடிகள் நெருங்கிப் பந்தல் போட்டாற்போல இருந்ததால், கதிரவன் கிரணங்கள் மறைப்புண்டன. பறைகளும், சங்கங்களும், கொம்புகளும், பேரிகைகளும், முரசங்களும், ஒருங்கே ஒலித்தன. அதனால், திசைகளி னின்றும் எதிர் ஒலி உண்டாயிற்று. வட நாட்டரசர் சேனை சிறிது போழ்தில் நிலை கலங்க ஆரம்பித்தது. வஞ்சிமா நகரில் இருந்தே கொதித்தெழுந்து சென்ற சேனை வீரர் ஆவேசங்கொண்டு போர் செய்தனர். பரிகளும் கரிகளும் வெட்டுண்டன. வீரர்கள் கரம் இழந்தனர், சிரம் இழந்தனர், கால் இழந்தனர், உயிர் இழந்தனர். இங்ஙனம் கொடிய போர் நடக்க, வட நாட்டரசரின் சேனை நிலை கலங்கி ஓடியது. அரசர்கள் மனங் கலங்கினர். முடிவில், சேரர் பெருமான் வெற்றி பெற்றான். கனக விசயர் சேரனால் சிறையாக்கப் பட்டனர்.

தமிழ் மன்னன் வெற்றி பெற்றதைக் கண்ட பகைவரிற் பலர் வேடமாறிச் சடையும் காவி யுடையும் தரித்துச் சாம்பலைப் பூசிச் சந்நியாசிகள்போல ஓடி ஒளித்தனர். சிலர் பீலியைக் கையிற் பிடித்துச் சமண முனிவர்கள்போல் வேட மாறினர். பலர் கவிபாடும் பாணர்போலும், கூத்தர் போலவும் ஆயி

னர். இவ்வாறு பகைவர் நூதன வேடங்களைத் தரித்து மறைந் தொழிந்தனர்.

சேரமன்னன், தன் சேனையில் இறந்து பட்ட வீரர்களுக்குச் செய்யவேண்டிய கருமங்களைச்செய்து, அவர்கள் நற்கதி யடையுமாறு இறைவனை வேண்டினன்; எஞ்சிய வீரர்களுக்குப் பெரு விருந்துசெய்து, அவரவர் தகுதிக் கேற்றவாறு பரிசுகள் கொடுத்து, அவர்களை மகிழ்வித்தான். யாவரும் "எம்மன்னன் நீடூழி வாழ்க" என்று வாழ்த்தினர்.

ஆரிய அரசரை வெல்லவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த செங்குட்டுவன், ஆரிய மன்னரை வென்றபின் உள்ளத்தில் ஒருவராலும் கரை செய்ய அரியதொரு பேருவகை கொண்டான். அவன் கொண்ட முதல் எண்ணம் நிறைவேறியது. இனி, எஞ்சியுள்ள விருப்பம், இமயமலையினின்றும் சிலையைக் கொண்டு வருதலேயாம். அதனையும் முடிக்க எண்ணிய மன்னன் அமைச்சனை வில்லவன் கோதையை நோக்கி, "இமயமலைச்சாரலில் வேள்வி இயற்றித் தவம் செய்துகொண்டிருக்கும் முனிவர்களுக்கு யாதொரு தீங்கும் நேராதபடி பார்த்துக் கொண்டு, படிவம் சமைத்தற்குரிய சிலையைக் கொண்டுவருக" என்று கட்டளையிட்டான்.

அரசன் ஆணைப்படி வில்லவன் கோதை பெருஞ் சேனையோடு இமயமலையை அடைந்தான். அங்குத் தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களைக் கண்டான். அவர்களைப் பணிந்து தான் வந்த காரியத்தை அறிவித்தான். மாமுனிகள் அரசனை



வாழ்த்தி வில்லவன் கோதையை ஆசீர்வதித்து, சிலையைத்தேடி எடுத்துச் செல்லுமாறு அருள் செய்தனர். சேனையோடு சென்ற அமைச்சன், பத்தினிக்குகந்த பாங்குறு சிலையொன்றை அரும்பாடுபட்டுத் தேடி எடுத்தான். எடுத்துச் சேரர்பிரான் முன்னிலையிற் கொண்டுவந்து சேர்த்தான்.

சேரன், சிலைவந்து சேர்ந்ததும், அதனைக்கனக விசயர் முடிமீது ஏற்றிக் கங்கையின் வடகரையை யடைந்தான். நான் மறையாளர் நன்னிமித்தத்தில் சிலையைக் கங்கை யாற்றில் நீராட்டினர். அது முடிந்த பின்னர்ச் சேரன் சேனையோடு கங்கையாற்றைக் கடந்து, தென் கரையை யடைந்தான்; அங்குத் தனக்கென்று அமைக்கப்பெற்ற அழகிய பாடி வீட்டில் தம் சேனையோடும் தங்கியிருந்தான்.

## 7. மாடலன் கூற்று

சேரன் தன் வீரர்களுக்கெல்லாம் பொன்னாலாகிய தோடுகளைப் பரிசாகக் கொடுத்து, ஐயசிங்கனாய்க் கொலு வீற்றிருந்தான். அவ்வாறு அரசன் வீற்றிருக்கையில் மாடலன் என்னும் மறையவன் அங்குத் தோன்றினான். தோன்றி, அரசனை ஆசி கூறி வாழ்த்தி, "எம்மரசே! மாதவி பாடிய கானல் வரிப்பாட்டு கனகவிசயர் முடித்தலையை நெரித்தது. இது, வியக்கத் தக்கதே" என்று நயம்பட உரைத்தான். அதுகேட்ட சேரன், "நான் மறையாள! இங்கு இருக்கும் பகையரசரும் அறிந்து கொள்ள முடியாத வாறு ஏதோ சொல்லினை. அதன் பொருள் என்ன? யாவர்க்கும் விளங்கும்படி சொல்" என்றான்.

உடனே மாடலன், "மன்னவா! கடல் விளையாட்டை விரும்பிச் சென்ற கோவலன் மனம் வெறுக்குமாறு மாதவி வரிப்பாடல்களைப் பாடினாள்; அதனால் சீற்றங் கொண்ட கோவலன் அவளைத் துறந்து கண்ணகியோடும் புறப்பட்டு மதுரையை யடைந்தான்; அறிவழிந்த பாண்டியனால் கொலையுண்டான்; அவன் மனைவி பீடு மிக்க மாட மதுரையை எரித்து, உன் நாட்டையடைந்து துறக்கம் எய்தினாள். உன் நாட்டை அவள் அடைந்ததால் அல்லவோ அப்பத்தினி இப்போது இவ் வடநாட்டரசர் மணிமுடியில் ஏறி விளங்குவாளாயினள்" என்று தான் முன் சொன்ன குறிப்புரையை விளங்கக் கூறினான். அவன், மேலும் சேரனை நோக்கி, "சேரர்



பெருமானே! நான் இங்கு வந்ததற்குக் காரணம் கூறுவேன் கேட்பாயாக: நான் பொதிய மலையை வலஞ் செய்துகொண்டு குமரித்துறையில் நீராடித் திரும்பி வருகையில் மாட மதுரையுட் சென்றேன். அப்போது, பாண்டியன் நீதி தவறினான் என்றும் கோவலன் கொல்லப்பட்டான் என்றும் அந்நகரத்தார் பேசிக்கொண்டனர். அச் செய்தியை யுணர்ந்த இடைச்சியர் தலைவியான மாதரி என்பாள் இடைத் தெருவில் உள்ள தெரு மன்றத்தினின்றும் எழுந்து நின்று, 'இடைக்குல மக்களே! கோவலன் தீதிலன்; கொற்றவன் பிழை செய்தான்; அரசனது செங்கோலும் கோடும் படியான காலமும் வந்ததே' என்று அழுது புலம்பி நள்ளிரவில் எரியில் மூழ்கி இறந்தாள். கோவலன் கண்ணகி இருவரையும் உடன் அழைத்து வந்த முதியாரான கவுந்தியடிகள், கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டதைக் கேட்டதும் துயர் பெருக, உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்தார். இவ்வாறு இருவர் மாண்டதையும் மதுரை எரிக்கிரையானதையும் கண்டு, அங்கு நின்றும் புறப்பட்டு யான் எனது நகராகிய காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்தேன்.

கோவலன் தந்தையான மாசாத்துவான் தன் மைந்தன் இறந்ததையும் மருமகள் துன்பத்தையும் மதுரையின் கேட்டையும் அறிந்து, மனம் வெறுத்துத் தனக்குரிய தாயிருந்த செல்வத்தைத் தானஞ் செய்து விட்டுத் துறவறம் மேற்கொண்டான். அவன் மனைவி மைந்தன் மரணத்தைக் கேட்டு மனம் பொறு

மல் நோயுற்று உயிர் துறந்தாள். கண்ணகியின் தந்தையான மாநாய்கன் தன் பொருளை வறியோர்க்களித்து, துறவறம் பூண்டான். கண்ணகியின் தாய் துயர் பொறுக்க மாட்டாதவளாய் உயிர் துறந்தாள். தன் இன்னுயிர்க் காதலனுக்கு ஏற்பட்ட தீங்கையெண்ணி யெண்ணி மனம் பதைத்த மாதவி துறவு மேற்கொண்டாள். அவள் மகள் மணிமேகலையும் தருமோபதேசம் பெற்று புத்த மதத்தளாயினள்.

பெரிதும் வருத்தத்தை விளைக்கக் கூடிய இத்துக்கக் காட்சிகளை யெல்லாம் கண்ட யான், அப்பாவத்தைத் தொலைக்கக் கங்கை யாற்றில் நீராடுதற்கு வந்தேன். இதுவே என் வருகைக்குக் காரணம்; மன்ன! நீ நீடு வாழ்க'' என்று கூறி முடித்தான்.

மாடலன் கூற்றைக் கேட்ட மன்னர் பிரான், "ஐய! பாண்டியன் இறந்த பின்னர்ப் பாண்டி நாட்டில் ஏதேனும் விசேடம்உண்டோ?'' என்றான். மறையவன் அரசே! கொற்கை நகரத்தில் இளவரசனாக இருந்த வெற்றிவேற் செழியன் என்பவன் மதுரைக்கு நேர்ந்த விபத்தை நினைந்து வருந்தி, ஆயிரம் பொற்கொல்லரை வீரபத்தினிக்குப் பலியிட்டு, மதுரையை இது சமயம் அரசாண்டு வருகிறான்,'' என்றான்.

மாடலன் கூற்றைக் கேட்டு மன்னன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் வானத்தில் வெண்பிறை விளங்கியது. அப்பொழுது காலக் கணிதன் அரசனைப் பணிந்து, "பெருமானே! நமது மூதூரை விட்டு வந்து முப்பத்திரண்டு மாதங்கள் ஆகின்றன'' என்



றான். அதுகேட்ட சேரன் தன் ஆதனத்தினின்றும் எழுந்து தனியான விடத்தில் இருந்த ஓர் பெரிய ஆதனத்தில் அமர்ந்து, மாடலனை வரவழைத்து அருகே உட்காரவைத்து, "மறையோய்! சோழ நாட்டில் என் மைத்துனனோடு பகைத்த சோழர் போரில் இறந்த பின்னர், சோழ மன்னனது ஆட்சி நன்கு நடைபெறுகின்றதா?'' என்று உசாவினான். மாடலன், "அரச! தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவைக் காக்கத் தன் தசையையே தந்த பொருள் வாய்ந்த அரசர்குல வள்ளல்கள் ஆளும் நாடு சீர்குலைவதுண்டோ? ஒரு காலும் இல்லை. சோழநாடு சீரும் சிறப்பும் சிறக்கப் பெற்றுள்ளது,'' என்றான்.

சேரமன்னவன் மாடலன் கூறியதைக் கேட்டு மகிழ்ந்தான். அவன் தன் நிறையுள்ள ஐம்பது துலாபாரம் பொன்னை அம்மறையவனுக்குப் பரிசளித்தான். பின்னர், ஆரிய மன்னர் நூற்றுவரையும் அவரவர் நாடுகளுக்குச் செல்ல உத்திரவிட்டான்; தமிழரசரின் தனித்த ஆற்றலை அறியாது அவமதித்துப் பேசிய கனக விசயரைச் சோழ பாண்டியர்க்குக் காட்டி வருமாறு தூதுவர்களை ஏவினான். பிறகு மன்னன் தன் படைகள் தன்னைப் புடைசூழப் புறப்பட்டு மங்கல வொலியோடு வஞ்சிமா நகரை நோக்கிப் புறப்பட்டான்.

## 8. மாநகரத்தார் மன்னனை வரவேற்றல்

செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரைக்குப் போனபோது அரசமாதேவி இளங்கோ வேண்மாளை வஞ்சிமா நகரத்திலேயே விட்டுச் சென்றான். அப்பத்தினி, கணவன் நல்வரவைப் பேராவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மாதங்கள் அதிகமாக, அவள் மனக்கவலையும் அதிகமாயிற்று. அழகிய அமளியில் படுத்தால் உறக்கம் வருவதில்லை. கணவன் கவலையே பெருங்கவலை யாயிற்று. அவள் உடல் நாளடைவில் மெலியத் தலைப்பட்டது. அவள் தூக்கமின்றி ஏக்கமுடையவளாய் இருந்தாள்.

செவிலித்தாயர்கள் செங்குட்டுவனின் வடநாட்டு வெற்றியை உணர்ந்திருந்தனர். ஆதலால், அவர்கள் அரசியை நோக்கி, "அம்மே! நீ கவலைப்பட வேண்டா. நம்மரசன் வெற்றி மாலை சூடி வருகின்றான்" என்று கூறி, அவள் துயரையும் கவலையையும் மாற்ற, அரசனது போர்த்திறத்தைக் கொண்டாடிப் பாடல்களைப் பாடினர். இங்கு இப்படியிருக்க.

தினைப்புனக் காவலர் மதுவை யுண்டு காவலை மறந்து, மதிமயங்கி இருக்கும் நிலையில் யானைகள், புனக்கதிர்களை யுண்ணுவதற்கு ஏற்ற சமயம் அதுவேயென்று அறிந்து புனத்துள் நுழைந்தன. அது கண்ட மலைமகளிர் பரண்மீதிருந்து, "வட நாட்டிற்குச் சென்ற மன்னன் வெற்றி பெற்று மீள்கின்றான். அவன் சுகமே வாழக்கடவன்" என்று அழகாகப் பாட, புனக் கதிர்களைத் தின்னவந்த யானைகள் பெண்களின் இசைப்பாட்டில் இன்புற்றுத் துயில்வதாயின. உழவர்கள் தம் பகடுகளைப் பார்த்து, "வட நாட்டரசரைப் போரில் வென்று, வெற்றியோடு நம் மன்னன் திரும்புகின்றான். அவன் நாளை வந்துவிடுவான். பகடுகளே! நுகம் பூண்டுழுது நாட்டைப் பண்படுத்துங்கள்" என்று, தம் அரசன் வெற்றி தோன்றப் பாடிக்கொண்டிருந்தனர். அரசனது பசுக்கூட்டத்தை மேய்க்கும் கோபாலர்கள் பசுக்களைப் பார்த்து, "பசுக்களே! நம் மன்னர் பெருமான் நாளை வடநாட்டுப் பசுக்களோடு வருகின்றான். அவன் கொண்டுவரும் பசுக்களோடு நீங்களும் சேர்ந்து ஒற்றுமையோடு வாழுங்கள்" என்று பொருள் படத்தக்கவாறு, புல்லாங்குழல் ஊதிப் பாடினர். கடற்கரையைச் சார்ந்துள்ள இடங்களில் வாழும் பெண்கள் "நம் சேரர்பிரான் நம் மாதரசியை மகிழ்விக்க நாளை வருகின்றான். அவன் வெற்றியை நினைந்து பாடுவோம் வருக" என்று பேசிக்கொண்டு பலபெண்கள் ஒன்றுகூடி ஆடிப்பாடினர். மாநகரத்தார் அரசனது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

அடுத்த தினத்தில் அரசன் செங்குட்டுவன் தனது பட்டத்தியானைமீது அமர்ந்து நாற்படையும் சூழ நகரிற்குள் நுழைந்தான். வீரலட்சுமி தங்கப்பெற்ற மார்பையுடைய சேர மன்னனைக் கண்ட அந்நகர மகளிர் நறுமணமுள்ள மலர்களை அவன் மீது தூவி மங்கல வாழ்த்துக்களைப்பாடி, "எம்மன்னர் மன்னன்-சேரன்செங்குட்டுவன் நீடு வாழ்க; அவனது

கோனும் குடிகளும் வாழ்க'' என்று வாழ்த்தினர். நகரெங்கும் மங்கல ஒலி ஆர்த்தது. வீரர்கள் அன்று அடைந்த களிப்பு கூறற்கியலாது புண்பட்ட வீரர்கள் தத்தம் மனையிற் புகுந்தனர். அவரது தரும பத்தினிமார் அவர்கள் பெற்ற வெற்றியைப் புகழ்ந்து மகிழ்ந்து அவர்கள் புண்களைத் தம் உபசாரத்தால் ஆற்றினர். அன்று வஞ்சிமா நகர் கொண்ட கோலத்தை என்னவென்று இயம்புவது?

அரசன் அரண்மனையை யடைந்தான். அவ்வமயம், அவனைக் காணவேண்டி இளங்கோ வேண்மாள் தன் தோழியர் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று, அரசனைக் கண்டு அடிபணிந்தாள். அரசன் ஆனந்தம் அடைந்து அவளை வாரி யெடுத்து,முகமலர்ச்சியோடும் அகமலர்ச்சியோடும் பேசி, அவளுடன் அரங்கத்தில் இனிது வீற்றிருந்தான்.

---

## 9. மாடலன் அறிவுறுத்தல்

அரசன், அரசி இளங்கோவேண்மாளுடன் இனி திருக்கையில் கூத்தன் ஒருவன் வந்து. அரசனடி பணிந்து, "அரசே! சிவபெருமான் திரிபுரம் எரித்த காலத்தில் உமையாளை ஒரு பாகத்திலே கொண்டு ஆடிய ஒருவகைக் கூத்தினை ஆடுகின்றேன். அநுமதி தரல்வேண்டும்'' என்று வேண்டி நின்றனன். அரசன் உத்திரவிட்டான். கூத்தன் வெகு நன்று கக் கூத்தாடினன். அரசனும் அரசியும் கண்டு மகிழ் வெய்தினர். அரசன் அக்கூத்தனுக்கு வேண்டிய வரையில் பரிசு கொடுத்து அனுப்பினான்.

பின்னர் அரசனைக் காணச் சிலர் வந்தனர். அவர்கள் யார்? சேரன், சோழபாண்டியர்க்குக் கனக விசயரைக் காட்டி வருமாறு ஏவிய நீலன் முதலி யோர். நீலன் மாடலன் அமைச்சர் முதலியோர் அரசனை யடைந்து, அவனடி பணிந்து நின்றனர். நீலன் அரசனை நோக்கி, "அரசே! நும் கட்டளைப் படி கனகவிசயரைக் கொண்டு சென்று, பெருமை தங்கிய செம்பியர் பெருமானான சோழவரசனைக் கண்டோம்; அவனடி பணிந்தோம்; கனகவிசய ரைக் காட்டி வடநாட்டுப் போர் விவரத்தையும் விரித்தோம். அவ்வளவில் அம்மன்னவன் தன் தானைத்தலைவனை நோக்கி, 'போர்க்களத்தில் வாளும் குடையும் நழுவவிட்டுப் பகைவனுக்குப் பயந்து தப்பி யோடிய வேந்தரைச் சிறைப் பிடித்துக்கொண்டுவரு தல் சேரர்பிரானுக்குப் பெருமையைத் தராது' என்

றான். பிறகு, சோழநாட்டைவிட்டு நீங்கி, பாண்டிய நாட்டின் தலைநகரான பீடுமிக்க மாட மதுரையை யடைந்தோம். பாண்டியர் பெருமகனைக் கண்டோம். அவனடி பணிந்தோம்; போர்முறையை விரித்தோம்; கனகவிசயரைக் காட்டினோம். அவ் வேந்தன், 'சேரனுக்கு ஆற்றாது அஞ்சியோடி, தவக்கோலங்கொண்ட இவ்வாரிய அரசரை இங்ஙனம் சிறைப்பிடித்து வருதல் முறையன்று. சேரனின் செய்கை புதிதாக இருக்கிறது' என்றான். இதுவே யாங்கள் கொணர்ந்த செய்தி" என்றுகூறி முடித்தான்.

சோழ பாண்டியர் வார்த்தைகளில் இருந்து, அவர்கள் தன்னை அவமதித்துப் பேசினர் என்பதைச் செங்குட்டுவன் உணர்ந்தான். உடனே அவன் கடுங்கோபங் கொண்டான். தன் ஆதனத்தை விட்டு எழுந்தான். அவன் சீற்றத்தைக் கண்டோர் அஞ்சினர். சோழ பாண்டியர்க்கு இறுதிக்காலம் வந்துவிட்டதோ என்று சந்தேகித்தனர். அரசனது கடைப்புருவம் நெற்றி முற்றச் சென்றது. வந்தது நகையும். அவன் கோபத்தால் உடல் துடிக்க, கைகளைத் தட்டி, "ஆ! ஆ!! என்னே இச்சோழ பாண்டியர் கர்வம்! என்னுடைய தோள் வலியும் என்னுடைய வாள்வலியும் முற்றும் அறிந்திருந்தும், இவர்கள் ஏதும் அறியாத பிறர்போலப் பேசிவிட்டனர். இவர்கள் செருக்கை இப்பொழுதே அடக்கிவிடுகின்றேன்" என்று கூறித் தன் வாளில் கையிட்டான்.

அரசனது அடங்காச் சீற்றங்கண்ட மாடலன் எழுந்து நின்று, "அரசே! வாழ்க நின் கொற்றம்;



நின் சீற்றம் அடங்குவதாக. நின் பெருமையை யறியாதார் யாவர்? யானைக்கூட்டங்களை மிகுதியாகக் கொண்ட பகைவரின் வியலூரை யழித்தனை. ஆத்திமாலை யணிந்த சோழர் குடியினரான ஒன்பதின்மரையும் ஒரே போரில், நேரிவாயில் என்ற விடத்தில் வென்றனை. நெடுங்கடலில் மரக்கலங்களைச் செலுத்திப் பகைவரை யழித்தாய். முன்னர் ஆரிய மன்னரைக் கங்கைக் கரையில் தோற்கடித்தாய். இவ்வாறு பல திறப்பட்ட போர்களில் வெற்றிமாலை சூடிய மன்னவா! பைந்தமிழ்ப் புலமையைப் பாங்குறப் பெற்ற சேர வேந்தே! நீ நீடு வாழ்க; நின் கோபம் தணிவதாக. நான் கூறுவதைச் செவி சாய்த்துக் கேட்டருள்வாய். நீ ஐம்பது ஆண்டுகள் கழிந்து, முதுமைப் பருவத்தை யடையும் நிலையில் உள்ளாய். இதுவரையில் நீ மறக்கள வேள்வி செய்து வந்தனையே யன்றி, அறக்கள வேள்வி செய்யவில்லையே. உனது மூதாதைகள் சிறந்த அரசர்களாக விளங்கினர். அவர்கள் மறக்கள வேள்வியினையே செய்து வந்தனர். ஆதலால், அவர்கள் பெயர் அதிகமாக இவ்வுலகில் பரவவில்லை. பெரிய அரிய செயல்களைச் செய்து சிறப்புடன் விளங்கிய சேரமன்னர்கள் மரபில் உதித்த நீ மறக்கள வேள்வியில் சிறந்து விளங்குவதைப் போலவே அறக்கள வேள்வியிலும் சிறந்து விளங்கவேண்டும். உயிர்க்கு உறுதியைப் பயக்கக் கூடியது அறக்கள வேள்வியே யாகும். நீ அதனைச் செய்யவேண்டும். இன்றேல், நீ இப்பிறப்பினால் ஆய பயனைப் பெறமாட்டாய்.

உலகில் நிலையுள்ளது எது ?

"இளமையு நில்லா ; யாக்கையு நில்லா ;
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா ;
புத்தேள் உலகம் புதல்வருந் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது"

—மணிமேகலை

ஆதலால், தானஞ் செய்க ; வீடு பேற்றை அடைதற் குரிய வேள்வி செய்தலையே இனி உனக்குகந்த கருமமாகக் கொள்ளுதல் வேண்டும். இன்றைக்கு இருப்பவர் நாளைக்கிருப்பது நிச்சயம் இல்லை. ஆதலின், நாளை நாளை என்று நாளைப் போக்காமல் நீ இன்றே செய்யவேண்டும். மானிட யாக்கை அழிவுள்ளது ; நிலையற்றது ; இளமை நீரில் தோன்றி மறையும் குமிழியை யொத்தது ; நிறைந்த போகபாக்கியங்கள் நீரில் சுருண்டு ஓடி மறையும் அலைகளுக்குச் சமானமானவை ; நமது உடலோ நீரில் எழுதப் பட்ட எழுத்திற்கு ஒப்பானது. நீரில் எழுதப்பட்ட எழுத்து எங்ஙனம் அழிந்து ஒழிகிறதோ அதுபோல இவ்வுடல் உடனே அழிந்து ஒழியும்

குற்றமற்ற குலத்திலே குல விளக்காய்த் தோன்றிய நினக்கு யான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. பெரும் புலவர்களோடு அளவளாவும் நினக்கு அறக்கள வேள்வியால் உண்டாகும் பயனை எடுத்துக் கூறினேனே யல்லாது வேறில்லை. வீணுக அறிவற்ற சோழ பாண்டியரோடு போர் புரிந்து வெற்றி பெறுவதால் பயன் என்ன ? அந்த எண்ணத்தைத்



தவிர்க்க; அரசே ! நின் கொற்றம் வாழ்க" என்று கூறி முடித்தான்.

மறையவன் புகட்டிய அறிவுமொழிகள் மன்னன் சீற்றத்தை மாற்றின. அவன் மாடலனை நோக்கி, "மறையோய் ! நன்று நின் அறிவுரை; நின் விருப்பப்படியே செய்வேன்" என்று கூறி, யாகத்தில் வல்ல பெரியார்களை யாகம் செய்யுமாறு கட்டளை யிட்டான்.

## 10. ஆலயம் எடுத்து விழாவியற்றல்

வேள்வி யாசிரியர்கள் விழா வியற்றலானார்கள். அரசன் தன்னால் சிறையாக்கப்பட்டிருந்த ஆரிய மன்னரைச் சிறையினின்றும் மீட்டு, வஞ்சிமா நகரின் புறத்தே அழகமைந்து விளங்கிய வேளாவிக்கோ மாளிகையில் இருக்கச் செய்தான். யாகம் முடிந்து, பத்தினிக்கல்லைப் பிரதிட்டை செய்து முடித்ததும் அவர்களைத் தம் நாட்டிற்குப் போக விடுவதாகவும் வாக்களித்தான்; அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தன் அமைச்சன் வில்லவன் கோதையைக் கொண்டு செய்வித்தான். தன் நாட்டில் மற்றைய ஊர்களிலும் அடைப்பட்டிருந்த கைதிகளை வெளியே விட்டு, சிறைச்சாலைகளைச் சுத்தமாக்குமாறு கட்டளை பிறப்பித்தான்.

பின்னர், அறநூலில் வல்ல அந்தணர், ஆசான், பெருங்கணி. சிற்பாசாரியர் முதலானவர்கள் சென்று, இமயத்தினின்றும் கொண்டுவந்த பத்தினியின் உருவத்தைச் செதுக்கப்பெற்ற சிலையைப் பத்தினிக்கென்று அமைத்த ஆலயத்தில் வைத்தனர். வைத்து, அப் பிரதிமைக்கு அணியவேண்டிய அணிகலன்களை அவ்வவ்விடங்களுக்கு எற்ப அழகுற அணிந்தார்கள். யாகவேள்வி ஒமங்களும் உற்சவங்களும் சம்பிரமமாக நிகழ்ந்தன. திக்குத் தேவதைகளைக் கடைவாயிலில் ஸ்தாபித்தனர். பத்தினிக்கடவுளைப் பிரதிட்டைசெய்து, பெருவிழா கொண்டாடினர்.



இங்கு இவ்வாறு இருக்க, கண்ணகியின் செவிலித்தாயும், பிரதான தோழியும், தேவந்தி என்ற பார்ப்பனத் தோழியும், மதுரையில் கோவலனும் கண்ணகியும் சென்று அடைக்கலம் பெற்றதும், கோவலன் பொற்கொல்லனால் கொல்லப்பட்டதும், வீரபத்தினி அரசனைக் கொல்வித்து, மதுரைமா நகரை எரித்ததும் மாடலன் மூலமாகக் கேள்வியுற்றார்கள். அவர்கள் கண்ணகியைக் காண விருப்பங்கொண்டவர்களாய், மாடமதுரையை யடைந்தனர். அந்நகர், பாழடைந்து பொலிவற்று விளங்குவதைக் கண்டனர். கண்ணகி சேரநாட்டை யடைந்து மலைமீதினின்று சுவர்க்கம் புகுந்த செய்தியும், செங்குட்டுவன் பத்தினிக்கு ஆலயம் எடுத்து விழா வியற்றும் செய்தியும் கேள்வியுற்றனர். மதுரையில் இருந்த இடைச்சியர் தலைவியான மாதரியின் மகள் ஐயையையும் அழைத்துக்கொண்டு சேரநாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

புறப்பட்ட மூவரும் சில நாட்களில் திருச்செங்குன்றம் என்னும் மலையை யடைந்தனர். அம்மலையில்தான் செங்குட்டுவன் பத்தினிக்குப் பாங்குடன் ஆலயம் எடுத்து விழா நடத்திக்கொண்டிருந்தான். சென்ற மூவரும் செங்குட்டுவனைப் பணிந்து, தங்கள் வரலாற்றைத் தெரிவித்தனர். கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், மாதரியும் மண்ணுலகினின்றும் நீங்கிய விவரத்தை விரித்தனர். மாசாத்துவானும் மாநாய்கனும் துறவறம் மேற்கொண்டதையும், மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் துறவு பூண்ட

செய்தியையும் வந்த மகளிர் வீரபத்தினி சந்நிதியின் முன் விரிவாக எடுத்துக் கூறினர். பின்னர், அவர்கள் ஐயை என்பாளை முன்னேநிறுத்தி, "மாபத்தினி! நின்னை அடைக்கலமாகக் கொண்டு, நின்னைப் பாதுகாத்து, நீ யடைந்த துயரைக் கேட்ட ஆற்றாது உயிர் நீத்த மாதரியின் மகள் இவள். நாங்கள் யாவரும் நின்னைக் கண்டு தரிசிக்க வந்தோம்" என்று கூறிப் புலம்பி நின்றார்கள்.

இம்மூவரும் இப்படி அழுது புலம்புகையில் விண்ணில் ஓர் உருவம் தோன்றியது. அது, கால்களிற் சிலம்பும், கைகளில் வளையல்களும், காதுகளில் தோடுகளும், கழுத்தில் ஆரமும், பின்னும் பல அணிகளும் அணிந்திருந்தது. அதனைக் கண்ட செங்குட்டுவ மன்னன் அதிசயம் அடைந்தான். அவ்வளவில் அத்தெய்வம் அவனுக்குத் தன்னுருவை நன்றாகக் காண்பித்துத் தன் தோழியரை நோக்கி, "தோழிகாள்! என் கணவனைக் கொல்லச் செய்த பாண்டிய மன்னன் குற்றமுடையவன் அல்லன். வினைவசத்தால் இஃதெல்லாம் உண்டானது. யான் பாண்டியன் மகள். அவன் தேவர்களோடு இன்புற்று இருக்கின்றான். நான் இம்மலையில் இருக்க விருப்பங்கொண்டேன். இவ்விடத்தைவிட்டு இனி யான் நீங்கேன். என்னுடன் நீங்கள் யாவரும்வந்து விளையாடுக" என்று கூறியது.

அது கேட்டு அங்கு இருந்த மகளிர் யாவரும் பேரானந்தம் அடைந்து, தங்களை மறந்தவர்களாய்ப் பற்பல அற்புதப் பாடல்களைப் பாடிக் கண்ணகி தெய்



வத்தை மகிழ்வூட்டினர். முடிவில் அத்தெய்வம் "சேரர்பிரான்—செங்குட்டுவன் நீடு வாழ்க" என்று வாழ்த்தி மறைந்தது.

பின்னர்ச் செங்குட்டுவன் தேவந்தியை நோக்கி, "மணிமேகலை என்ற பெயரைக் கூறினையே. அவள் யார்? அவள் வரலாற்றை விரிவாய்க் கூறுக" என்றான். தேவந்தி சேரர்பெருமானை நோக்கி, "அரசே! மணிமேகலை என்பவள் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். அவள் யாவரும் கண்டு அதிசயிக்கத் தக்க பேரழகுடன் விளங்குபவள். அவள் தாய் மாதவி அவளைச் செல்வமாய் வளர்த்துவந்தாள். கோவலன் கொல்லப்பட்ட செய்தி எட்டியதும் மாதவி உலக இச்சையை வெறுத்துத் துறவு பூண்டாள். அவளது தாய் சித்திராபதி என்பவள் அவளுக்கு அநேக புத்திமதிகளைக் கூறி, நாடக மகளிரின் தொழிலை நடத்திக்கொண்டிருக்குமாறு வேண்டினள். அவள் எவ்வளவு எடுத்துக் கூறியும் பயன்படவில்லை. மாதவி புத்தமதத்தைத் தழுவினள். அவ்வளவோடு நில்லாது அவள் தன்மகள் மணிமேகலையையும் அம்மதத்தைத் தழுவச்செய்தாள். மணிமேகலை கூந்தலையும் மாலையையும் களைந்து பிட்சுணியாய் விட்டனள். அழகிற் சிறந்த ஆரணங்காகிய மணிமேகலை இக்கோலத்தை மேற்கொண்டதை யறிந்த சோழமன்னனும் சோணாட்டுக் குடிகளும் பெருந்துயர் அடைந்தனர். பின்னர், அம் மணிமேகலை பௌத்தமதப் பெரியாரான அறவண அடிகள் என்பவரிடம் தருமோபதேசம் பெற்றுச் சுகமாக வாழ்கின்றாள். அரசே!

கின் கொற்றம்வாழ்க; இதுவே மணிமேகலையின் வரலாறு'' என்று கூறி முடித்தாள்.

அப்போது அவள்மீது பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வம் ஆவேசித்தது. அவள் கைகளை உதறியும், கால்களை நீட்டியும், தலையை அசைத்து அசைத்தும் ஆட ஆரம்பித்தாள். அத்தெய்வம் மாடலன் என்ற மறையவனை நோக்கி, ''மாடல! யான் பாசண்டச்சாத்தன் என்னும் தெய்வம். இப்போது தேவந்தி யென்னும் இவள்மீது ஆவேசித்துள்ளேன். நான் கூறுகிறபடி செய். இப்பொழுது உன் கமண்டலத்தில் உள்ள நீர் மிகப் பரிசுத்தமானது. அதனை எவர்மீது தெளித்தாலும் அவர், தம் முற்பிறவியின் வரலாற்றை முற்றிலும் அறியக்கூடும். அந்நீரை இச்சமயம் பத்தினிக் கடவுளைத் தரிசிக்க வந்துள்ள இச் சிறுமியர் மூவர்மீதும் தெளிப்பாய்; அவர்கள் தங்கள் முற்பிறப்பினை உணர்வார்கள்'' என்றது.

மாடலனும் தெய்வம் கூறியவாறே செய்தான். உடனே அச்சிறுமியர் தனித்தனியே புலம்பலாயினர். முதலாவது சிறுமி, 'யான் பெற்ற மகளே! உன் கணவன் கூடா ஒழுக்கத்தின னாயிருந்தான். அதனால் யான் பெரிதும் மனவாட்டம் அடைந்திருந்தேன். நின் கணவன் வந்ததும், எனக்கும் அறிவிக்காமல் நீ அவனுடனே மதுரைக்குச் சென்றாய். உற்றார் பெற்றார் இல்லாத அம்மதுரையில் கணவனை யிழந்து கைம்பெண் ஆயினையே, என் அருமை மகளே' என்று அழுது நின்றாள்.



இரண்டாவது பெண், 'அப்பா! யான் பெற்ற மகனே! உன் அருமை மனைவியை அடியோடு மறந்து, நாடகக் கணிகையிடம் நாட்டம் வைத்தாய். அவளிடம் வெறுப்புக்கொண்டு, மனைவியை நாடி வந்தாய். ஒருவருக்கும் அறிவியாமல் நடுயாமத்தில் அவளைத் தனியே அழைத்துக்கொண்டு மதுரைக்குச் சென்றாய். சென்று என்ன பயன் பெற்றாய்? வீண் குற்றம் சுமத்தப்பெற்றுக் காவலன் வாளுக்குப் பலியானாய். யான் பெற்ற பேறுதான் என்னே! என் அருமை மைந்த! என்னிடம் வந்து வார்த்தை பேசாயோ' என்று புலம்பி நொந்தாள்.

மூன்றாவது பெண், 'இளவலே! உன்னையும் உன் மனைவியையும் கவுந்தியடிகள் என்னிடம் அடைக்கலமாகத் தந்தனரே. உங்கள் இருவரையும் கண்டு ஆனந்தங்கொண்டேன். நான் வையையாற்றிற்கு நீராடச் சென்றிருந்தபோது நீ, அநியாயமாகக் கொலையுண்ட செய்தியைக் கேள்வியுற்றேன். உடனே மனையில் வந்து பார்த்தேன். நின்னைக் காணேன். என் அருமைப் பிள்ளாய்! எங்கு ஒளித்தனையோ!' என்று கூறி யரற்றினாள்.

சிறுமியர் புலம்பியதைக்கேட்ட சேரமன்னவன் வியப்புற்று மாடலனை நோக்கினன். மாடலன் அரசனது குறிப்பை யுணர்ந்து, ''மன்னர் பெருமானே! முதலில் புலம்பிய பெண் முற்பிறப்பில் கண்ணகியின் தாயாக இருந்தவள். அவளுக்குப்பின் அரற்றியவள் கோவலன் தாயாக விளங்கியவன். மூன்றாவதாக அழுதவள் இடைச்சியர் தலைவியான

மாதரி என்பவள். இம்மூவரும் கோவலன் கண்ணகி என்ற இருவர்பேரிலும் கொண்ட கரைகடந்த அன்பால் உயிர்விட்டவர். இப்போது இப் பிறவியினை எடுத்துள்ளார். கோவலன் தாயும், கண்ணகியின் தாயும், தம் பிள்ளைகள்மேல் வைத்த ஆசையால் மோட்ச இன்பத்தைப் பெறவில்லை. அதனால், அவ்வஞ்சிமாநகரில் உள்ள அரட்டன் செட்டிக்கு இரட்டைப் பெண்களாகப் பிறந்தார்கள். மாதரி என்பாள், கண்ணகி கோவலன்பால் வைத்த பேரன்பாலும் திருமாலடி திறம்பாமற்போற்றும் திருந்திய பக்தியாலும நற்குடியிற் பிறந்தாள். மன்ன! இதனால் முற்பிறப்பில் அவரவர்கள் செய்த கருமங்களுக்கு ஏற்றவாறு பயன் பெறுகிறார்கள் என்பது நன்கு விளங்குகின்றது அல்லவா? சேரர் பெருமானே! நீ சிறந்த பாக்கியம் செய்தவன். பெறுதற்கரிய பேறுகளைப் பெற்றாய். காணுதற்கரிய காட்சிகளைக் கண்டாய். உணர்தற்கரிய நுண்ணிய விஷயங்களை உணர்ந்தாய். நீ ஆற்றுமணலினும் அதிக வாழ்நாட்களைப் பெற்று வாழ்வாய்'' என்று கூறி வாழ்த்தினான்.

சேரன் - செங்குட்டுவன் வியப்பும் களிப்பும் கொண்டான். வீரபத்தினியின் கோயிலுக்கென வேண்டிய நிலங்களைவிட்டான்; தினந்தோறும் குறைவின்றிச் சிறப்போடும் பூசனை நடக்கும்படியாக ஏற்பாடுகளைச் செய்தான்; வேண்டுமானவரையில் ஆடையாபரணங்களை அம்மனுக் களித்தான்; இவ்வாறு செய்த பின்னர், பத்தினிக்கடவுளை மும்முறை வலம்



வந்து வணங்கி நின்றான். அப்போது சிறையினின்றும் விடுபட்ட மன்னர்களும் அங்குக் கூடியிருந்தனர். அவர்கள் வீர பத்தினியைப் பணிந்து, ''அம்மே! சேரர் பெருமானுக்குக் காட்சி யளித்ததைப்போன்று, எங்கள் நாட்டிற்கும் எழுந்தருளி எங்கட்குக் காட்சியளித்தல் வேண்டும்'' என வேண்டினர். ''தந்தேன் வரம்'' என்று ஒரு குரல் வானத்தே எழுந்தது.

பின்னர், சேரர் பிரான் யாகசாலைக்குள் நுழைந்தான்; மாடலன் குறிப்புரைப்படி வேள்வி செய்து முடித்தான். அன்றுமுதல் அமைதியோடு, தன் நாட்டையாண்டு, இனிது வாழ்ந்திருந்து, நற்பேற்றைப் பெற்றான்.

---

## 11. அரசியலும் குணாதிசயங்களும்

செங்குட்டுவனும் அவன் காலத்திய சோழ பாண்டியரும் நீதி தவறாதிருபர்கள். அவர்கள் நீதியைத் தங்கள் உயிரினும் மேலாகக் கருதி வந்தார்கள். நீதி தவறி நடந்ததை உணர்ந்தால் உடனே தம் ஆவியை விடுவர். இது அக்காலத்து அரசர் கடைப்பிடித்த சீரிய வழக்கமாகும். இதற்குப் பாண்டியனே சாட்சியாவான். பொற்கொல்லன் பேச்சை நம்பி, கோவலனைத் தான் கொல்வித்தது தவறு என்பதை அவன் உணர்ந்ததும்,

"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்,
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது, கெடுக என்னாயுள்"

என்று கூறி, மயங்கி வீழ்ந்து உயிர் துறந்தான். எனவே, பாண்டியன் நீதி முறை வழுவாது அரசியல் நடாத்துபவன் என்பது, இச் செய்கையால் தெளிவாக விளங்குகின்றது.

இத்தகைய தமிழ்நாட்டு மன்னர், குடிகளின் நலத்தைத் தம் நலம்போலக் கருதியும், தமக்கு அடங்கி வாழும் குடிகள் எவ்வகைத் துயரிற்கும் ஆளாகாமல் கவலையற்று வாழும்படியும் ஆண்டுவந்தனர். குடிகளை வருத்தி நாடாள்வதிலும் கொடுங்கோன்மை வேறல்ல என்பதைத் தமிழ் அரசர் நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் பொறுப்பை நன்றாக உணர்ந்திருந்தார்கள். உதாரணமாகச் சேரன் செங்குட்டவன், பத்தினிக்கதையை யுரைத்த புகழ்ப் பெரும்புலவர் சாத்தனாரை நோக்கி, "புலவீர்! பாண்டியன், தான் செங்கோலினின்றும் வழுவியதை யறிந்து, அச்செய்தி எம்மையொத்த அரசர்களுக்கு எட்டு முன்னரே உயிர் நீத்தான்; இது சிறந்த செயலே; இச்செயல், வளைந்த அவன் செங்கோலை நிமிரச்செய்த மாதிரியாகும். அரசர்களாயிருப்போர்க்கு, உரியகாலத்தில் நாட்டில் மழை பெய்யாதாயின் அச்சம்; கொடுங்கோலுக்கு அஞ்சி மன்னுயிர்களைக் காத்தற்கு அரசகுடியிற் பிறத்தலால் துன்பமே யல்லாது இன்பம் ஒன்றும் இல்லை" என்று கூறி வருந்தினான். அரசனது இலட்சணத்தைச் சேரன் எத்துணை உணர்ந்திருந்தான் என்பது அவன் வாக்காலேயே அறியலாம்.

செங்குட்டவன் அரசியல் சீரியதென்று இவனது வரலாற்றை ஒருமுறை வாசித்தால் நன்கு உணரலாகும். இம் மன்னவன் வடநாட்டியாத்திரை ஏறக்குறைய முப்பத்திரண்டு மாதங்கள் செய்தான் அல்லவா? அக்காலத்தில் சேரநாட்டில் அரசன் எவன்? ஒருவரும் இலர். அங்ஙனம் இருந்தும் அந்நாட்டில் அமைதியும் அன்பும் குடிகொண்டிருந்தன. மன்னன் வடநாட்டரசரை வென்று வெற்றிமாலையோடு திரும்பி வருகின்றான் என்பதையுணர்ந்ததும், தினைப்புனக் காவல் புரியும் மலைநாட்டுப் பெண்களும், உழவர்களும், கோபாலர்களும், நெய்தல் நிலப் பெண்களும், அடைந்த ஆனந்தத்தை மூன்

னர்ப் படித்தீர்கள் அல்லவா? சேரன் வஞ்சிமா நகரில் புகுந்ததும் அந் நாட்டு மகளிர் அவ்வேந்தனை வரவேற்றதையும் முன்பு கூறினோம் அல்லவா? இவற்றால், சேரன் குடிகளிடம் எத்தகைய நன்மதிப்பைப் பெற்றிருந்தான் என்பது கூறாமலே விளங்கும். அந் நன்மதிப்பு எதனால் ஏற்பட்டது? அரசனது சீரிய ஒழுக்கத்தாலும், செங்கோலினாலுமே யன்றோ?

அவன் பத்தினிக் கல்லைக் கொண்டுவரச் சென்று நெடுங்காலமாகியும், அவன் இல்லாத வேளையில் பிறநாட்டரசர் அவனது நாட்டில் புகுந்து கலகம் விளைத்தனரோ? நாட்டைக் கவர்ந்தனரோ? ஒன்றும் செய்திலர். இதனால், மற்றைய அரசர் அவனிடம் கொண்டிருந்த பேரச்சமும் அவன் பிற அரசரை அடக்கியாளும் தன்மையும் நன்கு விளங்குகின்றன.

அரசன் தன் ஆயுட்காலம் முழுவதும் மறக்கள வேள்வியில் கழித்தான். இதனால், அவன் எத்துணைப்போர்கள் செய்திருக்கவேண்டும்? அத்துணைப் போர்களில் அவன் சேனாவீரர் பின் வாங்கினாரில்லை. அவர் 'போர்' என்றால் 'புறப்படுக' என்னும் நிலையில் தளரா ஊக்கத்துடன் இருந்தார்கள். காரணம் என்? அவர்கள் தங்கள் மன்னர் பெருமானான செங்குட்டுவன்மீது கொண்ட கரைகடந்த அன்பேயாகும். அவ்வன்பு எவ்வாறு அவர்களுக்கு உண்டாயிற்று? சேரன்-செங்குட்டுவனின் செங்கோல் வலியாலும் தண்ணளியாலுமே.



செங்குட்டுவன் காலத்து விளங்கிய சோழ பாண்டியரை இம்மன்னன் அடக்கி யாண்டுவந்தான் என்பது, கயல், புலி, வில் என்ற மூன்றும் வரைந்த இவனது அடையாள முத்திரையினின்றும் அறியலாகும். சோழனது அடையாளம் புலி; சேரனது அடையாளம் வில்; பாண்டியனது அடையாளம் கயல். இம் மூன்றையும் சேரன் பெற்றிருந்தான். இம்மன்னவன் கடல் வழியாகவும் தரைவழியாகவும் பகைவர் வருவதைத் தடுக்கும் பொருட்டு, கப்பற் படையையும் தரைப்படையையும் பெற்றிருந்தான்.

முற்கால வழக்கம்போலவே அவனது அவையில் அமைச்சர், புரோகிதர், சேனை வீரர், தூதுவர், சாரணர் என்ற ஐவகை உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு ஐம்பெருங்குழு என்று பெயர். இவர்களைத்தவிர வேறு பல உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள். தலைவரும் இருந்தார்கள். அமைச்சர்களில் சிறந்தவர்கள் வில்லவன் கோதையும், அழும்பில் வேளும். அவர்கள் அரசன் ஆணைப்படி நடந்துவந்தார்கள். அரசனும் அவர்கள் யோசனைப்படி நடந்துவந்தான்.

நம் செங்குட்டுவன் நல்ல கொள்கைகளைக் கொண்டிருந்தான் என்பது, அவன் போருக்குப் புறப்படுமுன் உரியகாலத்தையும் சகுனத்தையும் கண்டு சென்றதாகக் கூறுவதில் இருந்து தெரிகிறது. போருக்குப் புறப்படும் நாள் நல்ல நாளாக அமையாவிட்டால், அதற்கு முன் நல்ல முகூர்த்தத்தில் தனது கொடையையும், வாளையும், முரசையும் அரண்

மனையினின்றும் பெயர்த்து நகரின் புறத்தில் வைத்து விடுதல் அக்காலத்திய அரசர் செய்துவந்த பழக்கமென்று செங்குட்டுவன் செய்கையில் இருந்து வெளிப்படுகிறது. காலக்கணிதன் அரசன் வெற்றி தோல்விக்கு உரியகாலத்தைக் கண்டறிந்து கூறும் சமர்த்தன் ஆதலால் அவன் செங்குட்டுவன் அரசியலில் உயர்ந்த பதவியில் இருந்தான் என்றும், அரசன் அவனிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தான் என்றும் தெரிகிறது.

செங்குட்டுவன் அரசியலில் ஒற்றர்கள் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். பகை நாடுகளிலும் பிற நாடுகளிலும் நடக்கின்ற அரசாங்க காரியங்களையும் பிறவற்றையும் நன்றாய் அறிந்து, தம் அரசனிடம் அவர்கள் கூறுவது வழக்கமாயிருந்தது. அத்தகைய ஒற்றர்கள் அக்காலத்திய அரசர்கள் எல்லோரிடமும் இருந்தனர். அவ் வொற்றர்கள் ஒவ்வொரு அரசனது தலைமைப் பட்டினத்திலும் இருந்தார்கள் என்று தெரிகிறது. எவ்வாறெனின், செங்குட்டுவன் வடநாட்டியாத்திரை செய்யப்போவதாகப் பிற அரசர்க்குத் திருமுகம் அனுப்பச் சொன்னபோது, வில்லவன் கோதை என்னும் மந்திரி, வஞ்சிமா நகரில் பிறநாட்டு ஒற்றர்கள் வதிவதாகவும், நகரில் பறையறைவித்தால் அவ் வொற்றர்கள் அரசன் புறப்படும் செய்தியை தத்தம் அரசர்க்கு அறிவிப்பார்கள் என்றும் கூறியதாக முன்னர்ப் படித்தீர்கள் அல்லவா? அவ்வாறே, நாட்டில் பறையறைவித்ததும், ஒற்றர், தத்தம் அரசனிடம் சென்று சேரனின் யாத்



திரையைப் பற்றிக் கூறினர். அதனால் அன்றோ பல அரசர்கள் சேரர் பெருமான் யாத்திரை செய்யும்போது அவனைக் கண்டனர்; பாண்டியன் திறைப்பொருளை யனுப்பினன்; நூற்றுவர் கன்னர் தூதனுப்பினர். இவற்றால், அக்காலத்திய ஒற்றர் தங்களுக்கிட்ட வேலையைச் செவ்வனே செய்து வந்தனர் என்று தெரிகிறது. சேரமன்னனும் ஒற்றரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தான்.

சேனைவீரர் தன்னிடம் கொண்டிருந்த அன்பிற்கு ஏற்ப, சேரனும் அவர்களிடம் அன்புகொண்டு அவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் தானும் கலந்து கொண்டிருந்தான் என்பது, அவன் வடநாட்டுப் போரில் வெற்றிபெற்றதும், தனது வீரர்களுக்குப் பொன் தோடாக்கள் பரிசளித்தனன் என்பதில் இருந்தும், இறந்தவர்களுக்காக இறைவனைத் தொழுதனன் என்பதில் இருந்தும் அறியப்படும்.

சேரர் பெருமான் கொலுவீற்றிருக்கையில், அறிவிலும், அழகிலும் சிறந்த அவன் மனைவி இளங்கோ வேண்மாளும் உடனிருப்பது வழக்கம் என்று தெரிகிறது. அரசன் அவ்வப்போது அரசியின் ஆலோசனையைக் கேட்கும் வழக்கமுடையவன் என்பது, வீரபத்தினியின் சரித்திரம் சாத்தனார் உரைத்ததும் அரசன் மனைவியை நோக்கி,

“உயிருடன் வந்த ஒருமகள் தன்னிலும்,
செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னிலும்,
நன்னுதல்! வியக்கும் நலத்தோர் யார்?”

என்று வினவினன் என்பதில் இருந்து தெரிகிறது. அரசியின் ஆலோசனை சிறந்ததாயிருப்பின், அதனைச் செவி சாய்த்துக் கேட்டு அதன்படி நடக்கும் இயல்பு வாய்ந்தவன் சேரமன்னன் என்பது,

“காதலன் துயரம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானத்து
அத்திறம் நிற்கநம் அகல்நா டடைந்த
இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்”

என்று இளங்கோ வேண்மாள் கூறியபடி, பத்தினிக் கடவுளைப் பூசித்த செய்கையில் இருந்து தெரிகிறது. அறிவிற் சிறந்த சில மன்னர்கள் அவ்வக் காலங்களில் தம் ஆருயிர் மனைவியரின் அமுத மொழிகளைக்கேட்டு அவற்றின்படி நடப்பது வழக்கமாக இருந்தது.

செங்குட்டுவன் காலத்தில் கொண்டாடப்பட்ட விழாக்களில் மிகச் சிறந்ததானது அவன் பிறந்தநாள் கொண்டாட்டமேயாம். அந்நாள் பெரு நாள் என்று வழங்கப் பெறும். அந்நாள் வந்து விட்டால், அம்மாநாட்டு மக்கள் மிக்க மகிழ் வடைவார்கள் என்பது செங்குட்டுவன் சரிதையால் விளங்குகிறது. அன்று, சிறையாளர்களை விடுவித்தல், நகரை யலங்கரித்தல், யாவர்க்கும் பெரு விருந்து நடத்தல், மக்கள் மகிழ்ச்சியோ டிருத்தல் முதலியன கொண்டாடப் பட்டன.

அரசன் போருக்குப் புறப்படுமுன் தன் உத்தியோகஸ்தருக்குச் சோறு போடுதல் வழக்கம். இதனைச் செங்குட்டுவன் செய்து வந்தான். சிறந்த பெரி



யோர்கள் வந்து அறவுரை நிகழ்த்தினால், சேரன் தன் நிறை கொண்ட பொன்னை அவர்களுக்குக் கொடுப்பது வழக்கம்.

சேரர் பெருமானது நாட்டில் பல திறப்பட்ட தெய்வங்களின் ஆலயங்கள் இருந்தன. அவற்றில் இடையறாது பூசைகள் நிறைவேறிக்கொண்டிருந்தன. சேரர் பெருமான் சைவ மதத்தினனாகவே இருந்தும் அவன் காலத்தில் சமணசமயமும், புத்தசமயமும், வைணவ சமயமும், சைவசமயமும்தழைத்தோங்கின. தன் குடிகள் தங்கள் தங்கள் வழக்கப்படி, பிரியமான தெய்வங்களை வழிபடலாம் என்பது அவனது கருத்து. எம்மதமும் சமமதமே என்ற கொள்கை அவனுக்கு உண்டு. அவனது ஆட்சிக் காலத்தில் வஞ்சிமாநகரில் எல்லாமதத்தினரும் தம்முள் ஒன்றுபட்டு ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தனர். ஆலய வழிபாட்டில் அரசன் அதிகப் பற்றுடையவன்; அந்தணர்களையும் அறவோர்களையும், துறவிகளையும், புலவர்களையும் பெரிதும் போற்றி ஆதரித்து வந்தான். அவனது அன்பிற்கு உரியவர்களான புலவர்கள் இருவர் இருந்தனர். அவர்கள் பரணர், சாத்தனார் என்பனர்கள். சாத்தனார் மணிமேகலை என்ற உயரிய நூலை இயற்றியவர். பரணர் கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். பைந்தமிழைப் பாங்குறப்படித்தவர். இப்புலவர் பெருமான் பதிற்றுப்பத்து என்னும் சங்கநூலில் செங்குட்டுவனின் வீரச்செயல்களையும் வள்ளற்றன்மையையும் விரித்துப் புகழ்ந்துள்ளார். அதனால் செங்குட்டுவன் மகிழ்ந்து, இப் புல

வருக்கு நன்கொடை யளித்துத் தன் புதல்வனை குட்டுவஞ்சேரல் என்பவனையும் கல்விகற்க அவரிடமே விட்டனன்.

கண்ணை இமைகள் காப்பது போன்று, தன் குடிகளை இச் சேரர் பெருமான் காத்து வந்தனன். இவன் அரசாண்ட சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளில் குடிகள் துன்பத்தை யறியாது இன்பத்தையே நுகர்ந்தனர். இவன் பக்தியிற் சிறந்தவன் என்பது. வீரபத்தினிக்கு ஆலயம் எடுத்து விழாவியற்றியதில் இருந்து அறியலாகும். வடநாட்டு யாத்திரைக்கு புறப்பட்டபோது திரிபுரம் எரித்த விரிசடைப் பெம்மானைத் தொழுது அவரது இணையடித்தாளினைத்தம் முடிமீது வைத்தனன் என்பதில் இருந்து அவன் பக்தி எத்துணைச் சிறந்தது என்பது தெள்ளிதில் விளங்கும். வீரம், அருள், அன்பு, பக்தி, புலமை, அறிவு, பொறுமை, அறவுரை கேட்டல் ஆகிய நற்குணங்களோடு விளங்கியவன் சேரன்செங்குட்டுவன்.

இங்ஙனம், தமிழகம் புகழ—எந்நாட்டாரும் போற்றப் பெருவாழ்வு வாழ்ந்த சேரர் பெருந்தகை, தனது ஐம்பத்தைந்து அல்லது ஐம்பத்தாறுவது ஆண்டில் எண்ணுதற்கும் அரிய கண்ணுதற் பெரு[illegible] நீழலைச் சேர்ந்தான்.

தாய்மொ[illegible]ங்க! தாய்நாடு சிறக்க!!

---

Kesari Printing Works, Madras.

67905

44354